திருச்சிராப்பள்ளி மாவட்டம்

மருந்து கட்டுப்பாடு துறை

தொலைநோக்குத் திட்டங்கள்

VISION TRICHY

மருந்து கட்டுப்பாடு துறை

அடிப்படை விவரங்கள்

சரகங்கள் : 5 (ஸ்ரீரங்கம், துறையூர், மணப்பாறை, முசிறி மற்றும் திருவெறும்பூர்)

வ. எண்	நிறுவனங்களின் வகைகள்	எண்ணிக்கை
1.	சில்லரை விற்பனை மருந்து கடைகள்	938
2.	மொத்த விற்பனை மருந்து கடைகள்	277
3.	ஹோமியோபதி மருந்து கடைகள்	14
4.	இரத்த சேமிப்பு நிலையம் (அரசு)	17
5.	இரத்த சேமிப்பு நிலையம் (தனியார்)	16
6.	இரத்த வங்கி (அரசு)	4
7.	இரத்த வங்கி (தனியார்)	9
8.	மருந்துகள் தயாரிக்கும் நிறுவனம் (தனியார்)	12
9.	அழகு சாதன பொருட்கள் தயாரிக்கும் நிறுவனம் (அரசு)	1
10.	ஆர். எம். ஐ நிறுவனம்	7

துறை சார் திட்டங்கள்

- மருந்து மற்றும் அழகு சாதன சட்டத்திற்கு உட்பட்ட மருந்து தயாரிப்பு, அழகு சாதனம் மற்றும் மருத்துவ உபகரணம் ஆகிய நிறுவனங்களின் தயாரிப்பு மற்றும் விற்பனையை உறுதி செய்தல் முறைபடுத்துதல்.
- மருந்து மாதிரிகள்/ அழகு சாதன பொருட்கள் ஆய்வுக்கு உட்படுத்துதல்
- தரமற்ற மருந்து / அழகு சாதன பொருட்கள் மாதிரிகளை கண்டறிதல்
- மக்களுக்கு தேவையான தரமான மருந்துகள் உரிய விலையில் தடையின்றி கிடைக்க நடவடிக்கை எடுத்தல்
- போலி மருத்துவர் மற்றும் போதை பொருள் ஒழிப்பு தொடர்பாக ஏனைய துறையுடன் இணைந்து கூட்டாய்வு மேற்கொள்ளுதல்
- சில்லரை வியாபாரம் மருந்து உரிமம் வழங்குதல்.
- மொத்த வியாபாரம் மருந்து உரிமம் வழங்குதல்.
- தரமற்ற மருந்துகள் மற்றும் அழகு சாதன பொருட்கள் உற்பத்தியை/விற்பனையை தடை செய்தல்
- அரசு மற்றும் தனியார் இரத்த வங்கி உரிமம் வழங்க கோரிய விண்ணப்பம் மீது மத்திய அரசு மருந்துகள் ஆய்வாளருடன் கூட்டாய்வு செய்து, உரிமம் வழங்க மருந்து கட்டுப்பாடு இயக்குநரகத்திற்கு பரிந்துரைத்தல்
- அரசு மற்றும் தனியார் இரத்த சேமிப்பு நிலையம் சான்றிதழ் வழங்க ஆய்வு செய்து இயக்குநரகத்திற்கு பரிந்துரைத்தல்
- மருந்துகள் /அழகு சாதன பொருட்கள்/ மருத்துவ உபகரணங்கள் உற்பத்தி செய்ய கோரிய விண்ணப்பம் மீது மத்திய அரசு மருந்துகள் ஆய்வாளருடன் கூட்டாய்வு செய்து, உரிமம் வழங்க மருந்து கட்டுப்பாடு இயக்குநரகத்திற்கு பரிந்துரைத்தல்
- மருந்து மற்றும் அழகு சாதன சட்டம் 1940 மற்றும் விதிகள் 1945ன் படி குற்றங்களை கண்டறிதல் மற்றும் நீதிமன்ற வழக்கு தொடுத்தல்.
- புற்று நோய் சிகிச்சை அளிக்கும் மருத்துவ மணைகளுக்கு RMI (RECOGNIZED MEDICAL INSTITUTION) சான்றிதழ் வழங்க ஆய்வு செய்து மருந்து கட்டுப்பாடு இயக்குநரகத்திற்கு பரிந்துரைத்தல்
- மருந்து தயாரிக்கும் நிறுவனம் மற்றும் மருந்து விற்பனை செய்யும் நிறுவனம் மீது வரும் புகார் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் / புகார் நிரூபிக்கப்பட்டால் அதன் மீது துறை சார்ந்த நடவடிக்கை எடுத்தல் அல்லது நீதிமன்ற வழக்கு தொடுத்தல்.



மனித வளம்

பதவி	ஒப்பளிக்கப்பட்ட பணியிடம்	பணியில் உள்ளோர்	காலிப் பணியிடம்
மருந்து கட்டுப்பாடு உதவி இயக்குநர்	2	1	1
மருந்துகள் ஆய்வாளர்	8	8	0
அலுவலக கண்காணிப்பாளர்	1	1	0
உதவியாளர்	2	2	0
இளநிலை உதவியாளர்	3	3	0
தட்டச்சர்	1	1	0
அலுவலக உதவியாளர்	4	2	2
மொத்தம்	21	18	3







தொலைநோக்குத் திட்டங்கள்

தடையில்லாத, முறையான, சட்டத்திற்குட்பட்ட மருந்து விநியோகத்தை உறுதி செய்து மக்களுக்கு எல்லா நேரங்களிலும் எல்லா வகையான மருந்துகளும் தரத்துடனும் மற்றும் உரிய விலையில் கிடைத்திட செய்தல்.

மருந்து விற்பனை சந்தையில் போலி மருந்துகள் மற்றும் தரமற்ற மருந்துகளின் ஊடுறுவலை தடுத்தல், தரமான மருந்துகள் மட்டுமே பயன்பாட்டில் இருக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

VISION TRICHY

மருந்து கட்டுப்பாடு துறை

உட்கட்டமைப்பு ஏற்படுத்துதல்

- திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள இரு மருந்து கட்டுப்பாடு உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கு சொந்த கட்டிடம் உருவாக்குதல்
- மருந்து கட்டுப்பாடு உதவி இயக்குநர்களுக்கு வாகனம் ஒதுக்கீடு செய்தல்
- மருந்து கட்டுப்பாடு உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணியாற்றும் அனைத்து மருந்துகள் ஆய்வாளர்களுக்கும் வாகனம் ஒதுக்கீடு செய்தல்























திருச்சிராப்பள்ளி மாவட்டம்

சத்துணவு திட்டம், சமூகநலன் & மகளிர் உரிமைத்துறை, மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள்

தொலைநோக்குத் திட்டங்கள்

அடிப்படை விவரங்கள்

சத்துணவு திட்டம்

வ. எண்	விவரம்	மையங்களின் எண்ணிக்கை	உணவு உண்ணும் மாணவர்களின் எண்ணிக்கை
அரசுப்பள்ளிகள்			
1.	துவக்கப்பள்ளிகள் 1-5 வகுப்பு	789	68577
2.	நடுநிலைப்பள்ளிகள் 6-8 வகுப்பு	253	40881
3.	உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் 9-10 வகுப்பு	168	17503
மான்ய பள்ளிகள்			
4.	துவக்கப்பள்ளிகள் 1-5 வகுப்பு	175	23575
5.	நடுநிலைப்பள்ளிகள் 6-8 வகுப்பு	98	17624
6.	உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் 9-10 வகுப்பு	86	7206
	மொத்தம்	1569	1,75,366

சமூகநலன் & மகளிர் உரிமைத்துறை

வட்டாரங்கள்	14
கோட்டம்	4
முதியோர் இல்லங்கள்	
ஒருங்கிணைந்த வளாகம் மத்திய அரசு மானியம்	6
ஒருங்கிணைந்த வளாகம் மாநில அரசு மானியம்	2
மாநில அரசு மானியம்	1
கட்டண இல்லங்கள்	10
இலவச இல்லங்கள்	15
தொழிற் கூட்டுறவு சங்கங்கள்	
மாவட்ட துணி வெட்டும் மையம்	1
திருச்சி மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கம்	1
காவேரி மகளிர் தையற் கூட்டுறவு சங்கம்	1
திருச்சி மகளிர் எழுதுபொருள் கூட்டுறவு சங்கம்	1
அரசு பணிபுரியும் மகளிர் விடுதி	2
ஒருங்கிணைந்த சேவை மையம்	1

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள்

மொத்த வட்டாரங்கள்	14+2
மொத்த அங்கன்வாடி மையங்கள்	1850
அரசு கட்டிடம்	1626
தனியார் மற்றும் கட்டிடம்	224
குடிநீர் வசதி உள்ளவை	1109
கழிவறை வசதி உள்ளவை	1656
மொத்தம் கர்ப்பிணிகள்	15797
மொத்தம் பாலூட்டும் தாய்மார்கள்	13438
இணை உணவு பெறும் குழந்தைகள்	103974
மதிய உணவு மற்றும் முன்பருவகல்வி பெறும் குழந்தைகள்	43767
குள்ளத்தன்மை உடைய குழந்தைகள்	3260
எடை குறைவு உடைய குழந்தைகள்	9019
மெலிவுத்தன்மையுடைய குழந்தைகள்	4056



மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு

குழந்தைகளின் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்புகள் :

வ. எண்	அமைப்புகளின் பெயர்	எண்ணிக்கை
1	மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு	1
2	குழந்தை நலக்குழு	1
3	இளைஞர் நீதிக்குழுமம்	1
4	சிறப்பு சிறார் காவல் அலகு	2
5	சைல்டு லைன் - 1098	1

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015 - ன் கீழ் பதிவு பெற்ற குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் :

வ. எண்	நிறுவனங்களின் விபரம்	எண்ணிக்கை
1	அரசு குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள்	3
2	அரசு மானியம் பெறும் குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள்	6
3	சுயநிதியின் மூலம் செயல்படும் குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள்	13

குழந்தைகளின் உரிமைகளை பாதுகாக்கும் குழுக்கள் :

வ. எண்	குழுக்களின் பெயர்	எண்ணிக்கை
1	மாவட்ட அளவிலான குழந்தை பாதுகாப்பு குழு	1
2	மண்டல அளவிலான குழந்தை பாதுகாப்பு குழு	4
3	பேரூராட்சி அளவிலான குழந்தை பாதுகாப்பு குழு	14
4	நகராட்சி அளவிலான குழந்தை பாதுகாப்பு குழு	5
5	ஒன்றிய அளவிலான குழந்தை பாதுகாப்பு குழு	14
6	கிராம அளவிலான குழந்தை பாதுகாப்பு குழு	404







சத்துணவு திட்டம்

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் 1569 சத்துணவு மையங்களில் 175366 மாணவ மாணவியர்களுக்கு 13 வகையான சத்தான கலவை சாதங்கள், வாரம் 5 முட்டை மற்றும் கொண்டைக்கடலை, பாசிப்பயறு, உருளைக்கிழங்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும் முட்டை சாப்பிடாத 3 பள்ளிகளுக்கு வாழைப்பழம் வழங்கப்பட்டு வருகிறது.

சமூகநலன் & மகளிர் உரிமைத்துறை

1. மூவாலூர் இராமாமிர்தம் நினைவு உயர்கல்வி உறுதி திட்டம்
2. ஈ.வே.ரா. மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண நிதியுதவி திட்டம்
3. அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவி திட்டம்
4. டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு கலப்பு திருமண நிதியுதவி திட்டம்
5. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவி திட்டம்
6. முதலமைச்சர் இரண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம்
7. இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்
8. திருநங்கைகள் நலன்
9. குடும்ப வன்முறைச் தடுப்பு சட்டம்
10. வரதட்சணைத் தடைச் சட்டம் 1961
11. பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் நலச்சட்டம் 2007
12. குழந்தை திருமணம் தடுப்பு சட்டம்
13. தனியார் பணிபுரியும் மகளிர் விடுதிகள்
14. முதியோர் இல்லங்கள்
15. பள்ளிகளுக்கு சீருடை தைத்து வழங்கும் திட்டம்
16. ஒருங்கிணைந்த சேவை மையம்



துறை சார் திட்டங்கள்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள்

- அங்கன்வாடி பணிகள் திட்டம்
- வளர் இளம் பெண்கள் திட்டம்
- பிரதம மந்திரி மாத்ரு வந்தன யோஜனா
- தேசிய குழந்தைகள் காப்பகம்
- ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்பு திட்டம்
- தேசிய ஊட்டச்சத்து குழுமம்



மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு

1. **நிதி ஆதரவு திட்டம்** (SPONSORSHIP) : - இரண்டு பெற்றோரையும் இழந்த குழந்தைகள், பெற்றோரில் ஒருவரை இழந்த குழந்தைகள், தீர்க்க முடியாத தொற்று நோய்களுக்கு உள்ளானவர்களின் குழந்தைகள் மற்றும் சிறைவாசிகளின் குழந்தைகளுக்கு ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டம் மற்றும் மாண்புமிகு தமிழக முதல்வரின் சிறப்பு நிதி ஆதரவு திட்டத்தின் கீழ் மாதம் ரூ.4,000/- வீதம் 3 ஆண்டுகள் அல்லது 18 வயது நிறைவடையும் வரை நிதி ஆதரவு வழங்குதல்.
2. **தற்காலிக வளர்ப்பு பராமரிப்பு திட்டம்** (FOSTER CARE) : குழந்தை பாரமரிப்பு நிறுவனங்களில் ஆதரவற்ற நிலையில் உள்ள குழந்தைகளுக்கு குடும்ப சூழ்நிலையை உருவாக்கும் விதமாக தகுதியான தற்காலிக வளர்ப்பு பெற்றோரை அடையாளம் கண்டு குடும்ப சூழ்நிலையை உருவாக்குதல்.
3. **பிற்காப்பு திட்டம்** (AFTER CARE) : குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கு 18 வயது நிறைவடையும் பொழுது, மீண்டும் குடும்ப சூழ்நிலையில் இணைக்க இயலாத நிலையில் அக்குழந்தைகளின் கல்வி நலன் கருதி 21 வயது நிறைவடையும் வரையில் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் தங்கி கல்வியைத் தொடர ஏதுவாக மாதம் ரூ.4,000/- வீதம் நிதியுதவி வழங்குதல்.
4. **கோவிட் 19 - மாண்புமிகு தமிழக முதல்வரின் பொது நிவாரண நிதி** (COVID 19-CHIEF MINISTER PUBLIC RELIEF FUND)
   - கோவிட் - 19 பெருந்தொற்று காரணமாக இரண்டு பெற்றோரையும் இழந்த குழந்தைகளுக்கு தலா ரூ.5,00,000/- நிவாரண நிதி பெற்று வழங்கி, அக்குழந்தைகளின் கல்வி மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்தல்.
   - கோவிட் - 19 பெருந்தொற்று காரணமாக ஒரு பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு தலா ரூ.3,00,000/- நிவாரண நிதி பெற்று வழங்கி, அக்குழந்தைகளின் கல்வி மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்தல்.
   - கோவிட் - 19 பெருந்தொற்று காரணமாக இரண்டு பெற்றோரையும் இழந்த குழந்தைகளுக்கு பராமரிப்பு செலவினமாக (MAINTENANCE GRANT) மாதம் ரூ.3,000/- வீதம் 18 வயது நிறைவடையும் வரை பெற்று வழங்குதல்.
5. **பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம்** 2012 (POCSO ACT) : பாலியல் ரீதியாக பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு நீதிமன்றத்தால் உத்தரவிடப்படும் இழப்பீட்டுத் தொகையினை பெற்று வழங்குதல்.
6. **குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள்** (CHILD CARE INSTITUTIONS): குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கு திறன் வளர்ப்பு பயிற்சிகள் (Skill Training) வழங்குதல்.
7. **திறன் வளர்ப்பு பயிற்சி** (CAPACITY BUILDING TRAINING): குழந்தைகள் நலன் சார்ந்த துறைகளில் பணிபுரியும் அரசு /அரசு சாரா பங்குதாரர்களுக்கு (Stakeholders) குழந்தைகள் பாதுகாப்பு குறித்த திறன் வளர்ப்பு பயிற்சிகள் நடத்துதல்.
8. **விழிப்புணர்வு நிகழ்ச்சி** (AWARENESS PROGRAMME): குழந்தைகளின் உரிமைகள், பாதுகாப்பு மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் குறித்து பொதுமக்கள் மற்றும் குழந்தைகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
9. **தத்து வழங்குதல்** (ADOPTION) : பெற்றோரால் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகள் (Surrender Children), கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்படும் குழந்தைகள் (Abandoned Children) மற்றும் தொட்டில் குழந்தை திட்டத்தின் (Cradle BabyScheme) மூலம் மீட்கப்படும் குழந்தைகளுக்கு குடும்ப சூழல் ஏற்படுத்துதல் தொடர்பான இணை பணிகள் மேற்கொள்ளுதல்.

மனித வளம்

சத்துணவு திட்டம்

அ. மனிதவளம் - தலைமை அலுவலகம்

வ. எண்	பதவி	அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள்	பணிபுரிபவர்கள் எண்ணிக்கை	காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை
1.	மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு)	1	1	0
2.	உதவி கணக்கு அலுவலர்	1	1	0
3.	உதவியாளர்	2	2	0
4.	இளநிலை உதவியாளர்	1	1	0
5.	தட்டச்சர்	1	0	1
6.	ஈப்பு ஓட்டுநர்	1	1	0
7.	அலுவலக உதவியாளர்	1	1	0

ஆ. மனிதவளம் - சத்துணவு பணியாளர்கள்

வ. எண்	பதவி	அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள்	பணிபுரிபவர்கள் எண்ணிக்கை	காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை
1.	அமைப்பாளர்	1568	1040	528
2.	சமையலர்	1573	1295	278
3.	சமையல் உதவியாளர்	1574	901	673

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள்

	பதவியின் பெயர்	ஒப்பளிப்பு	நிரப்பப்பட்டது	காலியிடம்
அலுவலர்	மாவட்ட திட்ட அலுவலர்	1	1	0
	குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்	16	13	3
அலுவலக பணியாளர்	புள்ளியியல் ஆய்வாளர்	1	1	0
	கண்காணிப்பாளர்	17	17	0
	உதவியாளர்	2	0	2
	இளநிலை உதவியாளர்	17	17	0
	தட்டச்சர்	1	0	1
	அலுவலக உதவியாளர்	17	16	1
	ஓட்டுநர்	1	1	0
களப்பணியாளர்	மாவட்ட ஒருங்கிணைப்பாளர் (ம) மாவட்ட திட்ட உதவியாளர்	2	2	0
	வட்டார ஒருங்கிணைப்பாளர் (ம) வட்டார திட்ட உதவியாளர்	32	28	4
	அங்கன்வாடி பணியாளர்	1666	1407	259
	குறு அங்கன்வாடி பணியாளர்	184	178	6
	அங்கன்வாடி உதவியாளர்	1666	1420	246

சமூகநலன் & மகளிர் உரிமைத்துறை

மாவட்ட சமூகநல அலுவலக மற்றும் களப்பணியாளர்கள் விவரம்

	பதவியின் பெயர்	ஒப்பளிப்பு	நிரப்பப்பட்டது	காலியிடம்
அலுவலர்	மாவட்ட சமூக நல அலுவலர்	1	1	0
அலுவலக பணியாளர்கள்	கண்காணிப்பாளர்	1	1	0
	உதவியாளர்	2	1	1
	இளநிலை உதவியாளர்	1	1	0
	வழிகாட்டி செயல் அலுவலர்	1	0	1
	பதிவறை எழுத்தர்	1	0	1
	அலுவலக உதவியாளர்	1	0	1
	பாதுகாவலர்	1	0	1
	ஒட்டுநர்	1	0	1
தொழிற் கூட்டுறவு சங்கம்	தொழிற் கூட்டுறவு அலுவலர்	2	2	2
	தொழிற் கூட்டுறவு மேற்பார்வையாளார்	2	0	2
குடும்ப மற்றும் வரதட்சணை தடுப்பு	பாதுகாப்பு அலுவலர்	1	1	0
	இளநிலை உதவியாளர் / தட்டச்சர்	1	1	0
அரசு பணிபுரியும் மகளிர் விடுதி	கண்காணிப்பாளர்	1	0	1
	சமையலர்	2	2	0
	உதவி சமையலர்	1	1	0
	அலுவலக உதவியாளர்	1	0	1
	பாதுகாவலர்	1	0	1
வட்டார அளவிலான பணியாளர்கள்				
	பதவியின் பெயர்	ஒப்பளிப்பு	நிரப்பப்பட்டது	காலியிடம்
களப்பணியாளர்கள்	சமூகநல விரிவாக்க அலுவலர் (வட்டாரத்திற்கு ஒருவர்)	14	10	4
	மகளிர் ஊர்நல அலுவலர் (வட்டாரத்திற்கு இருவர்)	28	26	2
ஒருங்கிணைந்த சேவை மையம்				
	பதவியின் பெயர்	ஒப்பளிப்பு	நிரப்பப்பட்டது	காலியிடம்
ஒருங்கிணைந்த சேவை மையம்	மைய ஒருங்கிணைப்பாளர்	1	1	0
	முதன்மை ஆலோசகர்	1	1	0
	தகவல் தொழில் நுட்ப பணியாளர்	1	1	0
	வழக்கு பணியாளர்	6	6	0
	பல்நோக்கு உதவியாளர்	2	2	0
	பாதுகாப்பு காவலர்	2	2	0





மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு

திருச்சிராப்பள்ளி மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகானது ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டத்தின் (மிஷன் வத்சல்யா) கீழ் 12 பணியாளர்களை கொண்டு செயல்பட்டு வருகிறது

வ. எண்	பணியாளர் விவரம்	ஒப்பளிப்பு	நிரப்பப்பட்டது	காலிப்பணியிடம்
1	மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர்	1	1	-
2	பாதுகாப்பு அலுவலர் (நிறுவனம் சார்ந்தது)	1	1	-
3	பாதுகாப்பு அலுவலர் (நிறுவனம் சாராதது)	1	1	-
4	சட்டம் சார்ந்த நன்னடத்தை அலுவலர்	1	1	-
5	ஆற்றுப்படுத்துநர்	1	1	-
6	சமூகப்பணியாளர்	2	2	-
7	கணக்காளர்	1	1	-
8	தகவல் பகுப்பாளர்	1	-	1
9	உதவியாளர் உடன் கலந்த கணினி இயக்குபவர்	1	1	-
10	புறத்தொடர்பு பணியாளர்	2	2	-





அறிவிப்புகள்

சத்துணவு திட்டம்

I. 2022-2023 - முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம்.
திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட 40 சத்துணவு மையங்களில் 2928 மாணவ மாணவியர்களுக்கும் மற்றும் துறையூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 41 சத்துணவு மையங்களில் 2705 மாணவ மாணவியர்களுக்கும் ஆகமொத்தம் 81 சத்துணவு மையங்களில் 5633 மாணவ மாணவியர்களுக்கு பல்வேறு விதமான காலை சிற்றுண்டிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

சமூகநலன் & மகளிர் உரிமைத்துறை

2022-2023 மானிய கோரிக்கை அறிவிப்பு :

1. வன்முறையால் பாதிக்கப்படும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு உறுதுணையான சேவைகள் அனைத்தையும் ஒரிடத்தில் வழங்கிட பத்து மாநகராட்சிகளில் 11.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த சேவை மையங்கள் அமைக்கப்படும்.
2. திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு 1.10 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த சேவை மையம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக மணப்பாறை அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனையில் கூடுதல் ஒருங்கிணைந்த சேவை மையம் அமைக்கப்படும் என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது.



சமூகநலன் & மகளிர் உரிமைத்துறை

வன்முறைகளால் பாதிக்கப்படும் திருநங்கைகளுக்கு பாதுகாப்பு இல்லம்

திருநங்கைகளின் சீரிய வாழ்விற்கு வழிகாட்டு ஆலோசனை மையம்

குடும்ப வன்முறை தடுக்க மற்றும் வரதட்சணை கொடுமை ஒழிக்க திருமணத்திற்கு முந்தைய மனநல ஆலோசனை மையம்.

ஒருங்கிணைந்த சேவை மைய பணியாளர்கள் மற்றும் களப் பணியாளர்களுக்கு வாக்கி டாக்கி

தொலைநோக்குத் திட்டங்கள்

சத்துணவு திட்டம்

திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டத்தில் 75 சத்துணவு மையங்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் (RO Water) அமைத்தல்.

திருவெறும்பூர் வட்டத்தில் 113 சத்துணவு மையங்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் (RO Water) அமைத்தல்.

திருவெறும்பூர் வட்டத்தில் பாரதிதாசன் தெருவில் உள்ள துவாக்குடி மலை (வடக்கு), ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி சத்துணவு மையத்தை பழுது பார்த்தல். துவாக்குடி ராவுத்தான் மேடு, அரசு மேல்நிலைப்பள்ளியில் புதிதாக சத்துணவு மையம் அமைத்தல். துவாக்குடி ராவுத்தான் மேடு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிக்கு புதிதாக சத்துணவு மையம் அமைத்தல்.

திருவெறும்பூர் வட்டத்தில் கூத்தப்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் புதிதாக சத்துணவு மையம் அமைத்தல் மற்றும் கணேசா அருகில் உள்ள பகுதிகளில் சத்துணவு மையத்தை பழுது நீக்கம் செய்தல்.

திருவெறும்பூர் வட்டத்தில் பாரதிபுரம் பரிமணம் மான்ய துவக்கப்பள்ளியில் சத்துணவு மைய கட்டிடத்தை விரிவுப்படுத்துதல்.

திருவெறும்பூர் வட்டத்தில் மேலக்கல்கண்டார்கோட்டை வள்ளுவர் நகரில் உள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி மற்றும் அரசு உயர்நிலைப்பள்ளிகளில் புதிதாக சத்துணவு மையங்கள் அமைத்தல்.



மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு

- பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைக்காக குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கு குடும்ப சூழல் ஏற்படுத்தி தருதல்.
- குழந்தை திருமணம் நடைபெறா வண்ணம் தடுத்து நிறுத்துதல்.
- குழந்தைகள் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்படுவதை தடுத்து நிறுத்துதல்.
- குழந்தை தொழிலாளர் முறையினை ஒழித்தல்.
- குழந்தைகள் போதை பொருட்களுக்கு அடிமையாவதை தடுத்தல்.
- வயது முதிரா தாய்மார்கள் உருவாகுவதை தடுத்தல்.
- பள்ளிக்குழந்தைகளின் கல்வி இடைநிற்றலை தடுத்தல்.
- 18 வயது கீழ் உள்ள மூன்றாம் பாலின குழந்தைகளின் மறுவாழ்வு நலன் கருதி அவர்களுக்கான தனி குழந்தை பராமரிப்பு நிறுவனம் அமைத்தல்.
- கோவிட்-19 பெருந்தொற்றினால் பெற்றோரை இழந்த குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கையினை புனர் அமைத்தல்.
- குழந்தைகளை தற்கொலை முயற்சியிலிருந்து தடுத்து மீட்டெடுத்தல்.
- குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் தங்கியுள்ள குழந்தைகளுக்கு தற்காப்பு கலைகளை பயிற்றுவித்தல்.
- திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை குழந்தைநேய மாவட்டமாக மாற்றுதல்.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள்

- துறையூர் வட்டாரத்தில் வீட்டு வசதி வாரிய குடியிருப்பு, பெத்துபட்டி, சேனப்பநல்லூர், புதூர் ஆகிய இடங்களில் பதிய அங்கன்வாடி மையம் ஏற்படுத்தி தர வேண்டும்.
- முசிறி வட்டாரத்தில் தாத்தையங்கார்பேட்டை பேரூராட்சி செவந்தாம்பட்டியில் அங்கன்வாடி மையம் அமைத்தல்.
- திருவெறும்பூர் வட்டாரத்தில் மேலகல்கண்டார்கோட்டை, கணபதி நகர் பகுதியில் அங்கன்வாடி மையம் அமைத்து தர நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
- திருவெறும்பூர் வட்டாரத்தில் கூத்தைப்பார் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்-7, வார்டு எண்-4 ஆகியவற்றில் புதிய அங்கன்வாடி கட்டடம் அமைத்தல் மற்றும் வார்டு-9 பாரதிபுரம் 1-வது தெருவில் உள்ள அங்கன்வாடி கட்டிடத்தில் கூடுதல் கட்டடம் அமைத்தல்
- குழந்தைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அந்தந்த குக்கிராமங்களில் புதியதாக அங்கன்வாடி மையம் உருவாக்கி தருதல்.
- பழுதடைந்துள்ள அங்கன்வாடி கட்டிடங்களை பழுது நீக்கம் செய்து தர கோருதல்.
- துவாக்குடி நகராட்சியில் உள்ள மொத்தம் 8 அங்கன்வாடி மையங்களில் பழுதடைந்துள்ள கட்டிடங்களை புதிதாக கட்டுதல்

VISION TRICHY

சத்துணவு திட்டம், சமூகநலன் & மகளிர் உரிமைத்துறை, மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள்

உட்கட்டமைப்பு ஏற்படுத்துதல்

சத்துணவு திட்டம்

1. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 166 புதிய வைப்பறையுடன் கூடிய சமையலறை கட்டிடம் கட்ட கருத்துரு சென்னை சமூக நல இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டதில் 2020-21 ஆம் ஆண்டிற்கு 93 புதிய வைப்பறையுடன் கூடிய சமையலறை கட்டிடம் கட்ட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 73 பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.
2. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 1569 சத்துணவு மையங்களில் 31 சத்துணவு மையங்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் (RO Water) அமைக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 1538 சத்துணவு மையங்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் அமைக்கப்பட வேண்டும்.

சமூகநலன் & மகளிர் உரிமைத்துறை

1. மாவட்ட சமூக நல அலுவலகக் கட்டடம்
   - மாவட்ட சமூக நல அலுவலகக் கட்டிடம் மிகவும் பழுந்தடைந்த நிலையில் உள்ளது. மேலும் குடிநீர் மற்றும் கழிப்பறை வசதி இல்லாமல் உள்ளது.
   - ஆதலால் அடிப்படை வசதிகளுடன் புதிய கட்டடம் ஏற்படுத்தித் தர வேண்டும்.
2. கணினி தேவைகள்
   - கணிப்பொறி மற்றும் பிரிண்டர் - தேவைப்படும் எண்ணிக்கை 4
   - தற்போது பயன்பாட்டிலிருக்கும் கணிபொறிகள் மிகவும் பழுதடைந்த நிலையில் பயன்பாட்டிலுள்ளது. இதற்கான பராமரிப்பு செலவு அதிகமாக உள்ளது.
   - ஜெராக்ஸ் மிசின் - தேவைப்படும் எண்ணிக்கை 1 (அறிக்கைகள் நகல்கள் எடுத்து அனுப்புவதற்கு தேவைப்படுகிறது.)
   - இன்வெர்ட்டர் - தேவைப்படும் எண்ணிக்கை 1 (மின்தடை பாதிப்பின்றி பணிகள் செய்வதற்கு தேவைப்படுகிறது.)

மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு

- ஒருங்கிணைந்த வளாகம் (INTEGRATED CAMPUS)

  திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பான சேவைகளை வலுப்படுத்தும் விதமாக மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு, குழந்தை நலக்குழு, இளைஞர் நீதிக்குழுமம்,அரசினர் கூர்நோக்கு இல்லம் மற்றும் பல்நோக்கு ஆதாரவள மையம் ஆகிய அலுவலகங்கள் அடங்கிய ஒருங்கிணைந்த வளாகத்தினை அமைத்தல்.
- சைல்டு லைன் - 1098 (CHILD LINE - 1098)

  திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஒரு சைல்டுலைன் நிறுவனம் மட்டும் இயங்கிவரும் நிலையில், பல்வேறு சூழ்நிலைகளில் பாதிக்கப்படும் குழந்தைகளை மீட்பதில் சிரமம் ஏற்படுவதால், நான்கு வட்டாரங்களுக்கு ஒரு சைல்டுலைன் அமைப்பதன் மூலமாக குழந்தைகளை மீட்டெடுக்கும் பணியினை துரிதப்படுத்துதல்.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள்

1. மாவட்ட திட்ட அலுவலகம்

   மாவட்ட திட்ட அலுவலகத்தில் குடிநீர் மற்றும் கழிப்பறை வசதி இல்லை. எனவே இந்த அடிப்படை வசதி அமைக்கப்பட வேண்டும்.



மனித வளம் மேம்படுத்துதல்

சமூகநலன் & மகளிர் உரிமைத்துறை

மகளிர் ஊர் நல அலுவலர்கள், அங்கன்வாடி பணியாளர்களைக் கொண்டு பணி மூப்பு அடிப்படையில் பதவி உயர்வு மூலமே நிரப்பப்படுகிறது. வயது முதிர்வின் காரணமாக கள ஆய்வில் சுணக்கம் மற்றும் தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதில் தேக்கநிலையே உள்ளது. இதனை களைய கீழ்க்கண்ட பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

- தட்டச்சர் வட்டாரத்திற்கு 2
- களப்பணியாளர்கள் (இளைஞர்கள்) 14 வட்டாரத்திற்கு ஒருவர்

மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள குழந்தைகளின்பாதுகாப்பினைஉறுதிசெய்வதுடன் பல்வேறு சூழ்நிலைகளில் பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு விரைந்து மறுவாழ்வு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு கிராம, ஒன்றிய, பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சியின் மண்டல அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழுக்களின் கூட்டங்கள் காலாண்டிற்கு ஒரு முறை நடத்துவதற்கு ஏதுவாக அந்தந்த பகுதியில் உள்ள அரசு அலுவலர்கள், மக்கள் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்களின் உறுப்பினர்கள் மற்றும் சுயவிருப்பத்தின் பேரிலான நம்பிக்கைக்குரிய தன்னார்வலர்களை நியமித்தல்.



மாவட்ட அளவிலான குழு

சமூகநலன் & மகளிர் உரிமைத்துறை

- வரதட்சணை தடுப்பு அறிவுரைக் குழு (Need Base)
- மூத்த குடிமக்களுக்கான மாவட்ட குழு (Once in 3 Months)
- பணிக்குழு (Yearly Once)
- BMMS மற்றும் BCS-ற்கான மாவட்ட அளவிலான தேர்வுக் குழு (Need Base)
- இளைஞர் திறன் - விழா ஒருங்கிணைப்பு குழு (Need Base)
- District Level Committee For Tool Book மாவட்டகுழு (Need Base)
- மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக் குழு (Yearly)
- மாவட்ட அளவிலான பணிக்குழு (சுய உதவிக் குழு மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு மணிமேகலை விருது வழங்குதல் தொடர்பாக) (Need Base)
- மாவட்ட அளவிலான பணிக்குழு (சுய உதவிக்குழுக்கள் தேர்வு செய்துதிறன் பயிற்சி மற்றும் கடனுதவி வழங்குதல்) (Yearly)
- மாவட்ட விநியோக மற்றும் விற்பனை சங்கம் (Need Base)









திருச்சிராப்பள்ளி மாவட்டம்

தமிழ்நாடு மாநில ஊரக/நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு (மகளிர் திட்டம்) மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

தொலைநோக்குத் திட்டங்கள்

அடிப்படை விவரங்கள்

மகளிர் திட்டம்

- வட்டாரங்கள் - 14
- ஊராட்சிகள் - 404
- குக்கிராமங்கள் - 2210
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் - 404
- கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் - 410

(6 சிறப்பு கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள்)

1. நாகமங்கலம் - மணிகண்டம் வட்டாரம்
2. வண்ணாடு - துறையூர் வட்டாரம்
3. கோம்பை - துறையூர் வட்டாரம்
4. மகிழம்பாடி - இலால்குடி வட்டாரம்
5. தென்புறநாடு - உப்பிலியபுரம் வட்டாரம்
6. வைரிசெட்டிப்பாளையம் - உப்பிலியபுரம் வட்டாரம்.

வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் செயல்படுத்தப்படும் வட்டாரங்கள்

- மணப்பாறை - 21 ஊராட்சிகள்
- மணிகண்டம் - 22 ஊராட்சிகள்
- முசிறி - 33 ஊராட்சிகள்
- துறையூர் - 34 ஊராட்சிகள்
- அந்தநல்லூர் - 25 ஊராட்சிகள்

திட்டம் செயல்படுத்தப்படும் கிராம ஊராட்சிகள் : 135





மனித வளம்

மகளிர் திட்டம்

அலுவலகப் பணியாளர்கள் விவரம் :

வ. எண்	பணி விவரம்	ஒப்பளிப்பு	நிரப்பப்பட்டது	காலியிடம்
1.	திட்ட இயக்குநர்	1	1	-
2.	உதவித் திட்ட அலுவலர்கள்	8	6	2
3.	DSMS மேலாளர்	1	-	1
4.	கண்காணிப்பாளர்	1	1	-
5.	உதவியாளர்	1	1	-
6.	கணக்கர்	1	1	-
7.	இளநிலை உதவியாளர்	1	1	-
8.	DSMS கணக்கர்	1	1	-
9.	MIS Analyst (NULM)	1	1	-
10.	கணினி இயக்குபவர்	8	8	-
11.	அலுவலக உதவியாளர்	2	2	-

- வட்டார இயக்க மேலாளர்கள் : 13 / 14 (1 காலியிடம்)
- வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் : 78 / 79 (1 காலியிடம்)
- சமுதாய அமைப்பாளர்கள் : 28 / 30 (2 காலியிடம்)

வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

அலுவலகப் பணியாளர்கள் விவரம் :

வ. எண்	பணி விவரம்	ஒப்பளிப்பு	நிரப்பப்பட்டது	காலியிடம்
1	மாவட்ட செயல் அலுவலர்	1	1	-
2	இளம் வல்லுநர்	1	1	-
3	செயல் அலுவலர்கள்	4	4	-
4	நிறுவன நிதி அலுவலர்	1	1	-
5	வட்டார அணித்தலைவர்கள்	5	5	-
6	திட்ட செயலர்கள் (கணக்கு & நிர்வாகம்)	5	5	-
7	திட்ட செயலர்கள் (திறன் மற்றும் வேலை வாய்ப்புகள்)	5	4	1
8	திட்ட செயலர்கள் (தொழில் முனைவோர் மேம்பாடு)	5	4	1
9	கணக்கர்	1	1	-
10	MIS உதவியாளர்	1	0	1
11	அலுவலக உதவியாளர்	1	0	1

துறை சார் திட்டங்கள்

மகளிர் திட்டம்

1. குழுக்கள் அமைத்தல்
2. குழுக்களுக்கான அடிப்படை பயிற்சி வழங்குதல்
3. சுழல்நிதி வழங்குதல்
4. வங்கியாளர்களுக்கு வங்கிக்கடன் தொடர்பாக பயிற்சி வழங்குதல்
5. தரமதிப்பீடு செய்தல்
6. வங்கியாளர்களுக்கு கடன் இணைப்பு தொடர்பான மேளா நடத்துதல்
7. வங்கிக்கடன் இணைப்பு பெற்று தருதல்
8. வாராக்கடன் வசூல் செய்தல்
9. உறுப்பினர்கள் அனைவருக்கும் ஆயுள் மற்றும் விபத்துக் காப்பீடு பதிவு செய்தல் மற்றும் பெற்று தருதல்
10. மாவட்ட மற்றும் வட்டார அளவில் வங்கியாளர்களுக்கு கூட்டம் நடத்துதல்
11. வங்கிக்கடன் இணைப்பு தொடர்பாக இணையதள பதிவேற்றம் செய்தல்
12. இளைஞர்களுக்கு பயிற்சி அளித்தல்
13. RSETI பயிற்சி நிறுவனத்தின் மூலம் பயிற்சிகள் வழங்குதல்
14. இளைஞர்களுக்கு திறன் திருவிழா நடத்துதல்
15. வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வேலைவாய்ப்பு பெற்று தருதல்
16. வேலைவாய்ப்பினை தொடர்ந்து கண்காணித்தல்
17. சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ஊட்டச்சத்து தோட்டம் அமைத்து தருதல்
18. உற்பத்தியாளர்கள் குழுக்கள் அமைத்தல்
19. ஒருங்கிணைந்த பண்ணைத் தொகுப்பு அமைத்து தருதல்
20. ஓரிட சேவை மையம் அமைத்தல் மற்றும் பயிற்சிகள் வழங்குதல்
21. முருங்கை நாற்றங்கால் பண்ணை அமைத்தல்
22. ஒன்றிய அளவில் நாற்றங்கால் பண்ணை அமைத்தல்
23. தோட்டக்கலை தொடர்பான நாற்றங்கால் பண்ணை அமைத்தல்
24. மாற்றுத்திறனாளிகள், நலிவுற்றோர், முதியோர் மற்றும் திருநங்கைகளைக் கொண்டு சிறப்பு குழு அமைத்தல்.
25. மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர்களுக்கு தொழில் நடவடிக்கை மேற்கொள்ள தனிநபர்க் கடன் வழங்குதல்
26. தொழில் நடவடிக்கை அடிப்படையில் தகுதிவாய்ந்த அனைத்து சுய உதவிக் குழுக்களுக்கும் சமுதாய முதலீட்டு நிதி வழங்குதல்.
27. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் காலை உணவுத் திட்டம் குறித்து தொடர் கண்காணிப்பு செய்தல்
28. அனைத்து துறைகளின் மூலம் வழங்கப்படும் நலத்திட்டங்களை மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு பெற்று தருதல்
29. துறையூர் வட்டாரத்தில், பள்ளிகள் மற்றும் கல்லூரி மாணவிகளுக்கு தன்சுத்தம் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்துதல்
30. நகர்ப்புற பகுதிகளில் குழுக்கள் அமைத்து, பயிற்சிகள் மற்றும் சுழல்நிதி வழங்கப்பட்டு, வங்கிக்கடன் மற்றும் தொழில் கடன் வழங்குதல்
31. நகர்ப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய தொழில் திறன் பயிற்சி வழங்குதல்
32. பிரதம மந்திரி திட்டத்தின் கீழ் நடைப்பாதை வியாபாரிகளுக்கு சிறு கடன் வழங்குதல்
33. சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்திடும் பொருட்டு, மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவிலான கண்காட்சிகள் நடத்துதல்.
34. நவராத்திரி கண்காட்சி, விருப்ப மற்றும் கட்டாயக் கண்காட்சி நடத்துதல்
35. கல்லூரி சந்தைகள் நடத்துதல்
36. மாவட்ட மற்றும் வட்டார அளவில் வணிக வளாகங்களின் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்தல்
37. அனைத்து துறைச்சார்ந்த திட்டங்களின் செயல்பாட்டிற்கு மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களை ஒருங்கிணைப்பு செய்தல்
38. ஊரகம், நகர்ப்புறம் மற்றும் கிராமங்களில் இ-சேவை மையம் நடத்துதல் மற்றும் கண்காணித்தல்
39. பிறத்துறை சார்ந்த திட்டங்களுக்கு அடிப்படை தகவல் கணக்கெடுப்பு செய்தல்.







வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

1 தனிநபர் மற்றும் குழு தொழில் முனைவோர் உருவாக்கம் :
- தனிநபர் தொழில் முனைவோர்
- உற்பத்தியாளர் குழுக்கள்
- தொழில் குழுக்கள்
- உற்பத்தியாளர் கூட்டமைப்பு

2 மகளிர் வாழ்வாதார சேவை மையம் :

தொழில் முனைவோர்களுக்குத் தேவையான பல்வேறு வகையான சேவைகள் ஓரிடத்தில் தேவை என்பதன் அடிப்படையில் மகளிர் வாழ்வாதார சேவை மையங்கள் துவக்கப்படுகின்றது. மகளிர் வாழ்வாதார சேவை மையம் என்பது ஊரகத் தொழில் முனைவோர் தொழில் தொடங்குவதற்கு அல்லது மேம்படுத்துவதற்குத் தேவையான சேவைகளை ஒரே இடத்தில் வழங்கும் சேவை மையம் ஆகும். தொழில் திட்டம் தயாரித்தல் (Business Plan Preparation), மதிப்பீடு செய்தல், தொழில் நுட்ப விபரங்கள், திறன் பயிற்சி குறித்த விவரங்கள், சந்தைப் பற்றிய தகவல்கள், நிதி இணைப்புகள் ஆகிய சேவைகள் மகளிர் வாழ்வாதார சேவை மையம் மூலம் வழங்கப்படும்.

3 இணை மானியத் திட்டம்

ஊரகத் தொழில்முனைவோருக்கு தேவைப்படும் கடனுதவியை நிதி நிறுவனங்களிடமிருந்து எளிதாக பெற வழி வகை செய்ய இணை மானிய நிதி திட்டம் துணைபுரிகிறது.

4 புதுமைத் தொழில்களுக்கான நிதியுதவி

5 திறன்வளர்ப்பு மற்றும் வேலை வாய்ப்புகள்:
- சமுதாயத் திறன் பள்ளி
- சமுதாயப் பண்ணைப் பள்ளி
- தொழில் முனைவோர் மேம்பாடு
- பிறதுறை சேவை இணைப்புச் செயல்பாடுகள்

6 பழங்குடியினர் நல மேம்பாடு

VISION TRICHY

தமிழ்நாடு மாநில ஊரக/நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு (மகளிர் திட்டம்) மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம்



தொலைநோக்குத் திட்டங்கள்

மகளிர் திட்டம்

சுய உதவிக் குழுக்களுக்கு தற்போது வழங்கும் தொகையை போல் 10 மடங்கு அதிகமாக தொழில் கடன் வழங்கப்படும்.

50% இளைஞர்களுக்கு ஒரு கூடுதல் தொழில் பயிற்சி வழங்கப்படும்.

அனைத்து ஊராட்சிகளிலும் குறைந்தது ஒரு உற்பத்தியாளர் குழு அமைக்கப்படும்

அனைத்து சுய உதவிக் குழுக்களின் சந்தேகங்களுக்கு உடனே தீர்வு வழங்கிட உதவி மையம் மாவட்ட அலுவலகத்தில் ஏற்படுத்தப்படும்.





50% குழுக்கள் தற்சார்பு நிலை அடைவதை உறுதி செய்யப்படும்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்திட இணைய வழி சேவை வசதி துவங்கப்படும்.

அனைத்து கிராம சேவை மைய கட்டிடங்களையும் முன் மாதிரி மையமாகவும் ஒரே குடையில் அனைத்து சேவைகளும் வழங்கும் மையமாக மாற்றம் செய்யப்படும்.

ஒவ்வொரு வருடமும் பணியாளர்களுக்கு தொடர் பயிற்சி (Knowledge Updation) வழங்கப்படும்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனை செய்திட இரண்டு பகுதிக்கு ஒரு விற்பனை அங்காடி (KIOSK) நிறுவப்படும்

மாநகராட்சி மண்டல அலுவலங்கள், நகராட்சி அலுவலங்கள் மற்றும் பெரிய அரசு அலுவலகங்களில் சுய உதவிக் குழுக்களின் சிறிய உணவகங்கள், எழுதுப்பொருள் விற்பனை மையம் மற்றும் நகலகம் (XEROX UNIT) அமைக்கப்படும்

வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தி உள்ள தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள வட்டாரங்களில் ஊரக தொழில் முனைவுகளை உருவாக்குதல் மற்றும் நிதி சேவைகளுக்கு வழிவகுத்தல் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதல்.

திட்டம் செயல்படுத்தப்படும் வட்டாரங்களில் தொழில்முனைவுகளில் பயன் பெறுவோரில் 65 சதவீதத்திற்கும் அதிகமாக பெண்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்படும். மாற்றுத்திறனாளிகள், நலிவுற்றோர் (கணவனை இழந்தோர், கணவனால் கைவிடப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், மூன்றாம் பாலினத்தவர்கள் போன்றோர்) ஆகியோருக்குத் திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படும்

திட்டம் செயல்படுத்தப்படும் வட்டாரங்களில் வாழை உற்பத்தியில் ஈடுபடுவோரில் 20 சதவீதம் (சுய தொழில், வேலை வாய்ப்பு) பெண்கள் கூடுதலாக வேலை வாய்ப்பு பெறச்செய்தல்.



திட்டம் செயல்படுத்தப்படும் வட்டாரங்களில் உள்ள வாழை (அந்தநல்லூர்), கோரை ஆகிய உற்பத்திப் பொருட்களுக்கு குறுதொகுதி (Micro Cluster) உருவாக்குதல்.

மணிகண்டம் நாகமங்கலம் ஊராட்சியில் பார்வைச் சவாலுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு பணிமனை அமைத்தல்.

திட்டத்தின் சமுதாயத் திறன் பள்ளி மூலம் பயிற்சி பெற்ற இளைஞர்களில் 60 சதவீதம் சுய அல்லது வேலைவாய்ப்பு பெற்றிருத்தல்.

மகளிர் வாழ்வாதார சேவை மையம் மூலம் திட்டம் செயல்படாத ஒன்றியங்களில் உள்ள தொழில் முனைவோர்களும் சேவைகள் பெறச் செய்தல்.

திட்டம் செயல்படுத்தப்படும் வட்டாரங்களில் உள்ள பழங்குடியினர் தொழில் மேம்பாடு அடையச் செய்தல்.

திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட உற்பத்தியாளர் குழுக்களை உற்பத்தியாளர் கூட்டமைப்புகளுடன் இணையச் செய்தல்

முசிறியில் உள்ள அனைத்து மகளிர் சுயஉதவி குழுக்களுக்கும் தற்போது வழங்கும் கடனுதவியை விட 30% அதிகம் வழங்க வேண்டுதல்.



VISION TRICHY

தமிழ்நாடு மாநில ஊரக/நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு (மகளிர் திட்டம்) மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம்





உட்கட்டமைப்பு ஏற்படுத்துதல்

வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

- அந்தநல்லூர் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகளின் மண்புழு உரத் தொட்டிகளை பயன்பாட்டு நிலையில் ஊராட்சியிடம் இருந்து பெற்று 20 ஊராட்சிகளில் உள்ள உற்பத்தியாளர் / தொழில் குழுக்கள் மூலம் மண்புழு உரம் உற்பத்தி செய்தல்.
- மாவட்ட நிர்வாக உதவியுடன் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் மூலம் மணிகண்டம் ஒன்றியம் நாகமங்கலம் ஊராட்சியில் பார்வைச் சவாலுடையவர்களின் தொழில் மேம்பாட்டிற்கான ஒரு பணிமனை அமைத்தல்.
- மாவட்ட நிர்வாக உதவியுடன் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் மூலம் அந்தநல்லூர் ஒன்றியம் பகுதியில் வாழை நார் தொழில் சார்ந்த பணிமனை ஒன்று அமைத்தல்.
- மாவட்ட நிர்வாக உதவியுடன் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் மூலம் முசிறி ஒன்றியம் பகுதியில் கோரை மதிப்புக் கூட்டுதல் தொழில் சார்ந்த பணிமனை ஒன்று அமைத்தல்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்



ஆதிதிராவிடர் நலத்துறை

தொலைநோக்குத் திட்டங்கள்

VISION TRICHY

ஆதிதிராவிடர் நலத்துறை

அடிப்படை விவரங்கள்

ஆதிதிராவிடர் மக்கள்தொகை

வ. எண்	ஆதிதிராவிடர் மக்கள் தொகை	எண்ணிக்கை
1.	ஆண்கள்	2,30,700
2.	பெண்கள்	2,35,771
	மொத்தம்	4,66,361
	சதவீதம்	17.80%

பள்ளிகள்

வ. எண்	பள்ளியின் வகைப்பாடு	எண்ணிக்கை	2022-2023 பயிலும் மாணாக்கர் எண்ணிக்கை		
			ஆண்	பெண்	மொத்தம்
1.	அரசு (ஆதிந) மேல்நிலைப் பள்ளிகள்	13	2171	2206	4377
2.	அரசு (ஆதிந) உயர்நிலைப் பள்ளிகள்	14	425	422	847
3.	அரசு (ஆதிந) நடுநிலைப் பள்ளிகள்	04	84	92	176
4.	அரசு (ஆதிந) துவக்கப்பள்ளிகள்	69	1452	1408	2860
	மொத்தம்	100	4132	4128	8260

விடுதிகள்

வ. எண்	விடுதியின் வகைப்பாடு	எண்ணிக்கை	2022-2023 தங்கி பயிலும் மாணாக்கர் எண்ணிக்கை		
			ஆண்	பெண்	மொத்தம்
1.	அரசு (ஆதிந) முதுகலை பட்டதாரி மாணவர் விடுதி	01	44	00	44
2.	அரசு (ஆதிந) கல்லூரி மாணவர் விடுதி	03	447	00	447
3.	அரசு (ஆதிந) கல்லூரி மாணவியர் விடுதி	03	00	202	202
4.	அரசு (ஆதிந) தொழிற்பயிற்சி மாணவர் விடுதி	01	43	00	43
5.	அரசு (ஆதிந) பள்ளி மாணவர் விடுதி	28	1539	00	1539
6.	அரசு (ஆதிந) பள்ளி மாணவியர் விடுதி	14	00	626	626
	மொத்தம்	49	2073	828	2901

விடுதியில் பணிபுரியும் காப்பாளர்/காப்பாளினிகள் விபரம்

பதவியின் பெயர்	அனுமதிக்கப்பட்ட பணியிடம்	பணிபுரிவோர் எண்ணிக்கை	காலிப் பணியிடம்
பட்டதாரி காப்பாளர்	31	30	01
இடைநிலை காப்பாளர்	18	15	03

பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கள் விபரம்

பதவியின் பெயர்	அனுமதிக்கப்பட்ட பணியிடம்	பணிபுரிவோர் எண்ணிக்கை	காலிப் பணியிடம்
மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்	13	12	01
உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்	14	14	0
நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர்	4	3	1
துவக்கப்பள்ளி தலைமையாசிரியர்	69	68	2
முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்	95	68	27
பட்டதாரி ஆசிரியர்	108	72	36
இடைநிலை ஆசிரியர்	111	104	07





துறை சார் திட்டங்கள்

- போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம்
- ப்ரி மெட்ரிக் கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம்
- உயர்கல்வி சிறப்பு உதவித்தொகை வழங்கும் திட்டம்
- பெண்கல்வி ஊக்குவிப்புத் தொகை வழங்கும் திட்டம்
- சுகாதாரமற்ற தொழில்புரிவோரின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம்
- கல்வி பரிசுத்தொகை வழங்கும் திட்டம்
- பள்ளி பாடப் புத்தகம் மற்றும் நோட்டு புத்தகம் வழங்கும் திட்டம்
- போட்டித் தேர்வு எழுத புத்தக இதழ்கள் மற்றும் பொது அறிவு நூல்கள் வழங்கும் திட்டம்.
- சிறப்பு வழிகாட்டி மற்றும் வினா வங்கி 10,12 ஆம் வகுப்பு மாணாக்கர்களுக்கு வழங்கும் திட்டம்.
- சீருடை 9 முதல் 12-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு 4 இணை சீருடைகள் வழங்கும் திட்டம்.
- இலவச மிதிவண்டி வழங்கும் திட்டம்
- வட்டார அளவில் 5-ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற மாணாக்கர்களை தேர்வு செய்து நற்பெயர் பெற்ற பள்ளிகளில் 6-ஆம் வகுப்பில் கல்வி பயில சேர்க்கை திட்டம்
- மாவட்ட அளவில் அரசு பள்ளிகளில் 10-ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற மாணாக்கர்களை தேர்வு செய்து நற்பெயர் பெற்ற பள்ளிகளில் 11-ஆம் வகுப்பில் கல்வி பயில சேர்க்கை திட்டம்.
- இலவச வீட்டுமனை பட்டா
- நிலமெடுப்பு மற்றும் மயானப்பாதை
- சமத்துவ மயானம்
- ஈமச்சடங்கு நிதியுதவி வழங்கும் திட்டம்
- தையல் இயந்திரம் வழங்குதல்
- சலவைப்பெட்டி வழங்குதல்
- பிரதம மந்திரி கிராம முன்னோடித்திட்டம்
- வன்கொடுமை தீருதவி வழங்குதல்






தொலைநோக்குத் திட்டங்கள்

இராஜா காலனி அரசு (ஆதிந) முதுகலை பட்டதாரி மாணவர் விடுதி மற்றும் பள்ளி மாணவர் விடுதி கட்டிடம் மிகவும் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. விடுதிக்கு புதிய கட்டிடம் கட்டப்பட வேண்டும்.

மணப்பாறை வட்டம், மணப்பாறையில் உள்ள பள்ளி மாணவியர் விடுதி, மிகவும் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் அவ்விடுதியானது 01.12.2021 முதல் தனியார் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. விடுதிக்கு புதிய கட்டிடம் கட்டப்பட வேண்டும்.

பள்ளி மாணாக்கர் விடுதிகள் 42 மற்றும் கல்லூரி மாணாக்கர் விடுதி 07 ஆகமொத்தம் 49 விடுதிகளுக்கு இணையதளம் வாயிலக கற்றல் வசதியினை ஏற்படுத்தும் வகையில் இணையதள வசதியுடன் கூடிய E-Library ஏற்படுத்தப்பட வேண்டும்.

பள்ளி மாணாக்கர் விடுதிகள் 42 மற்றும் கல்லூரி மாணாக்கர் விடுதி 07ஆகமொத்தம் 49 விடுதிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் மற்றும் உடற்பயிற்சி கருவிகள் வழங்க வேண்டும்.

பள்ளி மாணாக்கர் விடுதிகள் 42 மற்றும் கல்லூரி மாணாக்கர் விடுதி 04 ஆகமொத்தம் 46 விடுதிகளுக்கு சலவை இயந்திரம் வழங்க வேண்டும்.

பள்ளி மாணாக்கர் விடுதிகள் 27 மற்றும் கல்லூரி மாணாக்கர் விடுதி 03 ஆகமொத்தம் 30 விடுதிகளுக்கு அடிப்படை வசதிகளான கழிவறைகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, தூய்மையான வளாகம் அமைத்துத்தரப்பட வேண்டும்.

ஆண்டுதோறும் 13 அரசு ஆதிந மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் 14 உயர்நிலைப் பள்ளிகளுக்கு நூலக புத்தகத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ.39,000/- வழங்கப்பட்டு வருகிறது. நிதி ஒதுக்கீடு தொகையினை இரு மடங்கு அதிகப்படுத்தி வழங்கப்பட வேண்டும்.

ஆண்டுதோறும் 49 அரசு ஆதிந விடுதிகளுக்கு நூலக புத்தகத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ.40,600/- வழங்கப்பட்டுவருகிறது. நிதி ஒதுக்கீடு தொகையினை இரு மடங்கு அதிகப்படுத்தி வழங்கப்பட வேண்டும்.

அரசு ஆதிந நடுநிலைப்பள்ளி -04, உயர்நிலைப் பள்ளிகள் - 14 மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் - 13 ஆக மொத்தம்-31 பள்ளிகளில் மாணாக்கர்களின் மன அழுத்தத்தை குறைக்கவும், ஆளுமை திறனை மேம்படுத்தவும், யோகா மற்றும் தியான பயிற்சி வகுப்புகள் ஏற்படுத்த வேண்டும்.

பத்திரிக்கை செய்தி, விழிப்புணர்வு மற்றும் ஆய்வுக் கூட்டம் மூலம் கல்வி உதவித்தொகை பெறுவதற்கான மாணாக்கர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்

அரசு ஆதிந நடுநிலைப்பள்ளி - 04, உயர்நிலைப்பள்ளிகள் - 14 மேல்நிலைப்பள்ளிகள் - 13 மற்றும் துவக்கப்பள்ளிகள் - 50 ஆக மொத்தம் 81 பள்ளிகளில் கழிவறைகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி அமைத்துத்தர வேண்டும்.

தற்போது ஆண்டுதோறும் 50 தையல் இயந்திரம் வழங்கப்படுகிறது. இதை ஐந்து மடங்காக உயர்த்தி 250 தையல் இயந்திரங்கள் வழங்கபட வேண்டும்.

ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் நிலம் கையகப்படுத்தப்பட்டு காலியாக உள்ள ஆதிதிராவிடர் நத்தத்தில் 1000 பயனாளிகளுக்கு தகுதியின் அடிப்படையில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.



மாவட்ட அளவிலான குழு

- ஆதிதிராவிடர் நலக்குழு (Quarterly)
- விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு குழு (Periodic Review)

ஆதி திராவிடர் நல மாணவர் / மாணவியர் விடுதிகள் - தேவைப்படும் அடிப்படைக் கட்டமைப்பு விபரங்கள்

- திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் விடுதிகள் மொத்தம் 49
- விடுதிகளிலுள்ள மாணவ / மாணவியர்களின் மொத்த எண்ணிக்கை 2901
- காவிரி குடிநீர் சுத்திகரிப்பான் தேவைப்படும் விடுதிகளின் எண்ணிக்கை 30
- மாணவ/மாணவியர் விடுதிகளில் பழுது பார்க்கப்பட வேண்டிய மொத்த கழிவறைகளின் எண்ணிக்கை 136
- மாணவ/மாணவியர் விடுதிகளில் பழுது பார்க்கப்பட வேண்டிய மொத்த குளியலறைகளின் எண்ணிக்கை 121
- மாணவ/மாணவியர் விடுதிகளுக்கு தேவைப்படும் புதிய மின்விசிறிகளின் எண்ணிக்கை 290
- போர்வெல் பழுதுபார்க்கப்பட வேண்டிய மொத்த விடுதிகள் 17
- மின் இணைப்பு பழுதுபார்க்கப்பட வேண்டிய விடுதிகள் 22
- 11 விடுதிகளில் புதிய சுற்றுச்சுவர் ஏற்படுத்தப்பட வேண்டும்
- 11 விடுதிகளில் சுற்றுச்சுவர் பழுதுபார்க்கப்பட வேண்டும்
- நாய்கின் அழிக்கும் இயந்திரங்கள் பழுபார்க்கப்பட வேண்டிவை எண்ணிக்கை 11

உட்கட்டமைப்பு ஏற்படுத்துதல்

- 42 பள்ளி விடுதிகளில் E-Library ஏற்படுத்திட கணினிகள் மற்றும் இணையதள வசதி ஏற்படுத்திட வேண்டும்
- 100 பள்ளிகள் மற்றும் 49 விடுதிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் மற்றும் உடற்பயிற்சி கருவிகள் வாங்கப்பட வேண்டும்.
- ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் கையகப்படுத்தப்பட்டு பட்டா வழங்கப்பட்ட நிலங்களில் காலியாக உள்ள இடங்களை தேர்வு செய்து, புதிதாக பயனாளிகள் பட்டியல் தயார் செய்து வீட்டுமனைப்பட்டா மற்றும் வீடு கட்டுவதற்கு பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டத்தின் மூலம் செயல்படுத்தலாம்.
- ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் பெண் கல்வி ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்திற்கான தனி இணையதளம் வழங்கப்பட வேண்டும்.

மனிதவளம் மேம்படுத்துதல்

பதவியின் பெயர்	அனுமதிக்கப்பட்ட பணியிடம்	பணிபுரிவோர் எண்ணிக்கை	காலிப்பணியிடம்
மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்	13	12	01
உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்	14	14	0
நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர்	4	3	1
துவக்கப்பள்ளி தலைமையாசிரியர்	69	68	2
முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்	95	68	27
பட்டதாரி ஆசிரியர்	108	72	36
இடைநிலை ஆசிரியர்	111	104	07
பட்டதாரி காப்பாளர்	31	30	01
இடைநிலை காப்பாளர்	18	15	03



திருச்சிராப்பள்ளி மாவட்டம்

பிற்படுத்தப்பட்டோர்,
மிகப்பிற்படுத்தப்பட்டோர்,
சீர்மரபினர் &
சிறுபான்மையினர் நலத்துறை

தொலைநோக்குத் திட்டங்கள்



அடிப்படை விவரங்கள்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்பினை சார்ந்த மக்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காக பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கல்வி விடுதிகள் விவரம்

வ. எண்	கல்லூரி		பள்ளி		மொத்தம்		
	மாணவர்கள்	மாணவியர்கள்	மாணவர்கள்	மாணவியர்கள்	மாணவர்கள்	மாணவியர்கள்	மொத்தம்
1.	8	7	23	14	31	21	52

விடுதிகளில் மாணவ/மாணவியர் சேர்க்கை விவரம் (2022-23)

வ. எண்.	விடுதிகள்	பள்ளி விடுதிகள்		கல்லூரி விடுதிகள்	
		ஒப்பளிக்கப் பட்டவர்கள்	அனுமதிக்கப் பட்டுள்ளவர்கள்	ஒப்பளிக்கப் பட்டவர்கள்	அனுமதிக்கப் பட்டுள்ளவர்கள்
1.	பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள்	1475	1012	1110	952
2.	மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலவிடுதிகள்	520	410	100	100
3.	சீர்மரபினர் நல விடுதிகள்	160	143	65	44
4.	சிறுபான்மையினர் நல விடுதிகள்	25	20	25	25
	மொத்தம்	2180	1585	1300	1121

துறை சார் திட்டங்கள்

- கல்வி உதவித்தொகை பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் வகுப்பை சேர்ந்த மாணவ / மாணவியர்களுக்கு பள்ளி மேற்படிப்பு உதவித்தொகை
- கல்வி விடுதிகள் கட்டுதல்
- பெண்கல்வி ஊக்கத்தொகை
- இலவச மிதிவண்டிகள் வழங்குதல்
- இலவச தையல் இயந்திரம் மற்றும் இலவச சலவை பெட்டி
- இலவச வீட்டுமனை பட்டா வழங்குதல்
- சீர்மரபினர் நல வாரியம் மற்றும் நரிகுறவர் நல வாரியம்
- சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது
- சிறுபான்மையினர் வகுப்பை சார்ந்த மாணவ / மாணவியர்களுக்கு பள்ளி படிப்பு பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை திட்டம்
- முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் மற்றும் கிறிஸ்துவ மகளிர் உதவும் சங்கம் மூலம் நலிவடைந்த பெண்களுக்கு உதவித்தொகை வழங்குதல்
- உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்
- ஜெருசலேம் புனித பயணம்.
- கிறிஸ்துவ தேவாலயங்கள் பழுது மற்றும் பராமரிக்கும் பணிகளுக்கு நிதியுதவி
- கல்லறை தோட்டம் மற்றும் கபர்ஸ்தான்கள் அமைத்தல்
- பிரதம மந்திரி ஜான் விகாஸ் காரியகிராம்
- டாப்செட்கோ மற்றும் டாம்கோ கடனுதவி திட்டங்கள்

மனித வளம்

விடுதி காப்பாளர் / காப்பாளினிகள் பணியிட விவரங்கள்

பணியிடம்	ஒப்பளிக்கப்பட்ட பணியிடம்	பணிபுரிபவர்கள்	காலிப்பணியிடம்
போதகக் காப்பாளர்	21	21	0
போதகக் காப்பாளினி	20	19	1
இடைநிலைக் காப்பாளர்	9	5	4
இடைநிலைக் காப்பாளினி	2	0	2
காவலர் மற்றும் ஏவலர் (ஆண்)	16	9	7
காவலர் மற்றும் ஏவலர் (பெண்)	21	10	11
சமையலர் (ஆண்)	62	35	27
சமையலர் (பெண்)	41	32	9
மொத்தம்	192	131	61

தொலைநோக்குத் திட்டங்கள்

5600 காலி மனைகளில் வீட்டு மனைப்பட்டா வழங்கப்படும் நேர்வில் பயனாளிகளுக்கு வீடுகட்டுவதற்கு பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டத்தின் மூலம் செயல்படுத்துதல்.

கிராமப்புற பெண் கல்வி ஊக்கத் தொகை திட்டத்திற்கென தனி இணையதளம் தோற்றுவித்தல்.

சலவைத் தொழில் செய்யும் ஒரு 10 நபர்களை குழுவாக இணைத்து 5 நவீன சலவையகம் அமைத்து தருதல்.

மாவட்டத்தில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் மக்களுக்கு கடன் வழங்குதல்.

37 பள்ளி விடுதிகள் மற்றும் 15 கல்லூரி விடுதிகள் மொத்தம் 52 விடுதிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் மற்றும் உடற்பயிற்சி கருவிகள் வழங்குதல்

இலவச தையல் இயந்திரம் வழங்குவதை மாற்றம் செய்து கூடுதலான மின் மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரம் வழங்குதல்

2 பள்ளி விடுதிகளை கல்லூரி விடுதியாக தரம் உயர்த்துதல்.

சுற்றுச்சுவர் இல்லாத அனைத்து விடுதிகளிலும் சுற்றுச்சுவர் ஏற்படுத்துதல்.

தையல்தொழில் செய்யும் ஒரு 10 நபர்களை குழுவாக இணைத்து 5 Readymade Garments Unit அமைத்தல்

இலவச பித்தளை தேய்ப்புப்பெட்டி வழங்குவதை மாற்றம் செய்து மின்னணு தேய்ப்பு பெட்டி வழங்குதல்

37 பள்ளி விடுதிகளில் E- Library ஏற்படுத்துதல்

பராமரிக்கப்பட வேண்டிய அனைத்து விடுதிகளிலும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்



உட்கட்டமைப்பு ஏற்படுத்துதல்

- 37 பள்ளி விடுதிகளில் E-Library ஏற்படுத்திட கணினிகள் மற்றும் இணையதள வசதி ஏற்படுத்திட வேண்டும்.
- திருவெறும்பூர் அரசு பள்ளி மாணவியர் விடுதி மற்றும் மணப்பாறை அரசு பள்ளி மாணவியர் விடுதி என 2 பள்ளி விடுதிகளை கல்லூரி மாணவியர் விடுதியாக தரம் உயர்த்திட சாத்தியக்கூறுகள் உள்ளதால் கல்லூரி விடுதியாக தரம் உயர்த்தப்பட வேண்டும்.
- 52 பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் மற்றும் உடற்பயிற்சி கருவிகள் வாங்கப்பட வேண்டும்.
- 2021 - 22ம் ஆண்டில் 12417 மிகப் பிறப்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் வகுப்பு மாணவியர்களுக்கு கிராமப்புற பெண் கல்வி ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது. எனவே கிராமப்புற பெண் கல்வி ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்திற்கென தனி இணையதளம் தோற்றுவிக்கப்பட வேண்டும்.
- 5000 மின்மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் வாங்க வேண்டும்.
- 2500 மின்னணு தேய்ப்புபெட்டி வாங்க வேண்டும்.
- 50 தையல் யூனிட் அமைப்பதற்கு கடன் வசதி ஏற்படுத்துதல்.

மாவட்ட அளவிலான குழு

- மாவட்ட அளவிலான குழுக் கூட்டம் - முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் (Yearly)
- மாவட்ட அளவிலான குழுக்கூட்டம் கிறிஸ்துவ மகளிர் உதவும் சங்கம் (Yearly)
- மாவட்ட அளவிலான குழுக்கூட்டம் - பாரத பிரதமரின் 15 அம்சதிட்டம் (Quarterly)





திருச்சிராப்பள்ளி மாவட்டம்

தாட்கோ, மற்றும் பழங்குடியினர் நலம்

தொலைநோக்குத் திட்டங்கள்







அடிப்படை விவரங்கள்

தாட்கோ

ஆதிதிராவிடர் மக்கள் தொகை

வ. எண்	ஆதிதிராவிடர் மக்கள் தொகை	எண்ணிக்கை
1	ஆண்கள்	2,30,790
2	பெண்கள்	2,35,771
	மொத்தம்	4,66,561
	சதவீதம்	17.1%

பழங்குடியினர் மக்கள் தொகை

வ. எண்	பழங்குடியினர் மக்கள் தொகை	எண்ணிக்கை
1	ஆண்கள்	9,414
2	பெண்கள்	8,784
	மொத்தம்	18,198
	சதவீதம்	0.7%

பழங்குடியினர் நலம்

1	திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் மலை கிராமங்கள்	57		
2	பழங்குடியின மக்கள் தொகை	ஆண்	பெண்	மொத்தம்
		6310	6231	12531

துறை சார் திட்டங்கள்

தாட்கோ

- நிலம் வாங்கும் திட்டம்
- நிலம் மேம்பாட்டுத் திட்டம்
- இலவச துரித மின்இணைப்பு திட்டம்
- தொழில் முனைவோர் திட்டம்
- பெட்ரோல் / டீசல் / எரிவாயு சில்லரை விற்பனை நிலையம் அமைத்தல்.
- இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டம்
- மருத்துவமனை, மருந்துக்கடை, கண்கண்ணாடியகம், முடநீக்கு மையம், இரத்த பரிசோதனை நிலையம் அமைத்தல்
- சுயஉதவி குழுக்களுக்கான பொருளாதார கடனுதவித் திட்டம்
- தமிழ்நாடு தேர்வாணைய தொகுதி -1 முதல்நிலைத் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு நிதியுதவி
- பட்டயக் கணக்கர் / செலவு கணக்கர் / நிறுவன செயலர்களுக்கு நிதியுதவி

பழங்குடியினர் நலம்

1. விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் (2019-2020 CTDP)
2. அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்டம் (PVTG)
3. பழங்குடியினர் துணைத்திட்டத்தின் கீழ் மைய அரசின் சிறப்பு நிதி உதவித்திட்டம் (SCA to TSP) (SCA to TS)
4. பிரதான் மந்திரி ஆதி ஆதர்ஷ் கிராம் யோஜனா திட்டம் (PMAAGY)
5. இந்திய அரசியல் அமைப்பு சட்ட பிரிவு (Article 275)

அறிவிப்புகள்

பழங்குடியினர் நலம்

- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மானியக் கோரிக்கை எண் : 04 அறிவிப்புகள் 2022-2023.
- திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பழங்குடியினர் நல கல்லூரி மாணவியர் விடுதிகள் துவங்குதல் 2022-2023.
- 2022-2023 ஆண்டு விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்டம் அடிப்படை வசதி, தடுப்பணை கட்டுதல் மற்றும் பள்ளிகள் பராமரிப்பு பணி மேலாண்மை திட்டங்களுக்கு 48.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

மனித வளம்

தாட்கோ

பதவியின் பெயர்	அனுமதிக்கப்பட்ட பணியிடம்	பணிபுரிவோர் எண்ணிக்கை	காலிப் பணியிடம்
மாவட்ட மேலாளர்	1	1	0
உதவி மேலாளர்கள்	2	1	1
உதவியாளர்	1	1	0
இளநிலை உதவியாளர்கள்	2	0	2
ஈப்பு ஓட்டுநர்	1	0	1
தட்டச்சர்	1	0	1
பதிவுரு எழுத்தர்	1	1	0
அலுவலக உதவியாளர்	1	0	1

தாட்கோ நிறுவனத்திற்கு மேலும் மனித வளம் தேவை : உதவியாளர் - 2 இளநிலை உதவியாளர் -2 மற்றும் அலுவலக உதவியாளர் - 2 ஆகிய பணியிடங்கள் கூடுதலாக தேவைப்படுகிறது. இதன் மூலம் 10 ஆண்டுகளுக்குரிய தொலைநோக்கு திட்டம் இலக்கை அடைய இயலும்.





பழங்குடியினர் நலம்

1. திருச்சிராப்பள்ளி மாவட்டம் பழங்குடியினர் நல திட்டம் அலுவலகத்தில் 01 திட்ட அலுவலர், 01 கண்காணிப்பாளர் 01 இளநிலை பொறியாளர், 01 உதவியாளர் பணிபுரிந்து வருகின்றனர். ஒரு இளநிலை உதவியாளர் பணியிடம் வேண்டும்
2. அரசு பழங்குடியினர் பள்ளிகள் விடுதிகளில் காலியாக உள்ள ஆசிரியர்கள் அடிப்படை பணியாளர்கள் கீழ்கண்ட பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும்

ஆசிரியர்கள் விவரம்	ஒப்பளிக்கப்பட்ட பணியிடம்	நிரப்பப்பட்டவை	காலிப்பணியிடம்
இடைநிலை ஆசிரியர்கள்	32	24	8
சிறப்பு ஆசிரியர்கள்	4	1	3
துவக்கப்பள்ளி தலைமை ஆசிரியர்கள்	25	22	3
பட்டதாரி ஆசிரியர்கள்	20	9	11
நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள்	2	0	2
உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள்	1	0	1
முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள்	14	2	12
மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள்	2	1	1
இடைநிலை காப்பாளர்கள்	3	3	0
பட்டதாரி காப்பாளர்கள்	2	0	2
சமையலர்கள்	68	67	1
காவலர் / ஏவலர்கள்	32	31	1
தூய்மை பணியாளர்கள் (காலமுறை ஊதியம்)	3	0	3
தூய்மை பணியாளர்கள் (தொகுப்பூதியம் ஊதியம்)	32	0	32
மொத்தம்	240	160	80












தொலைநோக்குத் திட்டங்கள்



தொலைநோக்குத் திட்டங்கள்

பழங்குடியினர் நலம்

- பழங்குடியின மலை கிராமங்களில் மட்டும் 85 சுய உதவி குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.
- பழங்குடியின மலை கிராமங்களில் சுய உதவி குழுக்களுக்கு மண்புழு உரம் தயாரிக்கும் பயிற்சி அளித்து தொடர்ந்து செயல்படுத்த ஊக்கப்படுத்துதல்.
- பழங்குடியின மலை கிராமங்களில் வசிக்கும் சுயஉதவி குழுக்களுக்கு காகிதப்பை துணிப்பை தயாரிக்கும் பயிற்சி அளித்து தொடர்ந்து செயல்படுத்த ஊக்கப்படுத்துதல்.
- பழங்குடியின மலை கிராமங்களில் சுய உதவி குழுக்களுக்கு மசாலா பொருட்கள் தயாரிக்க பயிற்சி அளித்து தொடர்ந்து செயல்படுத்த ஊக்கப்படுத்துதல்.
- நாகூர், கிணத்தூர் கிராமங்களில் கம்பியில்லா தொலை தொடர்பு ஏற்படுத்தி தருதல் (Wireless communication)
- இலால்குடி வட்டம் மகிழம்பாடி இருளர் இன மக்களுக்கு செங்கல் சூளை அமைத்து தருதல்.
- இலால்குடி வட்டம் மகிழம்பாடி இருளர் இன மக்களுக்கு தையல் பயிற்சி அளித்து தையல் இயந்திரம் வழங்குதல்.
- இலால்குடி வட்டம் மகிழம்பாடி இருளர் இன மக்களுக்கு பொருளாதாரம் மேம்பட இலவச கறவை மாடு வழங்குதல்.
- இலால்குடி வட்டம் மகிழம்பாடி இருளர் இன மக்களுக்கு புகைகரி மூட்டம் போட பொருளாதார நிதி உதவி செய்தல்.
- பூனாட்சி, வண்ணாடு புதூர், பாளையம், கிணத்தூர் ஆகிய கிராமங்களில் சமுதாய கூடங்கள் கட்டித்தருதல்

- தனி நபர் விவசாயத்திற்கு திறந்த வெளி கிணறு ஏற்படுத்தி தருதல்
- தானிய உலர்கலங்கள் அமைத்து தருதல் சின்ன இலுப்பூர்-1, சின்ன பழமலை-1, நெசக்குளம்-1 டாப்செங்காட்டுப்பட்டி-1 கீழக்கரை-2 சோளமாத்தி-1
- பழங்குடியின இளைஞர்களுக்கு ஓட்டுநர் பயிற்சி அளித்தல்.
- படித்த வேலையில்லா பழங்குடியின மாணவர்களுக்கு தமிழ்நாடு அரசு மற்றும் மைய அரசால் நடத்தப்படும் போட்டி தேர்வுகளுக்கு இலவச பயிற்சி அளித்தல்.
- வேளாண்துறை மற்றும் இதர துறைகளுடன் இணைந்து அடுத்த 3 ஆண்டுகளில் முற்றிலுமாக இயற்கை விவசாயத்திற்கு மாற்றம் அடைய மக்களை ஊக்குவித்தல்.
- பழங்குடியின கிராமங்களுக்கு சோலார் தெரு விளக்கு வசதிகள் ஏற்படுத்தி தருதல்
- கோம்பை ஊராட்சி தாளூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார மையம் அமைத்து தருதல்.
- வேளாண் விற்பனை குழு மூலம் எடை மேடை அமைத்தல்.
- பழங்குடியின மக்களின் பொருளாதாரம் மேம்பட இலவச கறவை மாடு வழங்குதல்.
- பழங்குடியின மக்களின் வாழ்வாதாரம் மேம்பட முந்திரி உடைக்கும் இயந்திரம் வழங்குதல்.
- ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒருங்கிணைந்த வேளாண்மையை ஊக்குவித்தல்.







உட்கட்டமைப்பு ஏற்படுத்துதல்

பழங்குடியினர் நலம்

- திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 05 அரசு பழங்குடியினர் விடுதிகள் 30 அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட பள்ளிகளும் செயல்பட்டு வருகின்றன.
- அரசு பழங்குடியினர் மாணவியர் விடுதி - பெருமாள்பாளையம் விடுதி இடித்து கட்டப்பட வேண்டும்
- 03 (இராமநாதபுரம், சின்ன இழுப்பூர், வண்ணாடு புதூர்) அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட பள்ளி கட்டிடங்கள் இடித்து கட்டப்பட வேண்டும்.

மாவட்ட அளவிலான குழு

தாட்கோ

- மத்திய நிதி உதவி திட்டத்தின்கீழ் தாட்கோ திட்டங்களை செயல்படுத்துவதற்கான செயல்திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த வழிகாட்டி நெறிமுறைகள்

  (Need Base)

பழங்குடியினர் நலம்

- மாவட்ட வன உரிமைச் சட்டம் 2006 அமல்படுத்துவது தொடர்பாக மாவட்ட அளவிலான குழு

  (Need Base)













தமிழ்நாடு அரசு

3. திருச்சி மாநகரில் சென்னை - திருச்சி - திண்டுக்கல் சாலையில் அண்ணா சிலை முதல் திருச்சி ரயில்வே ஜங்சன் வரை மேலரண் சாலை வழியாக உயர்மட்ட சாலை அமைத்தல் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல்
4. திருச்சி மாநகரில் ஓடத்துறை காவிரி பாலம் முதல் (மாநகர மாநில நெடுஞ்சாலை 9-ல் கி.மீ. 316/4) அண்ணாசிலை மற்றும் கலைஞர் அறிவாலயம் வழியாக மல்லாட்சிபுரம் வரை (விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் பணி) (மாநகர மாநில நெடுஞ்சாலை - 153-ல் கி.மீ. 142/6) உயர்மட்ட சாலை வழித்தடம் அமைக்கும் பணி. (விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் பணி)
5. திருச்சி நீதிமன்ற ரவுண்டானாவிலிருந்து வெளிவட்ட சாலையினை சுண்ணாம்புக்காரன்பட்டியில் இணைக்கும் வட்ட சுற்றுச்சாலை கி.மீ 0/0-8/4 அமைத்தல் பணி. (விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் பணி)
6. திருச்சி - மேலூர் - மதுரை - சாலை கி.மீ. 3/6-ல் கோரையாற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் திரும்பக்கட்டுதல் பணி. (விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் பணி)

திருச்சிராப்பள்ளி கிழக்கு வட்டத்திற்கு உட்பட்ட கீழ்கண்ட பகுதியில் பாலங்கள் அமைத்தல்.

1. அண்ணாசிலை முதல் மல்லாச்சிபுரம் வரை.
2. சிந்தாமணி சிதம்பர மஹால் அருகே உள்ள பாலத்தை அகலப்படுத்துதல்.
3. தேவதானம் - ஓயாமாரி இரயில்வே மேம்பாலம் கட்டி முடித்தல்.
4. உடையான்பட்டி - கே.கே.நகர், இரயில் விஹார் - இரயில்வே லெவல் கிராசிங்குகளில் புதிதாக மேம்பாலம் கட்டுதல்.
5. சிந்தாமணி - அண்ணாசிலை சந்திப்பு, புனித வளனார் கல்லூரி - மெயின்கார்டு கேட்சந்திப்பு மேலப்புதூர் ஆகிய நடைப்பாதையில் சுரங்க நடைபாதை அமைத்தல்.

திருவெறும்பூர் வட்டம்

1. திருச்சி அரைவட்ட சுற்றுச்சாலை அமைத்தல் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல்


2. திருவெறும்பூர் பர்மா காலனிகரை சாலை முதல் தகவல் தொழில்நுட்ப பூங்கா இணைப்பு சாலை கி.மீ.0/0-18/100 வரை தரம் உயர்த்துதல்
3. திருவெறும்பூர் தேனீர்பட்டி முன்னாள் ராணுவத்தினர் குடியிருப்பு முதல் வெண்ணமுத்துப்பட்டி சாலை கி.மீ. 0/0-0/780 வரை தரம் உயர்த்துதல்
4. திருவெறும்பூர் சூரியூர் சாலை முதல் சேட்டிலைட் நகரம் அண்ணா நகர் சாலை கி.மீ. 0/0-4/6 வரை தரம் உயர்த்துதல்.
5. திருவெறும்பூர் சூரியூர் முதல் விராம்பட்டி சாலை கி.மீ. 0/0-4/300 வரை தரம் உயர்த்துதல்.
6. திருவெறும்பூர் சூரியூர் முதல் பழங்கானங்குடி(வழி) புலாங்குடி சாலை கி.மீ. 0/0 - 5/0 வரை தரம் உயர்த்துதல்.
7. திருவெறும்பூர் அரசங்குடி மேல்நிலைப்பள்ளிலிருந்து வெள்ளைக்கரை வரை தார் சாலையினை தடுப்பு சுவர் அமைத்து அகலப்படுத்துதல்.
8. திருவெறும்பூர் வட்டம் திருவெறும்பூர் வடக்கு ஒன்றியத்தில் அனைத்து சாலைகளையும் அகலப்படுத்தி மேம்படுத்துதல்.
9. திருவெறும்பூர் வட்டத்தில் கனரக வாகனங்கள் செல்வதற்கும், போக்கு வரத்து நெரிசலை கட்டுப்படுத்தவும் திருச்சி - சென்னை தேசிய நெடுஞ்சாலையை சென்றடையும் வகையில் துவாக்குடி சுங்கச்சாவடியிலிருந்து அரை வட்ட, சுற்றுசாலை சாலை அமைத்தல்.
10. திருவெறும்பூர் வட்டம் திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியம், குவளக்குடி ஊராட்சியில் உள்ள வீதிவடங்கத்தில் இருந்து SIT சாலையினை இணைக்கும் வகையில் உய்யக்கொண்டான் கரையில் சாலை அமைத்தல்.
11. திருவெறும்பூர் முதல் கூத்தப்பார் வழியாக பத்தாளப்பேட்டை செல்லும் மாவட்ட சாலையினை (MDR) அகலப்படுத்தி தரம் உயர்த்தி தர நடவடிக்கை மேற்கொள்ளுதல்
12. திருவெறும்பூர் முதல் கூத்தப்பார் வரை செல்லும் தார்சாலையினை ஆக்கிரமிப்புகளை அகற்றி 7 மீட்டர் சாலையாக அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்.



13. திருவெறும்பூர் வட்டத்தில், தஞ்சை தேசிய நெடுஞ்சாலையிலிருந்து (சாந்தி தியேட்டர்) முதல் உய்யக்கொண்டான் கரையில் உள்ள தார்சாலையை இரயில்வே கேட் வரை மாவட்ட பெருஞ்சாலையாக மாற்றி அகலப்படுத்தி மேம்படுத்துதல்.
14. திருவெறும்பூர் வட்டத்தில், தஞ்சை சாலையிலிருந்து கிளி வாய்க்கால் கரை வேங்கூர் ரோடு வரை புதிய தார்சாலை அமைத்தல்.
15. திருவெறும்பூர் வட்டம், திருவெறும்பூர் 40-வது வார்டில் இலகுரக வாகனங்கள் செல்லும் வகையில் பழைய பேருந்து நிலையத்தையும் ஆஞ்சநேயர் கோவில் சாலையையும் இணைக்கும் வகையில் இரயில்வே சுரங்கப்பாதை நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
16. திருவெறும்பூர் வட்டம், துவாக்குடி நகராட்சியில் மக்கள் வசிக்கும் மிகவும் நெருக்கடியான பகுதியான அண்ணாவளைவு முதல் அய்யம்பட்டி சாலையில் அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்படுகிறது. இந்த சாலையை மாநில நெடுஞ்சாலைத்துறை பராமரித்து வந்தாலும் இப்போது வரை மண்டல பொறியியல் கல்லூரிக்கு சொந்தமான இடம் என்றே உள்ளது. எனவே, இதை நெடுஞ்சாலைத்துறைக்கு பெயர் மாற்றம் செய்து இந்த சாலையை இருவழி சாலையாக அமைத்து தரப்பட வேண்டும்.
17. திருவெறும்பூர் வட்டம், முதல் அய்யம்பட்டி செல்லும் சாலையில் வ.உசி நகர் பகுதியில் உள்ள பாலம் பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே, பழுதடைந்துள்ள பாலத்தினை சரிசெய்து இரண்டு வழித்தடம் செல்லும் பாலமாக மாற்றி அமைத்து தருதல்,

இலால்குடி வட்டம்

1. பொதுமக்களின் பயணத்தின் போது ஏற்படும் இடையுறுகளை தவிர்க்கும் பொருட்டு இலால்குடி - செங்கரையூர் - மணக்கால் என்ற இடத்திலும் மற்றும் புள்ளம்பாடி - திருமழப்பாடி சாலையிலும் புதிதாக இரயில்வே மேம்பாலம் கட்டுதல்



2. இலால்குடி வட்டம் ஊராட்சி ஒன்றிய கட்டுப்பாட்டில் உள்ள பின்வரும் சாலைகளை நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றம் செய்தல்
   - பரமசிவபுரம் - பம்பரமசுற்றி - திருமணமேடு - டி.வளவனூர் - புதுத்தெரு - எசனைக்கோரை வழியாக வரும் தாளக்குடி சாலை
   - அகலங்கநல்லூர் - கீழ்மாரிமங்களம் வழியாக வரும் நெய்க்குப்பை சாலை
   - பல்லபுரம் - குமுளுர் விவசாயக் கல்லூரி சாலை
   - நகர் - தர்மநாதபுரம் - மகிழம்பாடி சாலை
   - அகலங்கநல்லூர் - திருமங்கலம் சாலை
   - நகர் - கீழ்ப்பெருங்காவூர் - மருதூர் சாலை
   - கீழப்பெருங்காவூர் - மேலப்பெருங்காவூர் - வீ.துறையூர் சாலை
   - வாளாடி - எசனைக் கோரை புதுத்தெரு - தண்டாங்கோரை
   - கொப்பாவளி - சாத்தமங்கலம் - ஆனந்திமேடு
   - அன்பில் - குறிச்சி - மேட்டுப்பட்டி
   - கீழ்அன்பில் - பருத்திக்கால் - திண்ணியம்
   - புள்ளம்பாடி - செம்பரைச் சாலை
   - புஞ்சை சங்கேந்தி - வந்தலை - காணக்கிளியநல்லூர்
   - புஞ்சை சங்கேந்தி - வந்தலை கூடலூர்
   - வந்தலை கூடலூர் - வந்தலை - விடுதலைபுரம்
   - சிறுகளப்பூர் - காணக்கிளியநல்லூர்
   - காணக்கிளியநல்லூர் - பெருவளப்பூர் - ரெட்டிமாங்குடி
   - விடுதலைபுரம் - கொளக்குடி - ரெட்டிமாங்குடி
   - அகரம் - நெடுங்கூர்
   - ஊட்டத்தூர் - சொக்கலிங்கபுரம்
   - தெரணிப்பாளையம் - தெரணி
   - கருடமங்கலம் - நல்லூர்
   - சரடமங்கலம் - கருடமங்கலம்
   - ஒரத்தூர் - கண்ணனூர் - சரடமங்கலம்
   - கல்லகம் - சாத்தப்பாடி - ஒரத்தூர் - மால்வாய்
   - சாத்தப்பாடி - சில்லக்குடி
   - மால்வாய் - ஆமரசூர் - கீழரசூர்
   - மேலரசூர் - ஆமரசூர் - தென்னரசர்
   - மேலரசூர் - வரகுப்பை
   - கல்லக்குடி - வரகுப்பை
   - அழுந்தலைப்பூர் - மால்வாய்
   - பெருவளப்பூர் - சிறுகளப்பூர்
3. இலால்குடி வட்டம் உள்ள பின்வரும் சாலைகளை இருவழிச் சாலையாக தரம் உயர்த்துதல்
   - புள்ளம்பாடி - சிறுகளப்பூர் - ஊட்டத்தூர் - பாடாலூர் சாலை
   - புள்ளம்பாடி - ஆலங்குடி மகாஜனம் - செங்கரையூர் சாலை
   - அழுந்தலைப்பூர் - மால்வாய் - கல்லகம் சாலை
   - புவாளுர் - சிறுகனூர் சாலை
4. திருச்சி - சிதம்பரம் தேசிய நெடுஞ்சாலையில் டோல்கேட் முதல் வெள்ளனூர் வரை உள்ள சாலையை மேம்படுத்துதல்

மண்ணச்சநல்லூர் வட்டம்

1. சமயபுரம் அருகே NH 45 முதல் தொட்டியம் அருகே கிமீ 49/0-இல் NH 381B வரை பசுமை வழித்தடமாக அமைத்தல்
2. மண்ணச்சநல்லூர் நகருக்கு புறவழிச்சாலை கட்டம்-2 உருவாக்குதல்
3. மண்ணச்சநல்லூர் வட்டத்தில் மங்கம்மா சாலையை அகலப்படுத்தி மேம்படுத்துதல்
4. மண்ணச்சநல்லூர் வட்டத்தில், திருத்தலையூர் பகுதியிலுள்ள ஏரியின் அருகிலுள்ள பாலத்தினை உயர்மட்ட பாலமாக தரம் உயர்த்துதல்

துறையூர் வட்டம்

1. முசிறி - துறையூர் - ஆத்தூர் சாலையில் துறையூர் பிரிவு ரோடு முதல் முருகன் கோவில் வரை இருபுறமும் கழிவு நீர் வடிகால் அமைத்தல்.
2. துறையூர் ஊராட்சி ஒன்றிய எல்லைக்குட்பட்ட கிராமங்களில் செல்லும் நெடுஞ்சாலைத்துறையின் சாலைகளின் இருபுறமும் கழிவு நீர் வடிகால் அமைத்தல்.
3. துறையூர் நகராட்சி எல்லையில் அமைந்துள்ள நெடுஞ்சாலைத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பாலக்கரை பாலத்தினை அகலப்படுத்துதல் வேண்டும்.
4. துறையூர் வட்டத்திற்கு உட்பட்ட நெடுஞ்சாலைத்துறையின் சாலைகளில் உள்ள குழாய் பாலங்களை அகற்றி மேல்மட்ட பாலங்களாக மாற்றி அமைக்க வேண்டும்.
5. துறையூர் அரசு பொது மருத்துவமனைக்கு எதிரில் உள்ள தெருவில் வடிகால் வாய்க்கால் அமைக்கப்பட வேண்டும்.
6. துறையூர் அரசு பொது மருத்துவமனைக்கு எதிரில் உள்ள பிரிவு சாலையின் மையத்தில் உள்ள ஒரு புளியமரத்தினை அகற்றிட வேண்டும்.
7. துறையூர், சொரத்தூர், காளிப்பட்டி சாலையில் துறையூர் BYE-PASS சாலை இணைப்பில் ரவுண்டானா அமைக்கப்பட வேண்டும்.
8. துறையூர் கீரம்பூர் முதல் கோம்பை புதூர் சாலையை மேம்படுத்துதல்.
9. துறையூர் வி.அ.சமுத்திரம் ஊராட்சியில் அய்யாத்துபாலம் மற்றும் சாலை மேம்படுத்துதல்.

நெடுஞ்சாலைத்துறை

1. திருவெறும்பூர் வட்டம், துவாக்குடியிலிருந்து பால்பண்ணை வரை சர்வீஸ் ரோடு அல்லது உயர்மட்ட சாலை ஏதேனும் ஒன்றை விரைவில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்
2. திருவெறும்பூர் வட்டம், வார்டு எண்.48 பொன்மலை இரயில்வே ஜி-கார்னர் பகுதியில் இரயில்வே குடியிருப்பில் உள்ள மக்கள், தொழிலாளர்கள் வந்து போக Sub-way அமைத்து தர நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

உட்கட்டமைப்பு ஏற்படுத்துதல்

- கோட்டப்பொறியாளர், தேசியநெடுஞ்சாலை, திருச்சி, உதவிக்கோட்டப் பொறியாளர், தேசியநெடுஞ்சாலை, திருச்சி, உதவிக்கோட்டப் பொறியாளர், தேசியநெடுஞ்சாலை, தரக்கட்டுப்பாடு, திருச்சி மற்றும் உதவிப்பொறியாளர், தேசியநெடுஞ்சாலை, துறையூர் அலுவலகக் கட்டிடங்கள் கட்டுதல் - 4 கட்டிடங்கள்
- கண்காணிப்புப் பொறியாளர், கோட்டப் பொறியாளர் நபார்டு மற்றும் கிராமச்சாலைகள், திருச்சி, உதவிக்கோட்டப் பொறியாளர் / உதவிப்பொறியாளர் நபார்டு மற்றும் கிராமச்சாலைகள், திருச்சி / முசிறி அலுவலகக் கட்டிடங்கள் கட்டுதல். - 8 கட்டிடங்கள்
- கோட்டப்பொறியாளர் திட்டங்கள், திருச்சி, உதவிக்கோட்டப் பொறியாளர் / உதவிப்பொறியாளர் திட்டங்கள், திருச்சி I & II / ஸ்ரீரங்கம் அலுவலகக் கட்டிடங்கள் கட்டுதல். - 4 கட்டிடங்கள்
- அனைத்து அலுவலர்களுக்கும் பணிகளை மேற்பார்வையிட 10 எண்ணிக்கை ஈப்புகள் வேண்டும்.

திருச்சிராப்பள்ளி
மாவட்டம்

வீட்டு வசதித் துறை

தொலைநோக்குத் திட்டங்கள்

அடிப்படை விவரங்கள்

வட்டாரங்கள்	: 4
வீடுகள்	: 2947
அடுக்குமாடி குடியிருப்புகள்	: 324
அரசு ஊழியர் வாடகை குடியிருப்புகள்	: 1196
மனைகள்	: 10901

துறை சார் திட்டங்கள்

- சுயநிதித் திட்டத்தின் கீழ் குடியிருப்புகள் கட்டி பொது மக்களுக்கு ஒதுக்கீடு செய்தல்
- அரசு ஊழியர் வாடகை குடியிருப்புத் திட்டங்கள் செயல்படுத்துதல்
- மனை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் திட்டங்கள் செயல்படுத்தி மனைகளை பொது மக்களுக்கு ஒதுக்கீடு செய்தல்

மனித வளம்

வ. எண்	அலுவலர்	எண்ணிக்கை
1	செயற் பொறியாளர் (ம) நிர்வாக அலுவலர்	1
2	உதவி செயற் பொறியாளர்	2
3	உதவி பொறியாளர்	7
4	இளநிலை பொறியாளர்	0
5	நில அளவையாளர்	1
6	தொழில்நுட்ப உதவியாளர்	3
7	கோட்டக் கணக்கர்	1
8	உதவி வருவாய் அலுவலர்	1
9	காசாளர்	2
10	உதவியாளர்	5
11	இளநிலை உதவியாளர்	4
12	சுருக்கெழுத்து தட்டச்சர்	1
13	பண வசூலாளர்	1
14	ஆவண காப்பாளர்	1

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், திருச்சி வீட்டு வசதிப் பிரிவின் கீழ் மேற்கண்ட பணியாளர்கள் பணியாற்றி வருகின்றார்கள். மேலாளர் (விற்பனை (ம) சேவை) / கண்காணிப்பாளர், அலுவலக உதவியாளர் 3 தேவைப்படுகிறது.

பொது மக்களின் வீட்டு வசதித் தேவையினை நிறைவேற்றும் பொருட்டு தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தால் செயல்படுத்தப்படும் நடப்பு / தொலை நோக்கு திட்டங்கள்.

நடப்புத் திட்டம்

திருச்சிராப்பள்ளி கிழக்கு வட்டம் :

சுயநிதித் திட்டம்

தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம், திருச்சி வீட்டு வசதிப் பிரிவின் மூலமாக திருச்சி கிழக்கு வட்டம் வரகனேரியில் 192 அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ.9675.00 இலட்சங்கள் மதிப்பீட்டில் சுயநிதித் திட்டத்தின் கீழ் கட்டி பொது மக்களுக்கு ஒதுக்கீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக 56 உயர் வருவாய் பிரிவு அடுக்குமாடி குடியிருப்புகள் சுயநிதித் திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்டு பொது மக்களுக்கு ஒதுக்கீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

அரசு ஊழியர் வாடகை குடியிருப்புத் திட்டம்

திருச்சிராப்பள்ளி பழைய சுற்றுலா மாளிகை காலனியில் 32 - A வகை பிரிவு அடுக்குமாடி குடியிருப்புகள் , 80 - B வகை பிரிவு அடுக்குமாடி குடியிருப்புகள், 202 - C வகை பிரிவு அடுக்குமாடி குடியிருப்புகள், 150 - D வகை பிரிவு அடுக்குமாடி குடியிருப்புகள் ஆகமொத்தம் 464 அரசு ஊழியர் வாடகை குடியிருப்புகள் ரூ.10350.00 இலட்சங்கள் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு அரசு ஊழியர்களுக்கு வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.



தொலைநோக்குத் திட்டங்கள்

திருச்சிராப்பள்ளி கிழக்கு வட்டம் :

பொது மக்களின் தேவையின் அடிப்படையில் திருச்சி வரகனேரியில் 84 மத்திய வருவாய் பிரிவு அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் 52 குறைந்த வருவாய் பிரிவு அடுக்குமாடி குடியிருப்புகள் மொத்தம் 136 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

முசிறி வட்டம் :

திருச்சி மாவட்டம், முசிறி தாலுக்கா, முகிறி கிழக்கு கிராமத்தில் 20.51 ஏக்கர் நிலங்கள் சிறிய மற்றும் நடுத்தர நகரத் திட்டத்திற்காக பெறப்பட்டு 63 வீடுகள் கட்டப்பட்டு பொது மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 34 உயர் வருவாய் பிரிவு மனைகள், 138 மத்திய வருவாய் பிரிவு மனைகள் மற்றும் 114 குறைந்த வருவாய் பிரிவு மனைகள் ஆக மொத்தம் 286 அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகள் பொது மக்களுக்கு ஒதுக்கீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

மணப்பாறை வட்டம் :

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டத்தில் ஏற்கனவே பழுதடைந்த குடியிருப்புகளை இடித்துவிட்டு அதே இடத்தில் புதிதாக B வகை பிரிவு - 4 அடுக்குமாடி குடியிருப்புகள், C வகை பிரிவு - 12 அடுக்குமாடி குடியிருப்புகள், D - 42 அடுக்குமாடி குடியிருப்புகள் ஆகமொத்தம் 58 அரசு ஊழியர் வாடகை குடியிருப்புகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

திருவெறும்பூர் வட்டம் :

திருச்சிராப்பள்ளி வட்டம், நவல்பட்டு பகுதியில் 63 ஏக்கர் நிலங்கள் வீட்டு வசதி வாரியத்திற்கு சுவாதீனம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு 213 உயர் வருவாய் பிரிவு மனைகள், 176 மத்திய வருவாய் பிரிவு மனைகள், 137 குறைந்த வருவாய் பிரிவு மனைகள், 482 நலிவடைந்த பிரிவு மனைகள் தோராயமாக 1008 மனைகள் அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.



உட்கட்டமைப்பு ஏற்படுத்துதல்

திருச்சிராப்பள்ளி கிழக்கு வட்டம் :

- திருச்சி கிழக்கு தாலுக்கா, கே.கே.நகரில் அலுவலகக் கட்டிடம் 1.41 ஏக்கர் நிலப் பரப்பில் தூண் தளம் மற்றும் முதல் தளமானது 29295 சதுரஅடி கட்டிட பரப்பளவில் கட்டப்பட்டு 03/08/2022ல் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் திறக்கப்பட்டுள்ளது.
- புதிதாக உட்கட்டமைப்பு எதுவும் தேவைப்படாது.



திருச்சிராப்பள்ளி மாவட்டம்


தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்

தொலைநோக்குத் திட்டங்கள்





அடிப்படை விவரங்கள்



திருச்சி மாநகராட்சி குடிசைப் பகுதிகளின் விபரம் :

வ. எண்	மண்டலத்தின் பெயர்	குடிசைப் பகுதிகளின் எண்ணிக்கை	குடியிருப்புகளின் எண்ணிக்கை	ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புகளின் எண்ணிக்கை	பணிகள் நடைபெற்று வரும் குடியிருப்புகளின் எண்ணிக்கை	தேவையான குடியிருப்புகளின் எண்ணிக்கை
1	ஸ்ரீரங்கம்	63	7875	2555	348	4972
2	அரியமங்கலம்	79	8425	1415	63	6947
3	கோ. அபிஷேகபுரம்	60	5844	378	-	5466
4	பொன்மலை	60	7336	84	-	7252
	மொத்தம்	262	29480	4432	411	24637

மனித வளம்

வ. எண்	பதவியின் பெயர்	அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள்	பயன்பாட்டில் உள்ள பணியாளர்கள்	காலிபணியிடங்கள்
1	நிர்வாகப் பொறியாளர்	1	1	0
2	உதவி நிர்வாகப் பொறியாளர்	2	1	1
3	உதவி பொறியாளர்கள்/ இளநிலை பொறியாளர்	5	2	3
4	கோட்டக் கணக்காளர்	1	1	0
5	கண்காணிப்பாளர்	1	1	0
6	எஸ்டேட் அலுவலர்	1	1	0
7	நில அளவர்	2	1	1
8	வரைவாளர்	1	1	0
9	சுருக்கெழுத்து தட்டச்சர்	1	1	0
10	உதவியாளர்	4	0	4
11	இளநிலை உதவியாளர்	3	0	3
12	கணினி இயக்குபவர்	1	0	1



துறை சார் திட்டங்கள்

- உள்கட்டமைப்புகளுடன் வாழ்விடங்களிலேயே அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுதல்
- மாற்றிடங்களில் அடிப்படை மற்றும் சமூக கட்டமைப்பு வசதிகளுடன் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல்
- சிதிலமடைந்த அடுக்குமாடி குடியிருப்புகளை இடித்து மீண்டும் கட்டுதல்
- பயனாளிகள் தாமாக வீடுகள் கட்டுதல்
- நகரப்பகுதி ஏழை மக்களின் வாழ்விடங்களில் மேம்பாட்டு பணிகள்
- அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப்பகுதிகள் பராமரிப்பு மற்றும் மேம்பாடு

நில உரிமை / கிரையப்பத்திரங்கள் வழங்கல்

வ. எண்	விவரம்	மொத்தம்
1	மொத்த மேம்படுத்தப்பட்ட மனைகள்	3190
2	ஒதுக்கீடு செய்யப்பட்ட மனைகள்	3190
3	கிரையப்பத்திரங்கள் வழங்கப்பட்டவை	549
4	கிரையப்பத்திரங்கள் வழங்கப்பட வேண்டிய குடும்பங்களின் எண்ணிக்கை	2641

பிரதம மந்திரி வீட்டுவசதி திட்டம் (நகர்ப்புரம்) அனைவருக்கும் வீட்டுவசதி திட்டம்

பயனாளிகளின் பங்களிப்புடன் கூடிய அடுக்குமாடி குடியிருப்பு திட்டம்

- திருச்சி மாவட்டத்தில் 4432 குடியிருப்புகள் கட்டுமானப் பணி முடிக்கப்பட்டும், 411 குடியிருப்புகள் கட்டுமானப் பணி முடிவுறும் நிலையிலும் உள்ளன. இதில் 3572 குடியிருப்புகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பயனாளிகள் தாமாக வீடுகள் கட்டுதல் - தனி வீடுகள் கட்டுதல்

- திருச்சி மாவட்டத்தில் பயனாளிகள் தாமாக வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 8786 வீடுகள் பணிகள் முடிவுற்றும் 4136 வீடுகள் பணிகள் முன்னேற்றத்திலும் 1852 வீடுகள் பணிகள் தொடங்கப்படவும் உள்ளன.
- மொத்த வீடுகளின் எண்ணிக்கை - 14774
- திட்ட மதிப்பீடு - 443.22 (கோடியில்)

அடுக்குமாடிக் குடியிருப்புகளை பராமரித்தல் - புதிய அணுகுமுறை நம் குடியிருப்பு நம் பொறுப்பு

- கடந்த 15.07.2021 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆய்வின் போது, குடியிருப்போர் நலச் சங்கங்களை உருவாக்குவதற்கும் பராமரிப்பு குறித்து பொறுப்பேற்றுக் கொள்வதற்கும் வசதியாக நம் குடியிருப்பு நம் பொறுப்பு என்ற புதிய திட்டம் தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.
- இதுவரை 10 குடியிருப்போர் நல சங்கங்கள் அமைக்கப்பட்டு, அவற்றுள் 7 குடியிருப்போர் நல சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள குடியிருப்போர் சங்கங்களை உருவாக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.



VISION TRICHY

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்

தொலைநோக்குத் திட்டங்கள்

திருச்சி மாநகராட்சியில் 262 குடிசைப்பகுதிகளில் உள்ள 29,480 குடியிருப்புகளுக்கு 4436 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டும், 24,637 வீடுகள் தேவை எனவும் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, அடுத்த பத்து ஆண்டுகளில் 24,637 வீடுகள் கட்டுவதன் மூலம் குடிசையே இல்லாத நிலையை அடைதல்.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி - திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டத்தில் உள்ள பஞ்சப்பூர் கிராமத்தில் பழைய சர்வே எண். 46/3, 47/1 முதல் 6 வரை புதிய சர்வே எண். 11/4, 12/1 முதல் 6 வரை 14.94 ஏக்கரில் மொத்தம் 2390 குடியிருப்புகள் கட்டுதல்.

திருவெறும்பூர் வட்டத்தில் திருவெறும்பூர், வேங்கூர் ரோட்டில் இந்திரா நகர் மேட்டுக்கொள்ளைத்தெரு, பர்மா காலணி, வள்ளுவர் நகர், ஒட்டம்பாறை ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு இந்த வாரியத்தின் மூலம் வீடு கட்டித்தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

துறையூர் நகராட்சி, உப்பிலியபுரம் பேரூராட்சி, பாலகிருஷ்ணம்பட்டி பேரூராட்சி Slum Area பகுதிகளில் வீடுகள் கட்டுதல்.



உட்கட்டமைப்பு ஏற்படுத்துதல்

பயனாளிகளின் பங்களிப்புடன் கூடிய அடுக்குமாடி குடியிருப்பு கட்டுவதற்கு தேவையான நிலம் கேட்பு படிவம் - பஞ்சப்பூர் - பழைய சர்வே எண். 46/3 , 47/1 முதல் 6 வரை புதிய சர்வே எண். 11/4,12/1 முதல் 6 வரை - 14.94 ஏக்கர், கொட்டப்பட்டு - சர்வே எண். 8,3 - 19.10 ஏக்கர் - மொத்தம் - 34.04 ஏக்கர் நிலப்பரப்பளவில் குடியிருப்புகள் கட்டப்படுவதன் மூலம் குடிசையில்லா தொலைநோக்கு திட்டத்தை அடையலாம்.

மனித வளம் மேம்படுத்துதல்


அனைவருக்கும் வீடு கட்டும் திட்டம் திருச்சி மாநகராட்சி மற்றும் உள்ளூர் திட்டக்குழும பகுதிகள், துவாக்குடி, மணப்பாறை, இலால்குடி, முசிறி, துறையூர் மற்றும் 14 பேரூராட்சிகள் அடங்கிய பகுதிகளில் மேலும் சிறப்பாக செயல்படுத்த 1 உதவி நிர்வாகப் பொறியாளர், 3 உதவி பொறியாளர்கள், 1 நில அளவர், 4 உதவியாளர்கள், 3 இளநிலை உதவியாளர்கள் மற்றும் 1 கணினி இயக்குபவர் ஆகிய 13 பணியாளர்கள் தேவைப்படுகிறது.



திருச்சிராப்பள்ளி மாவட்டம்

பொருள்இயல் & புள்ளிஇயல் துறை

தொலைநோக்குத் திட்டங்கள்



மனித வளம்

பதவியின் பெயர்	ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள்	நிரப்பப்பட்டுள்ள பணியிடம்	காலிபணியிடம்
புள்ளிஇயல் துணை இயக்குநர்	1	1	
கோட்ட புள்ளிஇயல் உதவி இயக்குநர்	3	3	-
புள்ளிஇயல் அலுவலர்	3	3	-
மாவட்ட தலைமையிட புள்ளிஇயல் ஆய்வாளர்	2	2	-
கோட்ட புள்ளிஇயல் அலுவலக தலைமையிட புள்ளிஇயல் ஆய்வாளர்	2	1	1
வட்டார புள்ளிஇயல் ஆய்வாளர்	14	14	-
புள்ளிஇயல் உதவி ஆய்வாளர் (அங்காடி புலனாய்வுத்திட்டம்)	4	-	4
புள்ளிஇயல் உதவி ஆய்வாளர் (தேசிய மாதிரி ஆய்வு திட்டம்)	2	2	-
உதவியாளர்	1	1	-
இளநிலை உதவியாளர்	1	1	-
தட்டச்சர்	1	1	-
பதிவறை எழுத்தர்	1	-	1
அலுவலக உதவியாளர்	1	-	1
நிரந்தர முழுநேரக்காவலர்	1	-	1
மொத்தம்	37	29	8

தேவையான மனித வளம் : மேற்காணும் 37 பணியிடங்களில் 29 நிரப்பப்பட்டுள்ளன. 8 பணியிடங்கள் நிரப்பப்படவேண்டும்



துறை சார் திட்டங்கள்

இத்துறையில் அடிப்படை புள்ளிவிவரங்கள் சேகரித்தல், வருவாய் துறையினரால் மேற்கொள்ளப்படும் மக்கள் தொகை கணக்கெடுப்பு, சிறுபாசன கணக்கெடுப்பு, வேளாண்மைக் கணக்கெடுப்பு ஆகியவற்றில் ஒருங்கிணைந்து செயல்படுதல்.

தொலைநோக்குத் திட்டங்கள்

வேளாண் சார்ந்த திட்டங்கள் :

விளைச்சல் மதிப்பீடுகளை கணக்கிடும் பொருட்டு குறுவட்ட, வட்டார, வட்ட மற்றும் மாவட்ட அளவிலான பயிர் சாகுபடி ஒத்திசைவு கூட்டங்களில் கலந்துகொண்டு, பயிர் பரப்பு விவரங்களை இறுதி செய்தல்.

பொது பயிர் மதிப்பீட்டாய்வுத் திட்டம் :

பொது பயிர் மதிப்பீட்டாய்வு திட்டத்தின்கீழ் அந்தந்த பருவத்தில் பல்வேறு பயிர்களின் விளைச்சல் மதிப்பீடு செய்தல்.

விவசாயக்கூலி விவரம் :

வட்டாரத்திற்கு ஒரு கிராமம் வீதம் அந்தந்த மாதத்தில் நடைபெற்ற விவசாய பணிகளின் விவரம், ஆண்கள் மற்றும் பெண்களுக்கு கொடுக்கப்பட்ட குறைந்த மற்றும் அதிக கூலித்தொகை விவரங்கள் சேகரித்தல்

பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத்திட்டம் (PMFBY)

பாரத பிரதமர் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பல்வேறு பயிர்களுக்கு பயிர் அறுவடை பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு விளைச்சல் இழப்பீட்டின் அடிப்படையில் விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு கிடைக்க செய்தல்

உரிய காலத்தில் பயிர் மதிப்பிடும் திட்டம் : (டி.ஆர்.எஸ்)

இத்திட்டத்தின்கீழ் தேசிய அளவில் முக்கியத்துவம் வாய்ந்த 9 பயிர்களுக்கு 3 பருவங்களில் பயிர் பரப்பு விவரங்கள் மற்றும் உற்பத்தி மதிப்பீடு முறையே அக்டோபர்-28 ஜனவரி -28 மற்றும் மார்ச் -28 ஆகிய நாட்களில் வட்டார அளவில் சேகரித்தல்.

தென்னை மற்றும் கமுகு ஆய்வுத் திட்டம் :

தென்னை மற்றும் கமுகு ஆய்வுத் திட்டத்தின்கீழ் எதேச்சை முறையில் ஒரு வட்டாரத்திற்கு 2 தோப்புகள் வீதம் தென்னை மரங்களின் எண்ணிக்கை மற்றும் விளைச்சல் மதிப்பீடு செய்தல்.

பயிர் மேம்பாட்டுத் திட்டம் :

பயிர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மாவட்ட அளவில் 7 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 4 கொத்துகளில் 5 சர்வே-சப்டிவிஷன் மூலம் மொத்தம் 20 சர்வே / சப்டிவிஷன்களில் நேரடி கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு ஒவ்வொரு பருவத்திலும் பயிர் பரப்பாய்வு, பயிர் பதிவு, பயிர் பரப்பு கூட்டுத்தொகை, பயிர் அறுவடை ஆகிய விவரங்கள் சேகரித்தல்.

விற்பனை மிகுதித்திட்டம் :

விற்பனை மிகுதித்திட்டத்தின்கீழ் நெற்பயிரின் ஒவ்வொரு பருவத்திலும் அறுவடையான தானிய நெல்லின் மொத்த அளவு, கூலி விவரம், வீட்டு உபயோகம், உறவினர்களுக்கு கொடுக்கப்பட்டது. மற்றும் ஒழுங்கு முறை விற்பனை கூடத்திற்கோ அல்லது மொத்த வியாபாரிகளுக்கோ விற்பனை செய்யப்பட்ட நெல்லின் அளவு ஆகிய விவரங்கள் சேகரித்தல்.

மாவட்ட ஜி அறிக்கை :

கிராம வாரியான ஜி அறிக்கையின் அடிப்படையில் மாவட்ட அளவில் பயிர் செய்யப்பட்ட பரப்பு ஒன்பது வகை நிலபாகுபாடு, நீர் பாசன ஆதாரம் போன்ற விவரங்கள் கொண்டு மாவட்ட ஜி அறிக்கை தயாரித்தல்.

சிறுபான்மைப் பயிர், பழம் மற்றும் காய்கறித் திட்டம் :

இத்திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்தில் விளைவிக்கப்படும், பழங்கள், காய்கறிகள், பணப்பயிர்கள் மற்றும் தோட்டப்பயிர்கள் ஆகியவற்றின் சராசரி மகசூல், உற்பத்தி மதிப்பீடு, மரங்களின் எண்ணிக்கை, சாகுபடி முறை ஆகிய விவரங்கள் சேகரித்தல்.

VISION TRICHY

பொருள்இயல் & புள்ளிஇயல் துறை

வேளாண் சாராத திட்டங்கள் :

அங்காடி புலனாய்வுத் திட்டம் :

அங்காடி புலனாய்வுத்திட்டம் மூலமாக பல்வேறு மையங்களில் ஒவ்வொரு வாரம் மற்றும் மாதத்தில் உணவு மற்றும் உணவு சாராத பொருட்களின் விலையில் ஏற்றத்தாழ்வு, அங்காடி நிலவரம், பொருட்களின் தேவை, வரத்து, அனுப்புகை ஆகிய விவரங்கள் சேகரித்தல்.

நுகர்வோர் விலைக்குறியீட்டெண் :

இத்திட்டத்தின் மூலம் கிராமபுறம் மற்றும் நகர் புறங்களில் நுகர்வோர் பயன்படுத்தும் உணவு மற்றும் உணவு சாராத பொருட்களின் விலை விவரங்கள் சேகரிப்பதன் மூலம் நுகர்வோர் விலைக்குறியீட்டெண் கணித்தல்.

மழைப்புள்ளி விவரம்

ஒவ்வொரு மாதமும் 24 மழைமானி நிலையங்களில் பதிவு செய்யப்படும் மழைப் புள்ளி விவரங்கள், மாதாந்திர, ஆண்டு சராசரி மழையளவு, பருவ வாரியான மழைப்புள்ளி விவரங்கள் சேகரித்தல்.

மாநில கணக்கு :

உற்பத்தி, நுகர்வு, மூலதன ஆக்கம் ஆகியவை கொண்டு மாவட்ட வருவாய் மதிப்பீடு செய்ய மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, மற்றும் ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து தணிக்கை செய்யப்பட்ட வரவு - செலவு கணக்கு விவரங்கள் சேகரித்தல்.

மொத்த உற்பத்தி விலை குறியீட்டெண், மாதாந்திர உற்பத்தி குறியீட்டெண் திட்டங்கள் :

அரசின் திட்டமிடல் கூலி நிர்ணயம், விலைக் கட்டுப்படுத்துதல், ஆதார விலை, விலை நிர்ணயம், ஆகிய விவரங்கள் மூலம் மொத்த உற்பத்தி விலை குறியீட்டெண், மாதாந்திர உற்பத்தி குறியீட்டெண் கணிக்க பல்வேறு நிறுவனங்களிலிருந்து மாதாந்திர அளவில் புள்ளி விவரங்கள் சேகரித்தல்.

நிலையான வளர்ச்சி இலக்குகள் - (SDG)

SDG - திட்டத்தின் மூலம் மாவட்ட அளவில் வளர்ச்சியினை கணிப்பதற்கு 104 குறியீடுகள் மற்றும் மாவட்ட நல்லாட்சியினை (SDG) கணிப்பதற்கு மாவட்ட அளவில் 75 வளர்ச்சிக்கான குறியீடு விவரங்கள் சேகரித்தல்.

கட்டிடப்புள்ளிஇயல், கால்நடை மற்றும் கால்நடை பொருட்களின் விலை விவரங்கள் :

ஒவ்வொரு காலாண்டிற்கான கட்டிடப் புள்ளிஇயல், கால்நடை மற்றும் கால்நடை பொருட்களின் விலை விவரங்கள் சேகரித்தல்.

ஆண்டுத்தொழில் ஆய்வு :

இத்திட்டத்தின் மூலம் சேகரிக்கப்படும் விவரங்களைக் கொண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி கணித்தல்.

கையேடுகள் :

மாவட்ட புள்ளிஇயல் கையேடு, மாநகராட்சி புள்ளிஇயல் கையேடு, நகராட்சி புள்ளிஇயல் கையேடு, வட்டார புள்ளிஇயல் கையேடு ஆகிய கையேடுகளுக்கான விவரங்கள் சேகரித்தல்.

ஆய்வுகள் :

தேசிய மாதிரி ஆய்வு, 11-வது வேளாண்மை கணக்கெடுப்பு, பொருளாதார கணக்கெடுப்பு, வயது முதிர்ந்தோர் ஆய்வு, தமிழ்நாடு குடும்பங்கள் பற்றிய தொடராய்வு, கோவிட்-19 (தொலை பேசி வழி ஆய்வு) ஆய்வுகள் மூலம் சேகரிக்கப்படும் விவரங்கள் அரசின் திட்டமிடல் மற்றும் கொள்கை முடிவுக்கு பயன்படுத்துதல்.

வீட்டுவசதித் திட்டம் :

வீட்டு வசதித் திட்டத்தின் வாயிலாக மாநகராட்சி, நகராட்சி மற்றும் வட்டார அளவில் மேற்கொள்ளப்பட்ட அரசு மற்றும் தனியார் கட்டிடங்களின் நடவடிக்கை, கட்டிடப்பொருட்களின் விலை, கட்டுமான தொழிலாளர்களின் கூலி ஆகிய விவரங்கள் சேகரித்தல்.

உட்கட்டமைப்பு ஏற்படுத்துதல்

1. இலால்குடி கோட்டப் புள்ளிஇயல் உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு புதிதாக கட்டிடம் கட்டுதல்
2. புதிதாக பிரிக்கப்பட்டுள்ள ஸ்ரீரங்கம் கோட்டத்திற்கு கட்டிடம் கட்டுதல்



மாவட்ட அளவிலான குழு

பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை

(Need Base)

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

சுற்றுலாத்துறை

தொலைநோக்குத் திட்டங்கள்



அடிப்படை விவரங்கள்

ஆன்மீக சுற்றுலாத் தலங்கள்

- ஸ்ரீரங்கம்
- மலைக்கோட்டை
- சமயபுரம்
- திருவானைக்காவல்
- திருவெறும்பூர்
- திருப்பட்டூர்
- திருவெள்ளரை
- திருப்பைஞ்சீலி
- திருஈங்கோய்மலை
- வயலூர் முருகன் கோயில்
- உறையூர் வெக்காளியம்மன்
- குணசீலம்
- சுந்தராஜ பெருமாள் கோயில் மேலன்பில்
- ஐயப்பன் கோயில்
- திருப்பராய்துறை
- கல்லுக்குழி
- அக்கரைப்பட்டி சாய்பாபா
- பொன்னர்-சங்கர் கோயில்
- பிரம்மபுரீஸ்வரர் கோயில், கீழன்பில்
- மாரியம்மன் கோயில், கீழன்பில்
- உத்தமர்கோயில்
- கோரங்நாதசுவாமி கோவில், ஸ்ரீனிவாசநல்லூர்
- சுத்தரத்னேஸ்வரர் கோயில், ஊட்டத்தூர்
- புனித லூர்து அன்னை தேவாலயம்
- புனித தோமர் தேவாலயம்
- நத்தர்வலி தர்ஹா

மொத்தம் : 26

பொழுதுபோக்குச் சுற்றுலாத்தலங்கள்

- முக்கொம்பு
- வண்ணத்துப்பூச்சி பூங்கா
- பச்சமலை
- புளியஞ்சோலை

மொத்தம் : 4

அறிவு சார் சுற்றுலாத் தலங்கள்

- அண்ணா அறிவியல் கோளரங்கம்
- இரயில்வே அருங்காட்சியகம்
- திருச்சிராப்பள்ளி மாவட்ட அருங்காட்சியகம்
- திருச்சிராப்பள்ளி மாவட்ட நூலகம்
- முதல் உலகப்போர் நினைவுச் சின்னம், இலால்குடி

மொத்தம் : 5

தொல்லியல் துறைசார் சுற்றுலாத் தலங்கள்

- மலைக்கோட்டை (2 -குடைவரைக் கோவில்)
- திருவெறும்பூர்
- திருவெள்ளரை (ஸ்வஸ்திக் கிணறு)
- கோரங்நாதசுவாமி கோவில், ஸ்ரீனிவாசநல்லூர்
- பச்சில் அமலேஸ்வரர் கோயில், அழகியமணவாளம்
- மன்னை பிடாரியம்மன் கோயில், மண்ணச்சநல்லூர்
- கைலாசநாதர் கோயில், ஆலம்பாக்கம், புள்ளம்பாடி.
- அகஸ்தீஸ்வரர் கோயில், பெருங்குடி.
- கைலாயமுடையார் கோயில், சோழமாதேவி

மொத்தம் : 9

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தமிழ்நாடு விடுதி விவரங்கள்

பழைய கட்டிடம்		புதிய கட்டிடம்	
அறைகளின் விவரம்	மொத்த எண்ணிக்கை	அறைகளின் விவரம்	மொத்த எண்ணிக்கை
சூட் அறை	2	சூட் அறை	2
குடும்ப அறை	2	டீலக்ஸ் அறை	13
டீலக்ஸ் அறை	11		
மொத்தம்	15	மொத்தம்	15
பார்	1	கூட்டரங்கம்	1
கூட்டரங்கம்	1		





அறிவிப்புகள்

2021-22 :

- தமிழ்நாட்டில் அறிவிக்கப்பட்ட 300 சுற்றுலாத் தலங்களில் தற்போது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 10 சுற்றுலாத் தலங்களை (ஸ்ரீரங்கம், திருவானைக்காவல், மலைக்கோட்டை, திருப்பட்டூர், சமயபுரம், வெக்காளியம்மன் திருக்கோயில், கமலவள்ளி நாச்சியார் திருக்கோவில், உத்தமர் கோவில், திருவெள்ளரை, மேலன்பில் மற்றும் அக்கரைப்பட்டி சாய்பாபா கோவில்) சர்வதேசத் தரத்திற்கு இணையான வசதிகளை ஏற்படுத்த சுற்றுலா பெருந்திட்டம் (Master Plan) தயாரிக்கப்படும்.
- தமிழ்நாட்டின் சுற்றுலா இடங்களை மேம்படுத்த, சுற்றுலாத் தலங்கள் வளர்ச்சித் திட்டம் (Tourism Destination Deveopment Scheme) உருவாக்கப்படும்.
- திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பச்சமலை பகுதியில் சுற்றுச் சூழல் திறந்தவெளி முகாம்கள் (Eco Camping Sites) ஏற்படுத்தப்படும்.
- சுற்றுலா விருந்தோம்பல் திறன் மேம்பாடு மற்றும் சான்றிதழ் திட்டம் தொடர்பான படிப்பு (Tourism Hospitality Skill Development and Certification Programme) அறிமுகப்படுத்தப்படும்.
- சுற்றுலாத்துறை சார்ந்த தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் வகையில் சுற்றுலா விருது (Tourism Award) வழங்கப்படும்.

2022-23 :

- சுற்றுலாத்துறை பிற துறைகளுடன் இணைந்து தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்களில் புதிய சாலைகள் அமைத்தல், தற்போதுள்ள சாலைகளை மேம்படுத்துதல், உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும் (நெடுஞ்சாலைத் துறை - ரூ.100 கோடி ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை - ரூ.50 கோடி)
- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் ஒரு நாள் திருப்பதி சுற்றுலா திருச்சியிலிருந்து தினந்தோறும் விரைவு தரிசன வசதியுடன் தொகுப்பு பயணம் தொடங்கப்படும்.
- சுற்றுலா வழிகாட்டிகள் பதிவு செய்யவும் அவர்களின் திறனை மேம்படுத்தவும் ரூ.50 இலட்சம் மதிப்பில் ஒரு புதிய திட்டம் தொடங்கப்படும்.

VISION TRICHY

சுற்றுலாத்துறை

துறை சார் திட்டங்கள்

- தமிழ்நாட்டிலுள்ள 300 சுற்றுலாத் தலங்களில் சர்வதேசத் தரத்திற்கு இணையான வசதிகளை ஏற்படுத்த சுற்றுலா பெருந்திட்டம் (Master Plan) தயாரிக்கப்பட்டு வருகிறது.
- மாநிலத்தின் சுற்றுலா வளர்ச்சிக்காக தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை (Tamil Nadu Tourism) உருவாக்கப்பட்டு வருகிறது.
- தமிழ்நாட்டின் சுற்றுலா இடங்களை மேம்படுத்த, சுற்றுலாத் தலங்கள் வளர்ச்சித் திட்டம். (Tourism Destination Deveopment Scheme) உருவாக்கப்பட்டு வருகிறது.

மனித வளம்

சுற்றுலாத்துறை பணியாளர்களின் விவரங்கள் :

வ.எண்	பதவியின் பெயர்	எண்ணிக்கை
1	மாவட்ட சுற்றுலா அலுவலர்	1
2	உதவி சுற்றுலா அலுவலர்	2
3	உதவியாளர்	1
4	தட்டச்சர்	1
5	அலுவலக உதவியாளர்	1
6	அவுட்ஷோர்ஸ் பணியாளர்	1
	மொத்தம்	7

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்
தமிழ்நாடு விடுதி பணியாளர்களின் விவரங்கள் :

வ.எண்	பதவியின் பெயர்	எண்ணிக்கை
1	மண்டல மேலாளர்	1
2	மேலாளர்	1
3	நிரந்தரப் பணியாளர்கள்	6
4	அவுட்ஷோர்ஸ் பணியாளர்கள்	36
5	பாதுகாப்பு பணியாளர்கள்	5
	மொத்தம்	49

தொலைநோக்குத் திட்டங்கள்

திருச்சியில் சுற்றுலாப் பயணிகளின் தங்கும் கால அளவினை அதிகரிக்க தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஒரு நாள் சுற்றுலா, இரண்டு நாட்கள் சுற்றுலா, வார இறுதிச் சுற்றுலா, குழந்தைகளுக்கானச் சுற்றுலா, பொழுதுபோக்குச் சுற்றுலா, சுற்றுச்சூழல் சுற்றுலா, சாகசச் சுற்றுலா, ஆன்மீகச் சுற்றுலா ஆகிய பல்வேறு வகையானச் சுற்றுலாக்களை அறிமுகப்படுத்தி இயக்கலாம்.

சிறுவர்களை உற்சாகப்படுத்தும் விதமாக திருச்சிராப்பள்ளி மாவட்டம் மையப்பகுதியில் பொழுதுபோக்கு பூங்கா உருவாக்கலாம்.

கலச்சார சுற்றுலாவை ஊக்குவிக்கும் விதமாக மார்கழி மாதத்தில் ஸ்ரீரங்கத்தில் நடைபெறும் ஒரு மாத கால உற்வசத்தில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடத்திட ஏற்பாடு செய்யலாம்.

சுற்றுலாத்துறை சார்பாக சுற்றுச்சூழல் சுற்றுலா பச்சமலையில் ஆண்டுதோறும் ஜுன் மாதத்தில் மலைவாழ் மக்களுக்கான 2 நாட்கள் விழாவாக (Tribal Fest) நடத்த ஏற்பாடு செய்யலாம். அதில் மலைவாழ் மக்களின் நடனம், இசை, உணவு மற்றும் பராம்பரிய விளையாட்டுகள் போன்றவை இடம் பெறச் செய்யலாம்.

சாகசச் சுற்றுலாவை அறிமுகம் செய்யும் விதமாக பச்சமலையில் மாவட்ட வனத்துறையுடன் இணைந்து மலையேற்ற பயணம், மிதிவண்டி பயணம், படகு சவாரி, முகாம் தளங்களை உருவாக்குதல் ஆகியவற்றினை மேற்கொள்ளலாம்.

நலிந்த கலைகளை பாதுகாக்கும் பொருட்டு திருச்சிராப்பள்ளி மாநகரில் வார இறுதி நாட்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்த ஏற்பாடு செய்யலாம்.

சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையினை அதிகரிக்கவும், அவர்கள் தங்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க பச்சமலையில் மாவட்ட வனத்துறையின் மூலம் சுற்றுச்சூழல் விடுதி உருவாக்கலாம்.

மாநிலத்தில் முதன்மை பொழுதுபோக்குத் தலமாக முக்கொம்பு சுற்றுலாத் தலத்தை மேம்படுத்த கூடுதல் பொழுதுபோக்கு அம்சங்கள் மற்றும் கண்காட்சி அமைப்புகள் உருவாக்கலாம்.

அனைத்து சுற்றுலாத் தலங்களிலும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை உரியத்துறைகளின் மூலம் உருவாக்குதல்.

சுற்றுலாவினை மேம்படுத்த தனியாக இணையதள வசதி ஏற்படுத்தி, திருச்சிராப்பள்ளியிலுள்ள அனைத்துச் சுற்றுலாத் தலங்களின் நேரம், பூஜைகள், திருவிழாக்கள், நுழைவுக் கட்டணம் போன்ற அனைத்து விவரங்களையும் தெரிவிப்பதோடு, நிகழ்நிலை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கலாம்.

பச்சமலையில் அமைந்துள்ள கோரையாற்று அருவிக்கு செல்ல உரிய சாலை வசதி, பாதுகாப்பு வசதிகள், தகவல் பலகைகள் ஆகியவற்றை ஏற்படுத்தினால் கூடுதல் சுற்றுலாப் பயணிகள் கவரலாம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் தொன்மை மற்றும் வரலாற்றுச் சிறப்புகளை சுற்றுலாப் பயணிகளுக்கு எடுத்துரைக்கும் பொருட்டு ஆண்டுதோறும் நடைபெறும் உலகச் சுற்றுலா தினவிழாவின் போது திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள தொன்மையான இடங்களில் பாரம்பரிய நடைபயணம் நடத்திடலாம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மாதிரி கிராமத் தினை உருவாக்கி அங்கு நமது பாரம்பரிய உணவுகள், தொழில்கள், கலாச்சரா பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை சுற்றுலாப் பயணிகளுக்கு காட்சிப்படுத்தினால் அதிகளவு சுற்றுலாப் பயணிகள் வருவதற்கு ஒரு வாய்ப்பாக அமையும்.

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கவும், அவர்களின் தங்கும் கால அளவினை அதிகரிக்கும் விதமாக பயணத் திட்டங்களும், பார்க்கும் இடங்களையும் மேம்படுத்திடலாம்.

திருச்சிராப்பள்ளி சிறந்த தூய்மையான, நெகிழியற்ற சுற்றுலாத் தலங்கள் நிறைந்த மாவட்டமாக மாற்ற முனைப்புடன் செயல்படலாம்.



திருச்சிராப்பள்ளி சட்டமன்ற தொகுதியில் சாத்தனூர் (அ) கொல்லாங்குளம், சின்ன ஏரி, ஆலத்துடையான்பட்டி ஏரி, சிறுநாவலூர் ஏரி, மண்ணச்சநல்லூர் குளம், கண்ணூத்து ஏரியில் படகு சவாரி ஏற்பாடு செய்தல்.

திருவரங்கம் மேலூர் வண்ணத்துப்பூச்சி பூங்காவை விரிவுபடுத்தல், வண்ணத்துப்பூச்சி பயன்களை அறியும் வகையில் வண்ணத்துப்பூச்சி பற்றி குழந்தைகளுக்கு அறிவுசார் சுற்றுலாவை செயல்படுத்துதல்

திருவரங்கம் வண்ணத்துப்பூச்சி பூங்கா முதல் முக்கொம்பு பூங்கா வரை இடையே உள்ள வனத்துறை இடத்தில் பல்லுயிர் வனமாக அமைத்தல்

திருவெறும்பூர் வாழவந்தான் கோட்டை ஏரியினை சுற்றுலா மையமாக மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்

திருவெறும்பூரில் அமைந்துள்ள புகழ்பெற்ற அருள்மிகு எறும்பீஸ்வரர் திருக்கோவிலுக்கு அடிப்படை வசதிகள் மற்றும் திருக்கோவிலைச் சுற்றியுள்ள கிரிவலப் பாதையை மேம்பாடு செய்து, பக்தர்கள் மற்றும் பயணிகளுக்கு பயன்படும் வகையில் மேம்பாடு செய்தல்.

துறையூர் அம்மாம்பாளையம் அருகில் உள்ள வரையாறு அருவியினை சுற்றுலா தலமாக அறிவித்து அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தி தருதல்.

மண்ணச்சநல்லூர் ஆன்மீக சுற்றுலாத் தலமான சமயபுரம் திருக்கோயில் பக்தர்களுக்கென யாத்திரி நிவாஸ், கல்யாண மண்டபம், பல்மாடி வாகன நிறுத்துமிடம், மேம்படுத்தப்பட்ட அன்னதான கூடம் ஆகியவற்றை புதிதாக அமைத்தல்

மண்ணச்சநல்லூர் திருப்பைஞ்ஞீலி திருக்கோயில் ஆன்மீக பக்தர்களுக்கெனப் புதிதாக மண்டபம், தங்கும் வசதியுடன் கூடிய கட்டிடம் கட்டுதல்

முசிறி திருஈங்கோய்மலை பகுதியில் உள்ள கிரிவலம் பாதையில் பூங்கா போன்றவை அமைத்து சுற்றுலாத் தலமாக மாற்றுதல்.







VISION TRICHY

சுற்றுலாத்துறை



உட்கட்டமைப்பு ஏற்படுத்துதல்

- அனைத்து சுற்றுலாத் தலங்களிலும் அனைத்து அடிப்படை வசதிகளை உருவாக்கிக் கொடுத்தல்.
- அனைத்து சுற்றுலாத் தலங்களிலும் மாற்றுத் திறனாளிகளுக்கும் கழிவறை வசதி செய்துத் தருதல்.
- சிறுவர்களுக்கு பொழுதுபோக்கு அம்சங்களை மேம்படுத்துதல்.
- அனைத்து சுற்றுலாத் தலங்களுக்கும் செல்வதற்கு எளிதாக பேருந்து வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தல்.
- ஒருங்கிணைந்த உள்ளூர் பயணத் தொகுப்புத் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துதல்.
- தனியாக இணையதள வசதி ஏற்படுத்தி, திருச்சிராப்பள்ளியிலுள்ள அனைத்துச் சுற்றுலாத் தலங்களின் நேரம், பூஜைகள், திருவிழாக்கள், நுழைவுக் கட்டணம் போன்ற அனைத்து விவரங்களையும் தெரிவிப்பதோடு, நிகழ்நிலை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தமிழ்நாடு விடுதியின் தரத்தினை மேம்படுத்துதல்.

மனித வளம் மேம்படுத்துதல்

- சுற்றுலாத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் (துவாக்குடி) மாநில உணவக மேலாண்மை பயிற்சிக் கல்லூரியில் மாணவ சேர்க்கையினை அதிகப்படுத்தவும், சுற்றுலா விருந்தோம்பல் திறன் மேம்பாடு மற்றும் சான்றிதழ் திட்டம் தொடர்பான படிப்பு (Tourism Hospitality Skill Development and Certification Programme) அறிமுகப்படுத்தப்பட்டு புதிய சான்றிதழ் படிப்புகளை அறிமுகப்படுத்தவும், மாணவர்களின் வேலைவாய்ப்புத் திறன்களை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.
- சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தமிழ்நாடு விடுதியில் திறன் சார் பயிற்சி அளிக்கப்பட்ட பணியாளர்களுக்கு வாய்ப்பளித்தல்.
- சுற்றுலாத் துறையின் மூலம் சுற்றுலா வழிகாட்டிகளுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு, அதில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படுகிறது. திருச்சிராப்பள்ளி மாவட்ட சுற்றுலா வழிகாட்டிகள் தற்போதுள்ள 13 எண்ணிக்கையை வருங்காலத்தில் 50 எண்ணிக்கையாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கலாம்.
- திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு சுற்றுலா பாதுகாப்பு அலுவலர் (Tourist Security Officer) - 5 எண்ணிக்கை நியமிக்கலாம்

மாவட்ட அளவிலான குழு

மாவட்ட ஒருங்கிணைந்த குழு
மற்றும் சுற்றுலா ஆலோசனை குழு
(Need Base)

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

இந்து சமய அறநிலையத்துறை

தொலைநோக்குத் திட்டங்கள்

அடிப்படை விவரங்கள்

திருக்கோயில்கள் விபரங்கள்

1. பட்டியலில் சேர்ந்த திருக்கோயில்கள் எண்ணிக்கை = 656
2. பட்டியலில் சேராத திருக்கோயில்கள் எண்ணிக்கை = 1642

திருக்கோயிலுக்கு சொந்தமான நிலங்கள்

மொத்த நிலங்கள் = 6867.08 Hect. Ares

கட்டிடங்கள் = 1395

அறிவிப்புகள் 2021-2022


1. சட்டமன்ற அறிவிப்பு எண்.12-ல் கம்பிவட ஊர்தி அமைக்கும் பணி திருச்சி மாவட்டம், மலைக்கோட்டை, அருள்மிகு தாயுமானவ சுவாமி திருக்கோயிலில் கம்பிவட ஊர்தி அமைக்கும் நடைபெற்றுவருகிறது.
2. சட்டமன்ற அறிவிப்பு எண்.31-ல் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டும் பணி திருச்சி மாவட்டம், வயலூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் பக்தர்கள் தங்கும் விடுதி ரூபாய் 75 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ளது.
3. சட்டமன்ற அறிவிப்பு எண்.38-ல் திருக்கோயில் திருப்பணியில் 20 திருக்கோயில்களில் 16 திருக்கோயில்கள் திருப்பணி வேலைகைள் நடைபெற்றுவருகிறது.
4. சட்டமன்ற அறிவிப்பு எண்.45-ல் சைவத் திருக்கோயில் திருப்பணிக்கு 2 திருக்கோயில்கள் இடம்பெற்றுள்ளது. அதில் 1. திருச்சி மாவட்டம், மாகாளிகுடி, அருள்மிகு கனகாம்பிகை உடனுறை முக்தீஸ்வரர் திருக்கோயில் திருப்பணிவேலைகள் நடைபெற்றுவருகிறது.

துறை சார் திட்டங்கள்

1. அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், திருவரங்கம் வட்டம், திருச்சி மாவட்டம் மற்றும் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம், மண்ணச்சநல்லூர் வட்டம், திருச்சி மாவட்டம் ஆகிய இரண்டு கோவில்களில் நாள் முழுவதும் அன்னதானம் நடைபெற்று வருகிறது.
2. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 37 திருக்கோயில்களில் தினந்தோறும் அன்னதானம் திட்டத்தின்கீழ் அன்னதானம் நடைபெற்றுவருகிறது.
3. திருச்சி இணைஆணையர் அலுவலகம் மூலமாக ஒரு இசைக் கலைஞருக்கும் மற்றும் 5 அர்ச்சகர்களுக்கும் மாதம் ரூ.3000/- வீதம் ஓய்வூதியம் வழங்கப்பட்டுவருகிறது.
4. திருச்சி உதவி ஆணையர் அலுவலகம் மூலம் 7 கிராமப்புற பூசாரிகளுக்கு ரூ.4,000/- வீதம் ஓய்வூதியம் வழங்கப்பட்டுவருகிறது.
5. மாற்றுத்திறனாளிகளுக்கு திருக்கோயில் மூலமாக இலவச திருமணம் நடத்தப்படவுள்ளது.
6. இலவச திருமணம் திட்டத்தின் மூலம் இந்துசமய அறநிலையத்துறை சார்பாக நடத்திட முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுவருகிறது.







மனித வளம்

வ. எண்	பதவி	பணியிடம்	நிரப்பப்பட்டது	காலிப் பணியிடங்கள்
1.	உதவி ஆணையர்	1	1	0
2.	தலைமை எழுத்தர்	1	1	0
3.	உதவியாளர்	7	5	2
4.	இளநிலை உதவியாளர்	3	1	2
5.	இ.ஆ/ செ.அ உ.ஆ / செயல் அலுவலர்	2 3	2 3	0 0
6.	நிலை - 1 செயல் அலுவலர்	4	4	0
7.	நிலை - 2 செயல் அலுவலர்	4	4	0
8.	நிலை - 3 செயல் அலுவலர்	12	12	0
9.	நிலை - 4 செயல் அலுவலர்	4	4	0
10.	ஆய்வாளர்கள்	14	14	0
11.	பதிவறை எழுத்தர்	1	-	1
12.	அலுவலக உதவியாளர்	1	-	1
	மொத்தம்	57	51	6

தொலைநோக்குத் திட்டங்கள்

தொலைநோக்கு திட்டங்கள் சட்டமன்ற அறிவிப்பில் இடம்பெறாத அடுத்த 5 ஆண்டுகளில் மேற்கொள்ளபட உள்ள பணிகள், கட்டுமானங்கள் இதர பணிகள் விபரம் அடுத்த 5 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட உள்ள தொலைநோக்கு திட்டத்தில் மேற்கண்ட முதுநிலை திருக்கோயில்களுக்கு ஒருங்கிணைந்த வரைபடம் (Master Plan) தயார் செய்யும் பணிநடைபெற்றுவருகிறது.

திருச்சிராப்பள்ளி கிழக்கு மலைக்கோட்டையில் ரோப் கார் வசதி செய்தல்.

திருவெறும்பூர் வட்டம் திருவெறும்பூர் எறும்பீஸ்வரர் ஆலயத்தில் உள்ள தெப்பக்கொளத்தில் சுற்றுச் சுவர் புதுப்பித்து கட்டித் தருதல்.

திருவெறும்பூர் வட்டம் திருவெறும்பூர் மலைக்கோவில் யாணைக்கால் மண்டபத்தை பழமை மாறாமல் புதுப்பித்தல், இந்த கோவிலை சுற்றி 100 மீட்டருக்குள் கட்டிடங்கள் கட்டக் கூடாது என்ற விதியினை மாற்றி 15 மீட்டருக்குள் கட்டிடங்கள் கட்டக் கூடாது என்று திருத்தம் செய்து கட்டிடம் கட்ட அனுமதிக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் மலைகோவிலுக்கு சொந்தமான சொத்துக்களை மீட்டுத் தர நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

உட்கட்டமைப்பு ஏற்படுத்துதல்

அடுத்த 5 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட உள்ள தொலைநோக்கு திட்டத்தில் மேற்கண்ட முதுநிலை திருக்கோயில்களுக்கு ஒருங்கினைந்த வரைபடம் (Master Plan) தயார் செய்யும் பணிநடைபெற்று வருகிறது.

மனிதவளம் மேம்படுத்துதல்

திருச்சிராப்பள்ளி இந்துசமய அறநிலையத்துறை இணை ஆணையர் அலுவலகத்தில்

உதவியாளர்	- 1
இளநிலை உதவியாளர்	- 1
தட்டச்சர்	- 1
சுருக்கெழுத்து தட்டச்சர்	- 1
பதிவறை எழுத்தர்	- 1
இரவு காவலர்	- 1
இளநிலை தொழில்நுட்ப உதவியாளர்	- 1
இளநிலை உதவியாளர் / தட்டச்சர்	- 1
செயற்பொறியாளர்	- 1
உதவிகோட்டப் பொறியளார்	- 2
மண்டல ஸ்தபதி	- 1
உதவிமின் பொறியாளர்	- 1
வரைவாளர்	- 1
மொத்தம்	- 14

பணியிடங்கள் காலியாக உள்ளது.





திருச்சிராப்பள்ளி
மாவட்டம்

கலை பண்பாட்டுத் துறை

மண்டலக் கலை பண்பாட்டு மையம்

தொலைநோக்குத் திட்டங்கள்

VISION TRICHY

கலை
பண்பாட்டுத் துறை



அடிப்படை விவரங்கள்

1. மாவட்டக் கலை மன்றம்
2. மாவட்ட அரசு இசைப்பள்ளி
3. சவகர் சிறுவர் மன்றம்
4. தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம்
5. ஓவிய நுண்கலைக் குழு
6. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்



மனித வளம்

வ. எண்	பதவியின் பெயர்	அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள்	பயன்பாட்டில் உள்ள பணியாளர்கள்	காலிப்பணியிடம்
01	உதவி இயக்குநர்	1	--	1
02	உதவியாளர்	1	--	1
03	இளநிலை உதவியாளர்	1	1	--
04	ஓட்டுநர்	1	--	1
05	அலுவலக உதவியாளர்	1	1	--
	மொத்தம்	5	2	3



துறை சார் திட்டங்கள்

1. மாவட்டக் கலை மன்றம் வாயிலாக கலைஞர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்குதல்
2. மாவட்டக் கலை மன்றம் வாயிலாக மாவட்ட அளவில் சிறந்த கலைஞர்களுக்கு கலை இளமணி, கலை வளர்மணி, கலைச் சுடர்மணி, கலை நன்மணி, கலை முதுமணி விருதுகள் வழங்குதல்
3. மாவட்டக் கலை மன்றம் வாயிலாக மாவட்டந்தோறும் கலை விழாக்கள் நடத்துதல்
4. தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தில் 18 வயது முதல் 60 வயதிற்குட்பட்ட கலைஞர்களை உறுப்பினராக சேர்த்தல்
5. நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தில் பதிவுபெற்ற கலைஞர்களுக்கு மூக்குக்கண்ணாடி, கல்வி நிதி, திருமணஉதவித்திட்டம், மகப்பேறு உதவி, இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்
6. ஓவிய நுண்கலைக் குழு மூலம் ஓவியர்களுக்கு ஓவியக் கலைக்காட்சிகள் நடத்துதல்
7. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் வாயிலாக 58 வயது நிறைவடைந்த கலைஞர்களுக்கு நலிவுற்ற கலைஞர்களுக்கு மாதந்தோறும் ஓய்வூதியம் ரூ.3000/-த்திற்கு பரிந்துரைசெய்தல்
8. தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தில் பதிவுபெற்ற 18 வயது முதல் 60 வயதிற்குட்பட்ட கலைஞர்களுக்கு ஆடை ஆபரணங்கள் மற்றும் இசைக்கருவிகள் வழங்குதல்
9. 75வது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவினை கொண்டாடும் வகையில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.164.00 இலட்சம் நிதி, நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு உதவிடும் வகையில் தமிழகத்தின் நாட்டுப்புறக் கலைகளை காட்சிப் படுத்தும் 75 ஒளிப்படங்களை தயாரிக்கப்பட்டு வருகிறது.
10. இளைஞர்களின் கலைத்திறன்களை வெளிப்படுத்தவும், மாநில அளவிலான கலை விழா நடத்திடவும், ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.75.00 இலட்சம் நிதி மாவட்ட/மாநில அளவிலான கலைப் போட்டிகள் நடத்திட பயன்படுத்தப்படுகிறது.
11. 500 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு உதவிட ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.50.00 இலட்சம் நிதி அவர்களுக்கு இசைக்கருவிகள் மற்றும் ஆடை ஆபரணங்கள் வாங்குவதற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.



தொலைநோக்குத் திட்டங்கள்

திருச்சிராப்பள்ளி மண்டலக் கலை பண்பாட்டு மையத்தில் நாட்டுப்புறக் கலைஞர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு மாவட்டக் கலை மன்றம் வாயிலாக அடையாள அட்டைகள் எண்ணிக்கை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்

நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தில் இதுவரை 2571 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் கலைஞர்களை கண்டறிந்து 10,000 த்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்களை சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தில் உறுப்பினரான கலைஞர்களுக்கு தற்போது வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளுக்கானத் தொகையினை மேலும் உயர்த்தி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தில் பதிவுபெற்ற கலைஞர்களுக்கு இசைக்கருவிகள் ஆடை ஆபரணங்கள் வழங்கிவருவதன் 10 கலைஞர்கள் என்பதனை 50 கலைஞர்கள் என எண்ணிக்கையினை அதிகப்படுத்தப்படும்

58 வயது நிறைவடைந்த கலைஞர்களுக்கு நலிந்த கலைஞர்களுக்கான மாதந்தோறும் ஓய்வூதியம் தொகை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.





உட்கட்டமைப்பு ஏற்படுத்துதல்

1. நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு வீடு இல்லாத நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வாங்கி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
2. நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு பேரூந்தில் பயணம் செய்ய இலவச பயணச்சலுகை பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
3. சவகர் சிறுவர் மன்றத்தில் பயிற்சி பெறும் சிறார்களுக்கு பயிற்சி வகுப்புகள் தனி ஒரு கட்டடமாக அரசிடம் கோரிக்கை வைக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

மனிதவளம் மேம்படுத்துதல்

கலை பண்பாட்டுத் துறையில் மண்டலக் கலை பண்பாட்டு மைய உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணிகள் சிறப்பாக செயல்படுத்திட தேவையான மனிதவளம் கீழ்க்கண்டுள்ளவாறு நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

வ. எண்	பணியிடம்	தேவைப்படும் பணியிடங்கள்
01	கண்காணிப்பாளர்	1
02	உதவியாளர்	1
03	தட்டச்சர்	1
04	நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்	2
05	பதிவுறு எழுத்தர்	1
06	காவலர் பணியிடம்	2
07	அலுவலக உதவியாளர்	1

திருச்சிராப்பள்ளி
மாவட்டம்



தமிழ்நாடு
விளையாட்டு
மேம்பாட்டு ஆணையம்

தொலைநோக்குத் திட்டங்கள்



VISION TRICHY

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

அடிப்படை விவரங்கள்

- 400 மீ 8-வரிசை செயற்கை இழை தடகள ஓடுதளம் (மின்னொளியுடன்)
- கால்பந்து ஆடுகளம் - 1 (இயற்கை புல்தரை)
- வளைகோல் பந்து ஆடுகளம் - 2 (1 செயற்கை இழை)
- வலைப்பந்து - 1 (மண்)
- கையுந்துபந்து ஆடுகளம் - 7 (1 மின்னொளியுடன், 3 மின்னொளி இல்லாமல், 1 கால்வால்யும் கூரையுடன் மின்னொளி, 1 கடற்கரை கையுந்து பந்து மற்றும் 1 மண்)
- கூடைப்பந்து ஆடுகளம் - 2 (சிமெண்ட்) (1 மின்னொளியுடன்)
- கபாடி ஆடுகளம் - 2 (மண்) (விரிப்பு வசதி 1-க்கு உள்ளது)
- கபாடி ஆடுகளம் - 2 (மின்னொளியுடன் காலரி வசதி)
- கோ கோ ஆடுகளம் - 1 (மண்)
- கைப்பந்து ஆடுகளம் - 1 (மண்)
- ஸ்குவாஷ் உள்ளரங்கம் ஆடுகளம் - 1 (குளிர்சாதன வசதி)
- டென்னிஸ் ஆடுகளம் - 2 (மண்)
- செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் - 3 (கேலரி மற்றும் அறைகள்)
- நவீன பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் - 1
- இறகுப்பந்து உள்ளரங்கம் கூடம் - 1 (மின்னொளி)
- பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் (மாவட்ட விளையாட்டரங்க வளாகத்தில்)
- திறந்தவெளி குத்துச்சண்டை வளையம்
- குத்துச்சண்டை வளையம் (கூரை மற்றும் பயிற்சி கூடத்துடன்)
- நீச்சல்குளம் 25 மீ X 23 மீ
- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி
- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான முதன்மை நிலை விளையாட்டு மையம், ஸ்ரீரங்கம்
- தங்குமிட மையம்
- பெற்றோர் மற்றும் பார்வையாளர்கள் வரவேற்பு அறை
- பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் (ஸ்ரீரங்கம்)

மனிதவளம்

வ. எண்	பணியாளர் விவரம் மண்டல முதுநிலை மேலாளர் அலுவலகம், மாவட்ட பிரிவு மற்றும் விளையாட்டு விடுதி	அனுமதிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கை	தற்போதைய பணியாளர்களின் எண்ணிக்கை	காலியிடம் எண்ணிக்கை
நிரந்தர பணியாளர்கள்				
1.	மண்டல முதுநிலை மேலாளர் (கோவை & திருச்சி மண்டலம் - 15 மாவட்டங்கள்)	1	1	0
2.	மேலாளர் விளையாட்டு விடுதி	1	1	0
3.	மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர்	1	1	0
4.	பயிற்றுநர்கள், மாவட்ட பிரிவு	7	2	5
5.	பயிற்றுநர்கள், விளையாட்டு விடுதி	8	2	6
6.	உதவியாளர்	3	2	1
7.	இளநிலை உதவியாளர்	1	0	1
8.	குறியீட்டாளர்	4	0	4
9.	காவலர்	1	0	1
10.	தோட்டக்காரர்	1	0	1
வருகைப் பயிற்றுநர்				
11.	வருகை பயிற்றுநர் (பகுதி நேர பயிற்றுநர்), விளையாட்டு விடுதி	1	1	0
தினக்கூலி பணியாளர்கள்				
12.	உயிர்காப்பாளர், நீச்சல்குளம்	4	4	0
13.	எலக்ட்ரீசியன் உடன் பம்ப் ஆப்ரேட்டர், நீச்சல்குளம்	1	1	0
14.	துப்புறவாளர் உடன் தோட்டக்காரர், நீச்சல்குளம்	1	1	0
வெளிமுகமைப் பணியாளர்கள்				
15.	கணினி இயக்குபவர்	2	2	0
16.	காவலர்	4	4	0
17.	குறியீட்டாளர்	5	5	0
18.	பந்துப் பொருக்குபவர்	2	2	0
19.	ஓட்டுநர் உடன் அலுவலக உதவியாளர்	1	1	0
20.	துப்புறவாளர்	3	3	0
21.	கேர்டேக்கர்	4	3	1
22.	சமையல்காரர்	1	1	0
23.	உதவி சமையல்காரர்	3	3	0



துறைசார் திட்டங்கள்

திறன் கண்டறிதல்

- உலக திறனாளர்களைக் கண்டறியும் திட்டம்
- விளையாட்டு விடுதிகளில் சேர்க்கைக்கான தேர்வு
- சிறப்பு நிலை விளையாட்டு விடுதிகளில் சேர்க்கைக்கான தேர்வு
- முதன்மை நிலை விளையாட்டு மையங்களில் சேர்க்கைக்கான தேர்வு

திறன் மேம்பாடு

- முதன்மை நிலை விளையாட்டு மையங்கள்
- சிறப்பு விளையாட்டு அகாடமிகள்
- இறகுபந்து அகாடமிகள்
- விளையாட்டு விடுதிகள்
- சிறப்பு நிலை விளையாட்டு விடுதிகள்
- நீச்சல் கற்றுக் கொள் திட்டம்
- கோடைகாலப் பயிற்சி முகாம்
- கல்வி மாவட்ட அளவிலான பயிற்சி முகாம்
- மாவட்ட அளவிலான உறைவிடப் பயிற்சி முகாம்
- திறனாளர்களைக் கண்டறியும் முகாம்
- உடற்கல்வி ஆசியர்களுக்கான / இயக்குநர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி

விளையாட்டுப் போட்டிகள்

- முதலமைச்சர் கோப்பைக்கான மாநில விளையாட்டுப் போட்டிகள்
- மாநில அளவிலான பல்கலைக் கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள்
- மாற்றுத்திறனாளிகளுக்கான தடகள போட்டிகள்
- மாற்றுத்திறனாளிகளுக்கான குழு விளையாட்டுப் போட்டிகள்
- கடற்கரை விளையாட்டுகள்
- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய வளைகோல்பந்து லீக் போட்டி
- அண்ணா மிதிவண்டி போட்டி
- தமிழ்நாடு அகில இந்திய பணிகள் மற்றும் மத்திய அரசு அலுவலர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள்
- மாநில அளவிலான அரசுப் பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள்
- மாவட்ட மற்றும் மாநில அளவிலான கேரம் விளையாட்டுப் போட்டிகள்
- மாநில விளையாட்டுச் சங்கங்களால் நடத்தப்படும் மாநில மற்றும் தேசிய அளவிலான சாம்பியன்ஷிப் போட்டிகள்
- தமிழ்நாட்டில் பன்னாட்டு அளவிலான சாம்பியன்ஷிப் போட்டிகள் நடத்துதல்
- கழைக்கூத்து (Acrobatics)
- வெளிநாட்டில் மேம்பட்ட பயிற்சி மற்றும் போட்டிகளில் கலந்துகொள்ளுதல்
- கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள்

அறிவிப்புகள்

- திருச்சியில் ஒரு இடத்தில் ரூ.300 இலட்சம் மதிப்பீட்டில் சிறு விளையாட்டரங்கம் அமைக்கப்படும்.
- தமிழ்நாட்டிலுள்ள விளையாட்டு வீரர்கள்/வீராங்கனைகளுக்கு சர்வதேச பயிற்சியாளர்களைக் கொண்டு ரூ.500 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்படும்.
- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் அனைத்து விளையாட்டு விடுதிகளிலும் ஒரே வகையிலான விளையாட்டுச் சீருடைகள், விளையாட்டு உபகரணங்கள் மற்றும் சேவைக் கட்டணம் வசூலிக்கப்படும்.
- விளையாட்டு வீரர்கள் நல நிதிக்கான நிதிய மூலதனத்தை ரூ20.00 இலட்சத்திலிருந்து ரூ.50.00 இலட்சமாக உயர்த்தப்படும்.
- அறிஞர் அண்ணா மிதிவண்டிப் போட்டிகளை நடத்துவதற்கு ஒதுக்கப்பட்ட தொகையினை ரூ.1.00 இலட்சத்திலிருந்து ரூ.38.00 இலட்சமாக உயர்த்தி புதுபொலிவுடன் நடத்தப்படும்.
- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் திறனை மேம்படுத்தி மின்னனு ஆளுமை முறைகள் செயல்படுத்தப்படும்.
- நலிந்த நிலையிலுள்ள விளையாட்டு வீரர்களுக்கு தற்போது வழங்கி வரும் ஓய்வூதியம் ரூ.3000 த்திலிருந்து ரூ.6000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.





தொலைநோக்குத் திட்டங்கள்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை விரைவில் ஆரம்பிக்கபடவுள்ள ஒலிம்பிக் அகாடமியில் குறைந்தபட்சம் 10 நபர்களை மாவட்டத்தின் சார்பாக பங்கேற்க செய்தல்.

பன்னாட்டு அளவில் பங்குபெறாத விளையாட்டினை (டேக்வோண்டா, குத்துச்சண்டை) ஊக்குவித்து அவர்களை பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பங்குபெற செய்தல்.

அனைத்து விளையாட்டிலும் ஆர்வமுள்ள மாணவ/மாணவிகளை ஊக்குவித்து தேசிய அளவிலான போட்டிகளில் 30க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கேற்பதற்கு வகை செய்தல்.

விளையாட்டு கழகங்கள் மூலமாக கிராமபுறங்களில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதன் மூலம் திறமையான மாணவர்களை கண்டறிவதற்கு வழிவகை செய்தல்.

அதிகமாக விரும்பி விளையாடும் விளையாட்டுகளை தேர்வு செய்து ஒன்றிய அளவில் அதற்கான விளையாட்டு மைதானங்களை அமைத்து அவர்களை விளையாட்டில் ஊக்குவித்தல்.

சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளை திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நடத்துவதற்கு தேவையான விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்.

திருச்சி மாநகர காவல் ஆணையரகம் G.O.Ms. No.831/Home/Pol.XIV/Dept. dt : 01.06.1997 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.297, 01.06.1997-ன்படி உருவாக்கப்பட்டது. திருச்சி மாநகரம் தெற்கு மாநகரம் மற்றும் வடக்கு மாநகரம் ஆகிய இரண்டு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு தெற்கு மண்டலத்தில் கண்டோன்மெண்ட், பொன்மலை, கே.கே.நகர் ஆகிய 3 சரகங்களும், வடக்கு மண்டலத்தில் ஸ்ரீரங்கம், காந்திமார்க்கெட். தில்லைநகர் ஆகிய 3 சரங்களும் உதவி ஆணையர் தலைமையில் செயல்பட்டு வருகிறது. அதன் கீழ் 14 சட்டம் ஒழுங்கு, 12 குற்றப்பிரிவு, 4 அனைத்து மகளிர் காவல் நிலையங்களும் மற்றும் 18 சிறப்பு பிரிவுகளும் மற்றும் ஒரு போக்குவரத்து உதவி ஆணையர் தலைமையில் 6 போக்குவரத்து காவல் நிலையங்களும் செயல்பட்டு வருகிறது. திருச்சி மாநகரில் 50 பீட்களும், 8 காவல் சோதனைச் சாவடிகளும், 14 ரோந்து வாகனங்களும் மற்றும் மேலும் 3 நெடுஞ்சாலை ரோந்து வாகனமும் காவல் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறது. திருச்சி மாநகரில் மத்திய சிறைச்சாலை, மகளிர் சிறைச்சாலை மற்றும் வெளிநாட்டவர்களுக்கான சிறப்பு முகாம் உள்ளது. பொதுமக்கள் அதிகளவில் வந்து செல்லும் திருச்சிராப்பள்ளி பன்னாட்டு விமான நிலையமும், திருச்சிராப்பள்ளி இரயில் சந்திப்பும், மத்திய பேருந்து நிலையம் மற்றும் சத்திரம் பேருந்து நிலையம் அமைந்துள்ளது. 167.23 sq.Kms பரப்பளவை கொண்ட திருச்சியில் சுமார் 11.5 இலட்சம் கொண்ட மக்கள் தொகை வசித்து வருகின்றனர். திருச்சி மாநகர எல்லைக்குள் நாள் ஒன்றுக்கு சராசரியாக சுமார் 30,000 இருசக்கர வாகனங்கள் 7,200 மூன்று சக்கர வாகனங்கள், 2,800 பேருந்துகள், 5,760 லாரிகள் என அதிக அளவில் போக்குவரத்து உள்ளது.

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை

உதவி ஆணையர் (கலால்) திருச்சிராப்பள்ளி

1. திருச்சிராப்பள்ளி கோட்டம் - கோட்ட கலால் அலுவலர், திருச்சிராப்பள்ளி.
2. முசிறி கோட்டம் கோட்ட கலால் அலுவலர், முசிறி.

வ. எண்	உரிமத்தின் பெயர்	எண்ணிக்கை
1	NDRC	62
2	RL 2	55
3	SP XIV	5
4	SP XI	1
5	L 2	1
6	ML 2	1
7	ML 4/6	17
8	FL 4A	2
9	DL2	14
10	DL 6	1
11	Mass wine	1
12	Sacramental wine	2
	Total	162

வ. எண்	உரிமத்தின் பெயர் (பார்கள்)	எண்ணிக்கை
1	FL 3	32
2	FL 2	6
3	FL 3A	1
	Total	39



துறை சார் திட்டங்கள்

மாவட்ட காவல் துறை

- மாவட்டத்தில், முக்கியமான காவல் நிலைய எல்லைகளில் புறக்காவல் நிலையம் செயல்படுதல்.
- மாவட்டத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் அதிவேக இன்டெர்நெட் பயன்பாடு செயல்படுதல்.
- பொதுமக்களின் புகார் மனுக்களை, இணையவழி மூலம் பெற்று நடவடிக்கை எடுத்தல். (Online Complaint)
- வாரம் ஒரு முறை மெகா பெட்டிஷன் மேளா என்ற திட்டம் மூலம், பொதுமக்களின் மனுக்களுக்கு உடனடி தீர்வு ஏற்படுத்துதல்.
- இணையவழி குற்றங்களை தடுக்க மற்றும் தீர்வு காண, தனி சைபர் காவல் நிலையம் செயல்படுதல்.
- மாவட்டத்தின் அனைத்து காவல் நிலையங்கள் மற்றும் முக்கிய இடங்களில் மூன்றாவது கண் எனப்படும் CCTV கேமரா பொருத்தப்பட்டு கண்காணித்தல்.
- 24 மணி நேரமும் ரோந்து காவலர்கள் நவீன சாதனங்களுடன் செயல்பட்டு வருகிறார்கள். (Beat System)
- பெண்கள் பாதுகாப்பினை முன்னிறுத்தி காவலன் செயலி அறிமுகப்படுத்தப்பட்டு, செயல்பட்டு வருகிறது.
- பொதுமக்களின் சொத்து மற்றும் இதர ஆவணங்கள் தவறும் பட்சத்தில், அதற்கான புகாரை இணையவழியில் அனுப்ப வழிவகை செயல்பட்டு வருகிறது.

மாநகர காவல் துறை

- மாநகரில் குற்றங்களை தடுக்க 24 மணி நேரமும் ரோந்து காவலர்கள் Beat System முறையில், நவீன சாதனங்களுடன் செயல்பட்டு வருகிறார்கள்.
- மாநகரின் எல்லைகளில் சோதனைச் சாவடிகள் அமைத்து செயல்பட்டு வருகிறது.
- பொதுமக்களின் புகார் மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை எடுத்தல்.
- Area Domination திட்டம் மூலம் காவல்துறையினர் நேரடியாக மக்களை அணுகி, பொதுமக்கள் குறைகள் கேட்டறிதல் மற்றும் குற்றவாளிகள் குறித்த தகவல் திரட்டுதல்
- மாநகரில் உள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் அதிவேக இன்டெர்நெட் பயன்பாடு செயல்படுதல்.
- பெட்டிஷன் மேளா என்ற திட்டம் மூலம், பொதுமக்களின் மனுக்களுக்கு உடனடி தீர்வு ஏற்படுத்துதல்.
- இணையவழி குற்றங்களை தடுக்க மற்றும் தீர்வு காண, தனி சைபர் காவல் நிலையம் செயல்படுதல்.
- மாநகரின் அனைத்து காவல் நிலையங்கள் மற்றும் முக்கிய இடங்களில் மூன்றாவது கண் எனப்படும் CCTV கேமரா பொருத்தப்பட்டு நவீன கட்டுப்பாட்டறை கண்காணித்தல்.
- பெண்கள் பாதுகாப்பினை முன்னிறுத்தி காவலன் செயலி அறிமுகப்படுத்தப்பட்டு, செயல்பட்டு வருகிறது.
- Face Recognition Software -ஐ பயன்படுத்தி எளிதில் குற்றவாளிகளை அடையாளம் காணப்பட்டு வருகிறது.

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை

1. **மறுவாழ்வு நிதியுதவி**
   - 2022-23 ஆம் ஆண்டிற்கு 20 மனம் திருந்திய மதுவிலக்கு குற்றவாளிகளுக்கு ரூ.30,000/- வீதம் நிதியுதவி வழங்குதல்
   - சிறு கடை அமைத்தல் அல்லது கறவை மாடு வழங்குதல் அல்லது சைக்கிள் ரிப்பேர் கடை வைத்தல் அல்லது இருசக்கர மோட்டார் வாகன ரிப்பேர் கடை அமைத்தல் அல்லது லான்டரி கடை வைத்தல்.
   - இவை ஏதேனும் ஒன்று அமைத்திடும் பொருட்டு ஒரு பயனாளிக்கு ரூ.30,000/- வழங்குதல்

3. **கள்ளச்சாரயம், போதை பொருள் உபயோகத்திற்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்ச்சி**

   2022-23 ஆம் ஆண்டிற்கு கள்ளச்சாரயத்திற்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாவட்டம் முழுவதும் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான நிதி ரூ.8,94,000/- வரப்பெற்றுள்ளது.
   - நாட்டுப்புற கலைஞர்கள் மூலமாக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துதல்.
   - விழிப்புணர்வு பேரணி நடத்துதல்.
   - பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு போட்டிகள் நடத்தி பரிசு வழங்குதல்.



முக்கிய பாதுகாப்பு பணிகள்

மாவட்ட காவல் துறை

- சமயபுரம், தொட்டியம் மற்றும் வீரப்பூர் ஆகிய கோவில்கள் பாதுகாப்பு பணி.
- ஜல்லிக்கட்டு பாதுகாப்பு பணி.
- வி.ஐ.பி மற்றும் வி.வி.ஐ.பி பாதுகாப்பு பணி.
- விநாயகர் சதுர்த்தி பாதுகாப்பு பணி.
- புத்தாநத்தம், ஞானரதம் திருவிழா பாதுகாப்பு பணி.
- ரம்ஜான் மற்றும் பக்ரீத் பண்டிகைகளின் சிறப்பு தொழுகைகளுக்கு பாதுகாப்பு பணி.
- ஜனவரி -1 மற்றும் கிறிஸ்துமஸ் பண்டிகைகளுக்கு பாதுகாப்பு பணி.
- மற்றும் இதர பாதுகாப்பு பணிகளை திருச்சி மாவட்ட காவல் துறையினர் திறம்பட மேற்கொண்டு வருகின்றனர்

மாநகர காவல் துறை

- ஸ்ரீரங்கம் வைகுண்ட ஏகாதசி பாதுகாப்பு பணி.
- வி.ஐ.பி மற்றும் வி.வி.ஐ.பி பாதுகாப்பு பணி.
- விநாயகர் சதுர்த்தி ஊர்வல பாதுகாப்பு பணி.
- முத்தரையர் சதய விழா பாதுகாப்பு பணி
- ரம்ஜான் மற்றும் பக்ரீத் பண்டிகைகளின் சிறப்பு தொழுகைகளுக்கு பாதுகாப்பு பணி.
- ஜனவரி-1, தீபாவளி மற்றும் கிறிஸ்துமஸ் பண்டிகைகளுக்கு பாதுகாப்பு பணி.
- மழை, வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்களின் போது பாதுகாப்பு பணி
- மேலும் பல்வேறு பாதுகாப்பு பணிகளை திருச்சி மாநகர காவல் துறையினர் திறம்பட மேற்கொண்டு வருகின்றனர்

பராமரிப்பு பணிகள்

மாவட்ட காவல் துறை

- மாவட்டத்தின் அனைத்து காவல் நிலையங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகளை பராமரிக்க தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய அலுவலர்களை நியமித்தல்.
- காவல் வாகனங்கள் பராமரிப்பதற்கான தனியான பணிமனை உருவாக்குதல்.மேலும், இதர உதிரி பாகங்களை பெறுவதற்கான ஸ்டோர் அமைத்தல்.
- அனைத்து காவல் நிலையங்கள் மற்றும் ஆயுதப்படையில் உள்ள ஆயுதங்கள், துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களை சுத்தம் செய்வதற்கான நவீன Rebrowning Centre அமைத்தல்.

மாநகர காவல் துறை

- மாநகரத்தின் அனைத்து காவல் நிலையங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகளை பராமரிக்க தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய அலுவலர்களை நியமித்தல்.
- காவல் வாகனங்கள் பராமரிப்பதற்கான தனியான பணிமனை உருவாக்குதல். மேலும், இதர உதிரி பாகங்களை பெறுவதற்கான ஸ்டோர் அமைத்தல்.
- அனைத்து காவல் நிலையங்கள் மற்றும் ஆயுதப்படையில் உள்ள ஆயுதங்கள், துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களை சுத்தம் செய்வதற்கான நவீன Rebrowing Centre அமைத்தல்



மாவட்ட காவல் துறை

SANCTIONED STRENGTH	
L&O	TOT
ADSP	2
DSP	9
INSPEC	32
SI/SSI	106
ORS	1230
TOTAL	1379
ACTUAL STRENGTH	
ADSP	2
DSP	10
INSPEC	31
SI	85
SSI	93
ORS	879
TOTAL	1100

SANCTIONED STRENGTH	
AR	TOT
ADSP	0
DSP	1
INSPEC	2
SI/SSI	15
ORS	512
TOTAL	530
ACTUAL STRENGTH	
ADSP	0
DSP	1
INSPEC	2
SI	15
SSI	1
ORS	420
TOTAL	439

SANCTIONED STRENGH	
TRAFFIC	TOT
RI	8
RSI	16
ORS	111
TOTAL	135
ACTUAL STRENGTH	
RI	8
RSI	11
ORS	67
TOTAL	86

மாநகர காவல் துறை

Sanctioned Strength				
Sanctioned	Local	AR	Women	Total
DC	3	0	0	3
ADC	0	1	0	1
ACP	11	1	0	12
INSPR	38	6	4	48
SI	61	21	6	88
HC	179	51	25	255
GR.I.	449	36	26	511
GR.II	613	459	46	1118
TOTAL	1354	575	107	2036

Actual Strength				
Sanctioned	Local	AR	Women	Total
DC	3	0	0	3
ADC	0	1	0	1
ACP	10	1	0	11
INSPR	36	6	4	46
SI	55	14	3	72
HC	898	102	40	104
GR.I.	223	141	19	383
GR.II	8	241	0	249
TOTAL	1233	506	66	1805

அறிவிப்புகள்

மாவட்ட காவல் துறை

- ஒரு காவல் தொழில்நுட்ப உதவி ஆய்வாளர் மற்றும் இரண்டு பயிற்சி பெற்ற காவலர்கள் டிரோன் கேமரா பொருத்தப்பட்ட வாகனத்தை இயக்குவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்.
- திருச்சி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் இணைய குற்ற தடுப்பு காவல் நிலையத்திற்கு தேவையான மென்பொருட்கள் மற்றும் நவீன மின்னணு சாதனங்கள் வழங்கப்படுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- காவலர்களுக்காக மானிய விலையில் பொருட்களை விற்பனை செய்யும் காவலர் அங்காடி தற்போது திருச்சி மாநகர ஆயுதப்படை வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. திருச்சி மாவட்ட காவலர்கள் பயன்பெறும் வகையில் மாவட்ட ஆயுதப்படை வளாகத்தில் புதிதாக ஒரு காவலர் அங்காடி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- திருச்சி மாவட்டத்திற்கு என தனியாக ஒரு வெடிகுண்டு செயல் இழப்பு தடுப்பு பிரிவு உருவாக்கப்பட வேண்டும். இதன் மூலம் முக்கிய மற்றும் அதிமுக்கிய நபர்கள் வருகையின் போது சிறப்பான முறையில் பாதுகாப்பு பணிகளைமேற்கொள்ள முடியும்.

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை

பிரிவு - உதவி ஆணையர் (கலால்) அலுவலகம், திருச்சிராப்பள்ளி.

வ. எண்	பதவி	ஒதுக்கீடு	நிரப்பப்பட்டுள்ளது	காலியிடம்
1.	உதவி ஆணையர் (கலால்), (துணை ஆட்சியர்)	1	1	-
2	அலுவலக மேலாளர் (கலால்), (வட்டாட்சியர்)	1	1	-
3	உதவியாளர்	2	2 (1 மாற்றுப்பணி)	-
4	இளநிலை உதவியாளர்	1	1 (1 மாற்றுப்பணி)	-
5	தட்டச்சர்	1	1	-
6	பதிவறை எழுத்தர்	1	1	-
7	ஓட்டுநர்	1	1	-

கோட்ட கலால் அலுவலகம், திருச்சிராப்பள்ளி.

வ. எண்	பதவி	ஒதுக்கீடு	நிரப்பப்பட்டுள்ளது	காலியிடம்
1.	கோட்ட கலால் அலுவலர், (வட்டாட்சியர்)	1	1	-
2	உதவியாளர்	4	4 (3 மாற்றுப்பணி)	-

கோட்ட கலால் அலுவலகம், முசிறி.

வ. எண்	பதவி	ஒதுக்கீடு	நிரப்பப்பட்டுள்ளது	காலியிடம்
1.	கோட்ட கலால் அலுவலர், (வட்டாட்சியர்)	1	1	-
2	உதவியாளர்	4	4 (1 மாற்றுப்பணி)	-

இத்துறையில் உதவி ஆணையர் (கலால்) அலுவலகத்தில், 5 உதவியாளர்கள், ஒரு இளநிலை உதவியாளர் பணியிடம் மாற்றுப்பணியில் உள்ளது. எனவே, அப்பணியிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.



தொலைநோக்குத் திட்டங்கள்

மாவட்ட காவல் துறை

மாவட்டந்தோறும், பணி நிமித்தமாக செல்லும் காவலர்களுக்கு காவலர் விடுதி அமைத்தல்.

காவல் நிலையங்களில், ரோந்து, முக்கியமான வழிக்காவல் பணிகளுக்கு காவல் நிலையத்திற்கென்று ஒரு தனி நான்கு சக்கர வாகனம் வேண்டும்.

காவல் உட்கோட்டங்களில் ஒவ்வொரு உட்கோட்டங்களில் திருமண மண்டம் அமைக்கப்படுதல்.

காவலர்களின் நலனை கருத்தில் கொண்டு, அதிநவீன வசதியுடன் கூடிய உயர்தர மருத்துமனை அமைத்தல் மற்றும் நீதிமன்ற காவலில் உள்ள எதிரிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கு, தனி மருத்துவமனையை காவல்துறை வளாகத்தில் அமைத்தல்.

ஓவ்வொரு உட்கோட்டங்களிலும் கவாத்து மைதானம் அமைத்தல்.

இராணுவ வீரர்களுக்கு வழங்கப்படுவது போல், தமிழ்நாடு காவலர்களுக்கும் காவலர் அங்காடியில் அனைத்து பொருட்களுக்கும், அதே விகிதத்தில் வழங்கப்பட வேண்டும். மேலும், இரண்டு சக்கரம் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் காவலர் அங்காடி மூலம் தனியார் நிறுவனத்தில் வாங்குவதற்கு ஆவணம் செய்தல் (Without CGST/SGST)

காவல் துறையில் பணிச்சுமையை குறைக்கும் வகையில், நாளொன்றுக்கு 8 மணி நேரம் பணி நிர்ணயம் செய்து, சுழற்சி முறையில் பணி செய்ய ஆவணம் செய்தல்.

ஒவ்வொரு நீதிமன்றங்களிலும், காவலர்களுக்கான ஓய்வு அறை அமைக்கப்படுதல்.

விபத்து மற்றும் தீக்காயங்கள், நீரில் மூழ்கி சிதைந்து போன சடலங்களை பிணக்கூராய்வு செய்ய சேகரிப்பதற்கு, சீருடை அணிந்த காவலர்களே சேகரிக்க வேண்டிய நிலை உள்ளது. ஆகவே, அதற்கான தனி சுகாதார பணியாளர்களை, காவல் துறையினர் கட்டுப்பாட்டில் நியமித்தல்.

சட்டம் ஒழுங்கு காவலர்களுக்கு காவல் நிலையங்களில், வாரம் ஒரு முறை சட்ட வகுப்புகள் நடத்துதல்.

காயச்சான்று (WC), பிணக்கூராய்வு சான்று (PMC) மற்றும் மோட்டார் வாகன தணிக்கை சான்று (MVC) ஆகியவற்றை நிர்ணயிக்கப்பட்ட நாட்களில், சம்மந்தப்பட்ட அலுவலகங்களிலிருந்து காவல் நிலையத்திற்கு இணையவழியில் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்தல்.

குற்றவாளிகளை விரைந்து கைது செய்யும் நோக்கில், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனியாக, ஹெலிகாப்டர் மற்றும் ஹெலிப்பேடு அமைத்தல்.

மழைக்காலங்கள் மற்றும் ஆற்றில் அடித்துச் செல்லப்படும் நபர்களின் பிரேதத்தை கைப்பற்றுவதற்கு, நவீன வசதிகளுடன் கூடிய விசைப்படகு அளித்தல்.

காவலர் குடும்பத்திற்கான, ஒருங்கிணைந்த விளையாட்டு மைதானம் அமைத்தல் மற்றும் உபகரணங்கள் வழங்குதல்.

காவலர் குழந்தைகளின் அறிவுத்திறனை மேம்படுத்தும் நோக்கில், நவீன கணிப்பொறி நூலகம் அமைத்தல்.

காவலர் குழந்தைகளின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு, அனைத்து படிப்புகளும் உள்ள காவலர் பல்கலைகழகம் அமைத்தல்

மாநகர காவல் துறை

திருச்சி மாநகராட்சி மக்கள் தொகை பெருக்கத்தின் காரணமாக 65 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இதில் திருச்சி மாநகர காவல்துறை எல்லையில் 60 வார்டுகள் மட்டுமே இணைக்கப்பட்டுள்ளது. எனவே மீதமுள்ள 5 வார்டுகளை திருச்சி மாநகர காவல் எல்லைக்குள் இணைக்கப்பட வேண்டும்.

மேற்கண்டவாறு இணைக்கும் போது, மாநகர காவல் நடைமுறை மற்றும் விதிகளின்படி காவலர்களின் எண்ணிக்கை மற்றும் ரோந்து வாகனங்களின் (Patrol Vehicles) எண்ணிக்கையினை அதிகரிக்க வேண்டும்.

மாநகர காவல் கட்டுப்பாட்டில் வரும் சட்டம்/ஒழுங்கு குற்றப்பிரிவு, போக்குவரத்து பிரிவு மற்றும் அனைத்து மகளிர் காவல் பிரிவு ஆகியவற்றை ஒரே வளாகத்தினுள் அமைந்த அடுக்குமாடி கட்டிடமாக அமைக்கப்பட வேண்டும்.

மேற்கண்டவாறு மாநகர காவல் ஆணையரகத்தின் அதிகார வரம்பு நீட்டிக்கப்படும் போது, 2500 உயர்ரக CCTV கேமராக்களை அரசே தனது சார்பில் கூடுதலாக பொருத்துவதற்கும், பராமரிப்பதற்கும் உரிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

காவலர்களின் நலனை கருத்தில் கொண்டு, அதி நவீன வசதியுடன் கூடிய உயர்தர மருத்துமனை அமைத்தல் மற்றும் நீதிமன்ற காவலில் உள்ள எதிரிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கு, தனி மருத்துவமனையை காவல்துறை வளாகத்தில் அமைத்தல்.

ஓவ்வொரு சரகத்திலும் கவாத்து மைதானம் அமைத்தல்.

மாநகரந்தோறும், பணி நிமித்தமாக செல்லும் காவலர்களுக்கு காவலர் விடுதி அமைத்தல்.

காவலர் குடும்பத்திற்கான, ஒருங்கிணைந்த விளையாட்டு மைதானம் அமைத்தல் மற்றும் உபகரணங்கள் வழங்குதல்.

ஒவ்வொரு நீதிமன்றங்களிலும், காவலர்களுக்கான ஓய்வு அறை அமைக்கப்படுதல்.

சட்டம் ஒழுங்கு காவலர்களுக்கு காவல் நிலையங்களில், வாரம் ஒரு முறை சட்ட வகுப்புகள் நடத்துதல்.

காயச்சான்று (WC), பிணக்கூராய்வு சான்று (PMC) மற்றும் மோட்டார் வாகன தணிக்கை சான்று (MVC) ஆகியவற்றை நிர்ணயிக்கப்பட்ட நாட்களில், சம்மந்தப்பட்ட அலுவலகங்களிலிருந்து காவல் நிலையத்திற்கு இணையவழியில் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்தல்.

காவல் துறையில் பணிச்சுமையை குறைக்கும் வகையில், நாளொன்றுக்கு 8 மணி நேரம் பணி நிர்ணயம் செய்து, சுழற்சி முறையில் பணி செய்ய ஆவணம் செய்தல்.

காவலர் குழந்தைகளின் அறிவுத்திறனை மேம்படுத்தும் நோக்கில், நவீன கணிப்பொறி நூலகம் அமைத்தல்.

மேற்படி டுரோன் வாகன செயல்பாட்டை உறுதிசெய்யும் வகையில், ஒரு தனி தொழில்நுட்ப காவல் சார்ஆய்வாளர், மற்றும் 2 பயிற்சி பெற்ற காவலர்கள் பணியமர்த்தப்பட வேண்டும்.

போக்குவரத்து நெரிசல், சாலை விரிவுபடுத்துதல், வாகன விபத்துக்கள் ஏற்படா வண்ணம் தடுத்தல் போன்றவற்றிற்காக ஒருங்கிணைந்த போக்குவரத்து மேலாண்மை அமைப்பு உருவாக்கப்பட வேண்டும்

திருச்சிராப்பள்ளி மாநகரில் போலீஸ் சைரன் மற்றும் ஆடியோ/வீடியோ டிரான்ஸ்மிஷன் சிஸ்டம் ஆகிய வசதிகள் மற்றும் 2 டுரோன் கேமராக்களைக் கொண்ட டுரோன் ரோந்து வாகனம் (Drone Patrol Vehicles) வழங்கப்பட வேண்டும். மேலும், இந்த ரோந்து வாகனத்திலிருந்து நவீன கட்டுப்பாட்டு அறைக்கு தரவுகளை அனுப்புவதற்கேற்ப பிரத்தியேக அம்சங்களைக் கொண்ட கணினி ஒன்று உரிய இன்டர்நெட் வசதியுடன் மேற்படி வாகனத்துடன் இணைத்து பெறப்பட வேண்டும்.

மாநகர எல்லையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் குறைகளை களைய திருச்சிராப்பள்ளி மாவட்ட காவல்துறை கட்டுப்பாட்டில் இயங்கி வரும் திருவெறும்பூர் உபகோட்டத்திற்குட்பட்ட திருவெறும்பூர், துவாக்குடி, பாய்லர் பிளாண்ட் மற்றும் நவல்பட்டு காவல்நிலையங்கள், ஜீயபுரம் உபகோட்டத்திற்குட்பட்ட சோமரசம்பேட்டை மற்றும் ராம்ஜிநகர் காவல்நிலையங்கள், இலால்குடி உபகோட்டத்திற்குட்பட்ட கொள்ளிடம் காவல் நிலையம் ஆகியவை மாநகர எல்லைப்பகுதியில் அமைந்துள்ள காரணத்தால், அவற்றை திருச்சிராப்பள்ளி மாநகர காவல்துறையுடன் இணைக்கப்பட வேண்டும்.

மாநகர காவல் எல்லைக்குள் இயங்கும் அனைத்து போக்குவரத்து சிக்னல்களையும் ஒரே கட்டுப்பாட்டு அறையிலிருந்து கண்காணிக்கும் விதமாக ஒரு நவீன மற்றும் அதிநவீன கட்டுப்பாட்டு அறை (Control Room) மாநகர காவல்துறை கட்டுப்பாட்டில் அமைக்கப்பட வேண்டும். அதில் அடையாளம் காணப்பட்ட சாலை சந்திப்புகளில் கூடுதல் போக்குவரத்து சிக்னல்கள் அமைக்கப்பட வேண்டும். அதன் பின்னர், மாநகர எல்லைப்பகுதியில் செயல்படும் அனைத்து CCTV கேமராக்களும் ஒரே நெட்வொர்க்கின் கீழ் கொண்டு வரப்பட்டு, முதன்மைக் கட்டுப்பாட்டு அறை (Master Control Room) மூலம் கட்டுப்படுத்தப்பட வேண்டும். இதற்கு தேவையான அனைத்து தொழில்நுட்ப அம்சங்கள் மற்றும் தளவாடங்கள் அரசால் வழங்கப்பட வேண்டும். மேற்படி கூடுதல் CCTV கேமராக்கள் பொருத்தவும், கூடுதல் போக்குவரத்து சிக்னல்கள் அமைக்கவும் மற்றும் அவைகளை பராமரிக்கவும் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கள்ளச்சாரயத்தினை முற்றிலும் ஒழித்தல்.

2020-2021 ஆண்டு கள்ளச்சராய வழக்குகள் 2 பதிவுசெய்யப்பட்டுள்ளது. 2021-2022 ஆண்டு 1 வழக்கு பதிவு செய்யப்பட்டது. இனிவரும் ஆண்டுகளில் ஒன்றுக்கூட இல்லாத அளவிற்கு வழக்குகளின் எண்ணிக்கையை குறைத்து அடுத்த 10 ஆண்டுகளில் கள்ளச்சாராயம் இல்லாத மாவட்டமாக உருவாக்குதல்.

உணவுப்பாதுகாப்புத்துறை அலுவலர்களுடன் இணைந்து ஒன்றாக கஞ்சா, குட்கா, பான்மசாலா திடீர் ஆய்வுகளில் ஈடுபட்டு, மாதாந்திர இலக்கு நிர்ணயித்து கஞ்சா, குட்கா, பான்மசாலா போன்ற போதைப்பொருட்களை பறிமுதல் செய்தல்.

போதை பொருள்களின் உபயோகத்தினை தடுத்து நிறுத்தும் பொருட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சி ஆண்டுதோறும் நடத்துதல்.

2020-2021 கஞ்சா வழக்குகள் 86, குட்கா வழக்குகள் 1388 பதிவு செய்யப்பட்டுள்ளது. 2021-2022 ஆண்டு கஞ்சா வழக்குகள் 80, குட்கா வழக்குகள் 173 பதிவு பதிவு செய்யப்பட்டது. இனிவரும் ஆண்டுகளில் ஒன்றுக்கூட இல்லாத அளவிற்கு வழக்குகளின் எண்ணிக்கையை குறைத்து அடுத்த 10 ஆண்டுகளில் கஞ்சா, குட்கா, பான்மசாலா இல்லாத மாவட்டமாக உருவாக்குதல்.

பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடையே போதைப் பொருட்களினால் ஏற்படும் தீய விளைவுகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி போதையில்லா இளைய சமுதாயத்தினை உருவாக்குதல்.









மனிதவளம் மேம்படுத்துதல்

மாவட்ட காவல் துறை

- சமயபுரம், வீரப்பூர், தொட்டியம் மதுரகாளியம்மன் போன்ற கோவில் திருவிழாக்களுக்கு அதிகப்படியான மக்கள் வருவதால், திருச்சி மாவட்ட ஆயுதப்படையில், கூடுதலாக ஒரு படைப்பிரிவு (Platoon) உருவாக்கப்பட வேண்டும்.
- காவல் நிலையங்களில் பணிபுரியும் காவலர்களின் பணிச்சுமையை குறைக்கும் நோக்கில், ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் உண்டான மனிதவளத்தினை அதிகப்படுத்துதல்.

மாநகர காவல் துறை

- ஸ்ரீரங்கம், மலைக்கோட்டை போன்ற கோவில் திருவிழாக்களுக்கு அதிகப்படியான மக்கள் வருவதாலும், மாநகரில் மாண்புமிகு தமிழக முதல்வர் மற்றும் ஆளுநர் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் அடிக்கடி வந்து செல்வதாலும், திருச்சி மாநகர ஆயுதப்படையில், கூடுதலாக இரு படைப்பிரிவுகள் (Platoon) உருவாக்கப்பட வேண்டும்.
- காவல் நிலையங்களில் பணிபுரியும் காவலர்களின் பணிச்சுமையை குறைக்கும் நோக்கில், ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் கூடுதல் காவலர்களை நியமித்தல்

உட்கட்டமைப்பு ஏற்படுத்துதல்

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை

1. திருச்சிராப்பள்ளி உதவி ஆணையர் (கலால்) அலுவலகத்திற்கு ஒரு பதிவறை அமைக்க வேண்டும்.
2. திருச்சிராப்பள்ளி உதவி ஆணையர் (கலால்) அலுவலகத்தில் இயங்கும் ஈப்பு 15 ஆண்டுகள் ஆகிவிட்டதால் அதற்கு பதிலாக இவ்வலுவலகத்திற்கு ஒரு ஈப்பு வழங்க வேண்டும்.
3. திருச்சிராப்பள்ளி கோட்ட கலால் அலுவலகம் அமைக்க ரூ.30,00,000/- ஒதுக்க வேண்டும். கோட்ட கலால் அலுவலருக்கு ஒரு அறை, அலுவலர்களுக்கு ஒரு அறை, ஒரு பதிவறை என தனி அலுவலக கட்டடம் அமைக்க வேண்டும்.
4. முசிறி கோட்ட கலால் அலுவலகம் அமைக்க ரூ.30,00,000/- ஒதுக்க வேண்டும். கோட்ட கலால் அலுவலருக்கு ஒரு அறை, அலுவலர்களுக்கு ஒரு அறை, ஒரு பதிவறை என தனி அலுவலக கட்டடம் அமைக்க வேண்டும்.



மாவட்ட காவல் துறை

- அனைத்து காவல் நிலைய கட்டிடங்கள் சொந்த கட்டிடத்தில் இயங்குவதை உறுதி செய்வதும் மற்றும் காவல்துறை அதிகாரிகள், ஆளிநர்கள் ஆகியோரின் குடியிருப்பு தேவையை பூர்த்தி செய்ய தேவையான அளவுக்கு குடியிருப்பு கட்டிடங்கள் கட்ட வேண்டியதும் மிகவும் அவசியமாகும்.
- 10 இலட்சத்திற்கும் மேலான மக்கள் தொகை கொண்ட திருச்சி மாவட்டத்தில் ஏறத்தாழ 1700 காவல் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப மக்களின் தேவைகளை ஈடு செய்யும் வகையில் ஏற்கனவே இயங்கி வருகின்ற சில காவல் நிலையங்களை இரண்டாக பிரித்து புதிய காவல் நிலையங்களை உருவாக்க வேண்டும்.
- ஒவ்வொரு காவல் நிலையம் மற்றும் காவலர் குடியிருப்புகளிலும் சுற்றுசுவர் அமைத்து காவலர்களின் பாதுகாப்பினை உறுதி செய்ய வழிவகை செய்தல்.
- இலால்குடி உட்கோட்டத்தில் இயங்கி வரும் சிறுகனூர் மற்றும் கல்லக்குடி காவல் நிலைய பகுதிகளிலிருந்து சில தாய்க்கிராமங்கள் மற்றும் குக்கிராமங்களை பிரித்து புதிதாக ஒரு காவல் நிலையம் அமைக்கப்பட வேண்டும்.
- மணப்பாறை காவல் நிலைய எல்லைப்பகுதியில், அதிகப்படியான மக்கள் தொகை மற்றும் ஏரளமான கிராமங்கள் இருப்பதால், மணப்பாறை காவல் நிலையத்தை மணப்பாறை நகர காவல் நிலையம் மற்றும் மணப்பாறை தாலுக்கா காவல் நிலையம் என இரண்டாக பிரிக்கப்பட வேண்டும்.
- துறையூர் காவல் நிலைய எல்லைப்பகுதியில், அதிகப்படியான மக்கள் தொகை மற்றும் ஏராளமான கிராமங்கள் இருப்பதால், துறையூர் காவல் நிலையத்தை துறையூர் நகர காவல் நிலையம் மற்றும் துறையூர் தாலுக்கா காவல் நிலையம் என இரண்டாக பிரிக்கப்பட வேண்டும்.
- தற்போதைய, முசிறி உட்கோட்டம் பரப்பளவில் மிகப் பெரிதாக இருப்பதால் சட்டம் ஒழுங்கை பாதுகாப்பத்தில் காவல் துணைக் கண்காணிப்பாளர் பதவியை இரண்டாக பிரித்து முசிறி உட்கோட்டம் மற்றும் துறையூர் உட்கோட்டம் என இரு காவல் துணைக் கண்காணிப்பாளர் பதவியிடம் உருவாக்கப்பட வேண்டும்.
- இலால்குடி உட்கோட்ட அலுவலகம், இலால்குடி அனைத்து மகளிர் காவல் நிலையம் மற்றும் கொள்ளிடம் காவல் நிலையம் ஆகியவை வாடகை கட்டிடத்தில் இயங்கி வருகின்றன. இந்த காவல் நிலையங்களுக்கு அரசு கட்டிடம் கட்டப்படுவதோடு அங்கே பணி புரிகின்ற காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- புதிதாக உருவாக்கப்பட்டுள்ள திருச்சி - சிதம்பரம் தேசிய நெடுஞ்சாலையில் ரோந்து பணிகளை மேற்கொள்ளும் வகையில் புதிய நெடுஞ்சாலை ரோந்து வாகனம் கூத்தூர் சந்திப்பிலிருந்து திருச்சி மாவட்ட எல்லை வரை இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- ஒவ்வொரு உட்கோட்டத்திலும் பதிவு செய்யப்படுகின்ற கொள்ளை, வழிப்பறி, திருட்டு மற்றும் இதர குற்ற வழக்குகளை விரைந்து புலனாய்வு செய்து குற்றவாளிகளை கைது செய்வதற்கு ஏதுவாக ஒரு காவல் ஆய்வாளர் தலைமையில் ஒவ்வொரு உட்கோட்டத்திலும் ஒரு தனிக்குழு உருவாக்கப்பட வேண்டும்.
- திருச்சி மாவட்டத்தில் உள்ள கோவில் திருவிழாக்களின் போதும் மற்றும் சமயபுரம் கோவில் திருவிழாக்களின் போதும் தமிழ்நாடு சிறப்பு காவல்படையினர் கூடுதலாக பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். பிற மாவட்டங்களிலிருந்து திருச்சி மாவட்டத்திற்கு காவல் பாதுகாப்பு பணிக்காக வரும் காவலர்கள் தங்குவதற்கு வசதியாக காவலர் தங்கும் கூடம் (Barracks) கட்டப்பட வேண்டும்.
- திருச்சி மாவட்டத்தில் ஒவ்வொரு காவல்நிலைய எல்லைப்பகுதியிலும் ரோந்து வாகனங்களின் நடமாட்டத்தை கண்காணிக்கவும், காவலர்கள் முறையாக ரோந்திற்கு செல்கிறார்களா என்பதை கண்காணிக்கவும் நவீன தொலைதொடர்பு வசதிகளுடன் கூடிய காவல் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட வேண்டும்.
- மாவட்டத்தில் Terminator Indoor With Shooting அமைத்தல்



திருச்சிராப்பள்ளி
மாவட்டம்

சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறை

தொலைநோக்குத் திட்டங்கள்

அடிப்படை விவரங்கள்

அங்கீகரிக்கப்பட்ட அடைப்புகளின் எண்ணிக்கை 2517

- தண்டனை சிறைவாசிகள் 742
- விசாரணை சிறைவாசிகள் 737
- தடுப்பு காவல் சிறைவாசிகள் 382
- மொத்தம் 1861

நெசவு தொழிற்கூடம்

- சலவை செய்த கட்டுத்துணி தயாரிப்பு பணி
- சலவை செய்த காரத்துணி தயாரிப்பு பணி
- உல்லன் கம்பளி

சோப்பு தொழிற்கூடம்

- சலவை சோப்பு தயாரித்தல்
- குளியல் சோப்பு தயாரித்தல்

தையல் தொழிற்கூடம்

- ப்ரேடு கேப் காக்கி (காவல்துறை)
- ஓவர் ஆல் புளூ டிரில் (காவல்துறை)

காகிதம் மற்றும் புத்தகம் அட்டை கட்டும் தொழிற்கூடம்

கோப்பு அட்டை தயாரித்தல்



துறை சார் திட்டங்கள்

- சிறைவாசிகளின் பாதூகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதி செய்தல்.
- சிறைவாசிகளின் சட்ட தேவைகளை பூர்த்தி செய்தல்.
- சிறைவாசிகளின் கல்வி தகுதி உயர்த்த தேவையான உதவிகளை செய்தல்
- சிறைவாசிகளின் தொழிற் திறனை மேம்படுத்த பயிற்சி வழங்குதல்
- பட்டம் திட்டம் - முதல் முறை குற்றம் செய்தவர்களுக்கு மன இயல் வல்லுநர் மூலம் அறிவுரை வழங்குதல்.
- சிறைத் தோட்டங்களில் காய்கறிகள் உற்பத்தி செய்தல்.
- சிறைவாசியால் பாதிக்கபபட்டோர்களுக்கும் இறந்தவரின் குடும்பத்திற்கும் பாதிக்கப்பட்டோர் நல நிதி வழங்குதல்.
- விடுதலையில் செல்லும் சிறைவாசிகளுக்கு தொண்டு நிறுவனங்கள் மூலமாக நிதி வழங்குதல்

மனித வளம்

பதவி	அனுமதிக்கப்பட்டது	பணிபுரியும் எண்ணிக்கை	காலியிடம்
சிறைக் கண்காணிப்பாளர்	1	1	-
கூடுதல் கண்காணிப்பாளர்	1	1	-
சிறை அலுவலர்	1	1	-
துணை சிறை அலுவலர்	3	2	1
உதவி சிறை அலுவலர்	11	8	3
முதல் தலைமைக் காவலர்	34	31	3
முதல் நிலைக் காவலர்	76	76	-
இரண்டாம் நிலைக் காவலர்	148	138	10
உதவி ஆய்வாளர் (தொழில்நுட்பம்)	1	1	-
உதவி ஆய்வாளர் (உளவு மற்றும் விழிப்புப் பிரிவு)	1	1	-
நிர்வாக அலுவலர்	1	1	-
அலுவலக மேலாளர்	1	1	-
அலுவலக கண்காணிப்பாளர்	2	2	-
கணக்கர்	1	1	-
உதவியாளர்	7	4	3
இளநிலை உதவியாளர்	8	7	1
பதிவுரு எழுத்தர்	1	1	-
தட்டச்சர்	3	3	-
சிப்ப எழுத்தர்	1	1	-
உதவி மருத்துவ அலுவலர்	3	3	-
மருந்தாளுநர்	1	1	-
ஆண் செவிலி உதவியாளர்	3	3	-
செவிலியர்	1	1	-
மனஇயல் நிபுணர்	1	1	-
நல அலுவலர்	1	1	-
இடைநிலை ஆசிரியர்	4	3	1
தையல் போதகர்	1	0	1
நெசவு போதகர்	1	1	-
தச்சு போதகர்	1	1	-
கைவினை போதகர்	1	-	1
இலாரி ஓட்டுநர்	1	1	-
டிராக்டர் ஓட்டுநர்	1	1	-
சோப்பு இராசாயனர்	1	-	1
கொதிகலன் உதவியாளர்	1	-	1
மின்கம்பியாளர்	1	1	-
மின்மோட்டார் உதவியாளர்	2	2	-
நாவிதர்	1	1	-
தூய்மை பணியாளர்	2	-	2
சமையலர்	2	1	1
மொத்தம்	332	303	29






தொலைநோக்குத் திட்டங்கள்

சிறை அங்காடியில் தயாரிக்கப்படும் சோப்பின் தரத்தை மேம்படுத்துதல்.

கோப்பு அட்டையின் உற்பத்தினை அதிகரித்தல்.

இம்மத்திய சிறையில் புதிதாக துவங்கவுள்ள நிலக்கரி, சாம்பல், செங்கல் தொழிற்கூடத்தில் உற்பத்தியை துவங்குதல்.

தோட்ட உற்பத்தியில் காய்கறிகள், தேனீ வளர்ப்பு மற்றும் பணப்பயிர்களை அதிகளவில் பயிரிடுதல்.

சிறை அங்காடியில் தயாரிக்கப்படும் சலவை சோப்பு, குளியல் சோப்பின் தரத்தை மேம்படுத்தி, அதனை அரசு ஆரம்பப்பள்ளி முதல் கல்லூரி வரையிலான அரசு நிறுவனங்களுக்கு அனுப்புதல்.

உணவு வீணாதலை மறுசுழற்சி மூலம் உரமாக தயாரித்து பயன்படுத்துதல்

சிறைவாசிகள் Ph.D., பட்டம் வரை இலவசமாக பயில, பாரதிதாசன் பல்கலைக்கழகத்திடம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்ய வழிவகை செய்தல்.

அரசு பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு தேவையான சீருடைகளை சிறைவாசிகள் மூலம் தைத்து வழங்குதல்.

குழந்தைகள் காப்பகம் அமைத்து தரல்.

உயர் அலுவலர்களுக்கு தங்கும் விடுதி அமைத்து தருதல்.

தற்பொழுது சிறைவாசிகள் ஊதிய ஈட்டுப்பிரிவில் பணம் வரவு செலவு கணக்குகளுக்கு தனிநபர் அட்டை பயன்படுத்துவதற்கு பதிலாக கணினிமயமாக்கி, Smart Card வழங்கலாம். தேசிய வங்கியுடன் இதனை இணைத்தல்.

சிறை எல்லைப் பகுதியில் வெளிநபர்கள் ஆக்ரமிப்பை தடுக்க வணிகவளாகம் கட்டுதல்

அனைத்து சிறைப்பணியாளர்கள் குடியிருப்பில் சவ்வூடு பரவல் முறை, குடிநீர் சுத்திகரிப்பு சாதனம் (Reverse Osmosis Plant) அமைத்தல்.

சிறைப்பணியாளர் குடியிருப்பில் உடற்பயிற்சி கூடம் அமைத்தல்

காவல்துறைக்கு உள்ள பல்பொருள் அங்காடி போல சிறைத்துறைக்கு பல்பொருள் அங்காடி நிறுவுதல்.

உட்கட்டமைப்பு ஏற்படுத்துதல்

இச்சிறையில் தையற் தொழிற்கூட மற்றும் கோப்பு அட்டை தயாரிக்கும் தொழிற்கூடத்திற்கான கட்டிடம் சிறைவாசிகளின் தொகுதிக்கு வெளியே கட்டுதல்.

















திருச்சிராப்பள்ளி மாவட்டம்

தீயணைப்பு
மீட்புப்பணிகள் துறை

தொலைநோக்குத் திட்டங்கள்

VISION TRICHY

தீயணைப்பு
மீட்புப்பணிகள் துறை







அடிப்படை விவரங்கள்

மாவட்ட அலுவலகம்	தீயணைப்பு மீட்புப்பணி நிலையங்கள்	தீத்தடுப்புக்குழு
01	09	01

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள ஊர்திகள் விவரம்

வ. எண்	ஊர்தி	எண்ணிக்கை
1	நீர்தாங்கிவண்டி (4500 லிட்டர்)	8
2	தண்ணீர் லாரி (9000 லிட்டர்)	1
3	தண்ணீர்லாரி (பவுசர்) (12000 லிட்டர்)	1
4	அவசர கால மீட்பு ஊர்தி	1
5	சிறப்பு உபகரணங்கள் தாங்கிய நீர்தாங்கி வண்டி	1
6	சிறய ரக நுரை தகர்வு ஊர்தி	1
7	சிறிய ரக நீர்தாங்கி வண்டி	2
8	கல்வி பேருந்து	1
9	நோயாளர் ஊர்தி	1
	மொத்தம்	17

மனித வளம்

தரம்	ஒப்பளிப்பு	தற்போது உள்ளவர்கள்	காலியிடம்
மாவட்ட அலுவலர்	01	01	-
உதவி மாவட்ட அலுவலர்	01	01	-
நிலைய அலுவலர்	11	09	02
நிலைய அலுவலர் (போ)	05	04	01
முன்னணி தீயணைப்போர்	25	25	-
யந்திர கம்மியர் ஓட்டி	09	09	-
தீயணைப்போர் ஓட்டி	28	15	13
தீயணைப்போர்	132	130	2
கண்காணிப்பாளர்	01	01	-
உதவியாளர்	02	02	-
இளநிலை உதவியாளர்	02	02	-
தட்டச்சர்	1	-	1
பதிவு கட்டறை எழுத்தர்	1	-	1
முழுநேர துப்பரவு பணியாளர்	1	1	-
மொத்தம்	220	200	20

துறை சார் திட்டங்கள்

- மக்களிடையே தீத்தடுப்பு பிரச்சாரம், ஒத்திகை நிகழ்ச்சி மூலம் பொது மக்கள், பள்ளி, கல்லூரி, வணிக வளாகங்கள், மருத்துவமனை, பலமாடி கட்டிடம் மற்றும் பொதுமக்கள் கூடுமிடங்களில் நடத்தப்படுகிறது.
- இயற்கை பேரிடர் மற்றும் அவசர காலங்களில் விரைந்து மீட்புப்பணிகளில் ஈடுபடுகிறது.
- விழாக்கள், பண்டிகைகக்ள், தேர்தல், சாதி சமய மோதல்கள் மற்றும் தீவிரவாத தாக்குதல்கள் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுகிறது.
- நோய்வாய்பட்டவர்கள், காயமடைந்தவர்கள் ஆகியோர்களுக்கு உடனடியாக முதலுதவி சிகிச்சை வழங்கப்பட்டு நோயாளர் ஊர்திக்கு தகவல் தெரிவிக்கப்படுகிறது.
- முக்கிய பிரமுகர்கள் வருகை, முக்கிய கூட்டங்கள் மற்றும் தனியாரால் நடத்தப்படும் நிகழ்ச்சிகளுக்கு அரசு வரையறுக்கப்பட்ட கட்டண அடிப்படையில் பாதுகாப்பு பணி மேற்கொள்ளுதல்.
- சட்டங்கள் மற்றும் விதிகளின் அடிப்படையில் தடையின்மை சான்று / தீ உரிமம் கட்டணமின்றி வழங்கப்படுகிறது.
- SCUBA DIVING, BA Set போன்ற உபகரணங்களுக்கு அரசு நிர்ணயித்த கட்டண தொகை பெற்று கொண்டு தனியார் மற்றும் அரசுதுறை நிறுவனங்களுக்கு காற்று மறு நிரப்பம் செய்து தரப்படுகிறது.



தொலைநோக்குத் திட்டங்கள்

தீயணைப்பு மற்றும் மீட்பு அழைப்பிற்கு ஊர்தி செல்லும் கால அளவை குறைத்தல்.

குறுகலான பாதை / தெருக்களில் செல்ல 8 சிறிய ரக நீர்தாங்கி ஊர்திகள் (Small Tenders) பெற நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

திருச்சிராப்பள்ளி / திருவரங்கம் / நவல்பட்டு / இலால்குடி தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நிலையங்களுக்கு புதிய நவீனரக படகு மற்றும் எஞ்சின்கள் பெற நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

சமயபுரம் / மணப்பாறை / துவரங்குறிச்சி தீயணைப்பு மீட்புப்பணி நிலையங்கள் தேசிய நெடுஞ்சாலையில் உள்ளதால் விபத்து ஏற்படும் போது மீட்பு பணிகளுக்கு புதிய அவசரகால மீட்பு ஊர்திகள் (Emergency Rescue Tender) பெற நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

புதிய தன்னார்வலர்களை கூடுதலாக சேர்த்து சிறப்பான பயிற்சி வழங்கி பேரிடர் காலங்களில் பயன்படுத்துதல்.

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணியில் புதிய தொழில்நுட்பங்களை புகுத்த நிபுணர்களை கொண்டு அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு மாவட்ட அலுவலகத்தில் பயிற்சி வழங்குதல்.

திருவெறும்பூர் வட்டத்தில் தீயணைப்பு நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்

காவிரி ஆறு மற்றும் கொள்ளிடம் ஆறுகளில் வெள்ளப்பெருக்கு காலங்களிலும் இதர காலங்களிலும் மீட்பு பணிகளுக்கு மனிதர்கள் / விலங்குகள்/ இறந்தவர்களின் சடலங்களை தேடும் பணியிலும் / மீட்புபணியிலும் ஈடுபடுவதற்கு ஏதுவாக Drone Camera பெற நடவடிக்கை மேற்கொள்ளுதல்.



VISION TRICHY

தீயணைப்பு
மீட்புப்பணிகள் துறை

மாவட்ட அளவிலான குழு

தீயணைப்புத்துறை, பேரிடர் மேலாண்மை - திருச்சிராப்பள்ளி மாவட்டம் - ஆலோசனைக் குழு - பேரிடர் மேலாண்மை சட்டம் 2003 - மாவட்ட அளவிலான ஆலோசனை குழு கூட்டம் (Periodic Review)

உட்கட்டமைப்பு ஏற்படுத்துதல்

- புதிய தீயணைப்பு மீட்புப்பணிகள் நிலையம் ஏற்படுத்துதல்
- தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நிலையங்கள் புதிதாக துவாக்குடி, குமாரவயலூர், வையம்பட்டி ஆகிய இடங்களில் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
- துவரங்குறிச்சி மற்றும் புள்ளம்பாடி தீயணைப்பு மீட்புப்பணி நிலையங்களுக்கு நிரந்தரகட்டிடம் கட்ட இடம் தேர்வுசெய்தல்.
- பணியாளர்களுக்கு நிலையங்கள் அருகே குடியிருப்பு கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

மனிதவளம் மேம்படுத்துதல்

- பணியாளர்களுக்கு 2 மாதங்களுக்கு ஒருமுறை 1 நாள் மாவட்ட தலைமையகம் திருச்சிராப்பள்ளியில் துறைசார் பயிற்சி / புதிய தொழில்நுட்பங்கள் தொடர்பாக வகுப்பு மற்றும் செயல்முறை பயிற்சி வழங்குதல்.
- பணியாளர்களுக்கு மன அழுத்தம் நீங்க யோகா பயிற்சி மாதத்திற்கு ஒருமுறை வழங்குதல்.
- தீத்தடுப்பு குழு - நகர்புற / கிராமப்புற மக்களிடம் தீத்தடுப்பு விழிப்புணர்வு ஏற்படுத்த கூடுதல் பிரச்சாரம் செய்தல் மற்றும் பயிற்சி வழங்குதல்.
- பணியாளர்களுக்கு Mutual Aid Scheme மூலம் பல்வேறு தீயணைப்பு மீட்புப்பணி துறை சம்மந்தமான அறிவை மேம்படுத்துதல்.











திருச்சிராப்பள்ளி
மாவட்டம்

புவியியல் & சுரங்கத்துறை

மாவட்ட தொழில் மையம்

தொலைநோக்குத் திட்டங்கள்

அடிப்படை விவரங்கள்

புவியியல் & சுரங்கத்துறை

வ. எண்	வட்டம்	கனிமம்	பரப்பு (ஹெக்டேர்)		குவாரிகளின் எண்ணிக்கை	
			பட்டா	புறம்போக்கு	பட்டா	புறம்போக்கு
1	திருவெறும்பூர்	கிராவல்	0.86.0	0	1	0
2	ஸ்ரீரங்கம்	உடைகல்	0	1.35.5	0	1
3	மணப்பாறை	உடைகல்	1.45.0	4.00.0	1	1
4	மருங்காபுரி	உடைகல் மற்றும் கிராவல்	7.79.5	0	4	0
5	முசிறி	உடைகல்	6.59.0	3.50.0	3	1
6	துறையூர்	உடைகல்	7.31.5	6.53.5	4	4
7	தொட்டியம்	உடைகல்	0.61.0	0	1	0
8	இலால்குடி	கிராவல்	2.54.5	0	2	0
		உடைகல்	11.71.5	4.00.0	5	2
		சுண்ணாம்புக்கல்	10.54.5	179.30.0	1	2
		லைம்கன்கர்	3.93.41	0	1	0
		கூடுதல்	52.49.91	198.69.0	23	11

மாவட்ட தொழில் மையம்

நிறுவன வகை	எண்ணிக்கை
குறு	36621
சிறு	1342
நடுத்தர	68
மொத்தம்	38031



மனித வளம்

புவியியல் & சுரங்கத்துறை

வ. எண்	பதவி	ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியிடம்	நிரப்பப்பட்ட பணியிடம்	காலிப் பணியிடம்
1	உதவி இயக்குநர்	1	1	0
2	உதவி புவியியலாளர்	1	1	0
3	தனி வட்டாட்சியர்	1	1	0
4	தனி வருவாய் ஆய்வர்	1	1	0
5	தட்டச்சர்	1	0	1
6	ஓட்டுநர்	1	1	0
7	அலுவலக உதவியாளர்	1	1	0
	கூடுதல்	7	6	1

மாவட்ட தொழில் மையம்

வ. எண்	பதவியின் பெயர்	அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள்	பூர்த்தி செய்யபட்ட பணியிடங்கள்	காலியாக உள்ள பணியிடங்கள்
1	பொது மேலாளர்	1	1	-
2	மேலாளர் (கடன் வசதி)	1	-	1
3	மேலாளர் (கிராம தொழில்கள் மற்றும் நிர்வாகம்)	1	1	-
4	திட்ட மேலாளர்	1	1	-
5	உதவி இயக்குனர் (தொழில்நுட்பம்)	1	1	-
6	அலுவலக கண்காணிப்பாளர்	1	1	-
7	உதவி பொறியாளர் (தொழில்கள்)	2	2	-
8	புள்ளி விவர ஆய்வாளர்	1	1	-
9	புலனாய்வாளர்	1	1	-
10	கணக்கர்	1	1	-
11	உதவியாளர்	2	2	-
12	சுருக்கெழுத்து தட்டச்சர்	2	2	-
13	இளநிலை உதவியாளர்	2	2	-
14	தட்டச்சர்	1	1	-
15	ஓட்டுனர்	1	1	-
16	அலுவலக உதவியாளர்	3	-	3
17	தோட்டக்காரர் மற்றும் துப்புரவாளர்	1	-	1
18	காவலர்	1	-	1
	மொத்தம்	24	18	6



துறை சார் திட்டங்கள்

புவியியல் & சுரங்கத்துறை

- அரசின் அனுமதியின்றி செயல்படும் குவாரிகளை திடீர் தணிக்கை செய்து அதனை கண்டறிந்து அதனை வரைமுறைப்படுத்துதல்.
- அரசின் அனுமதியின்றி கனிமம் ஏற்றி செல்லும் வாகனங்களை திடீர் தணிக்கை செய்து கைப்பற்றுகை செய்தல்.
- குவாரி குத்தகை புலங்களை DGPS சர்வே செய்தல்.
- செங்கல் சூளை தொழிலினை முறைபடுத்துதல்.
- குவாரியில் உள்ள பணியாளர்களுக்கு அரசின் தகுதிவாய்ந்த காப்பீட்டு திட்டத்தின் கீழ் பயனடையச் செய்தல்.
- கனிம வள நிதியினை குவாரியினால் பாதிப்புக்குள்ளான பகுதிகளுக்கு பயன்பெரும் வகையில் கருத்துருக்களை செயல்படுத்துதல்.
- பசுமை நிதியினை கொண்டு குவாரிகளை மறுசீரமைப்பு செய்யும் வகையில் கருத்துருக்களை செயல்படுத்துதல்.
- கனிமங்கள் மற்றும் கனிம வியாபாரிகள் போக்குவரத்து மற்றும் சேமிப்பு விதி 2011ஐ செயல்படுத்துதல் மற்றும் முறைப்படுத்துதல்.

மாவட்ட தொழில் மையம்

- புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS)
- வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP)
- பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP)
- கோவிட் உதவி மற்றும் தொழில்முனைவோருக்கு நிவாரணம் (CARE)

குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான மானியங்கள் :

- மூலதன மானியம்
- பின்முனை வட்டி மானியம்
- குறைந்த அழுத்த மின் மானியம்
- சம்பள பட்டியல் மானியம்
- முத்திரை தாள் மற்றும் பத்திரபதிவு கட்டண மானியம்



அறிவிப்புகள்

புவியியல் & சுரங்கத்துறை

- பயனற்ற பழைய சுரங்கம் மற்றும் குவாரிகளை பொதுமக்களுக்கு பயனுள்ள அமைப்புகளாக மாற்றுதல்.
- விதிமுறைகளுக்குப் புறம்பாக கனிமங்கள் எடுப்பதை தடுக்க ஆளில்லா சிறிய ரக விமானத்தை பயன்படுத்துதல்.
- குவாரிப்பணிகளில் இருந்து வரலாற்று சின்னங்கள், பழந்தமிழர் கல்வெட்டுகள், சமணப்படுகை மற்றும் தொல்பொருள் தளங்கள் பாதுகாக்கப்படுதல்.
- எம்.சேண்ட் தயாரிப்பு தொழிலினை முறைப்படுத்த ஒரு புதிய கொள்கை உருவாக்குதல்

மாவட்ட தொழில் மையம்

வ. எண்	அறிவிப்பு	விவரம்	கருத்துக்கள்
1	2022-2023 பட்ஜெட் உரையின் போது மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மை அமைச்சரால் வெளியிடப்பட்ட அறிவிப்பு	குறு கூட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தைத் தொடங்குதல்	கோரை பாய்களுக்கு முசிறியிலும், ஆயத்த ஆடைகளுக்கு துறையூரிலும் குறு கூட்டமைப்புகளை கண்டறியும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொலைநோக்குத் திட்டங்கள்





புவியியல் & சுரங்கத்துறை

- கல்குவாரிகள், மணல் குவாரிகள் மற்றும் இதர கனிமங்களின் வருவாயினை அதிகப்படுத்துதல்.
- ஏலம் விடுதல் மற்றும் அரசின் வருவாயினை அதிகப்படுத்துதல் தொடர்பாக புதிய குவாரிகளை கண்டறிதல்.
- கனிம வளங்கள் அதிகம் நிறைந்த புலங்களை கண்டறிந்து அவற்றை தமிழ்நாடு டெண்டர் வெளிப்படைத்தன்மை சட்டம் மற்றும் விதிகளின் மூலம் ஏலம் விட்டு குவாரி அமைத்தல்.
- இணையதள வாயிலாக நடைச்சீட்டு வழங்குதல்.
- கனிமம் ஏற்றிச் செல்லும் வாகனங்களில் GPS கருவி பொருத்தி கண்காணித்தல்.
- நடப்பில் உள்ள 34 குவாரி குத்தகை புலங்களை Drone மூலம் கண்காணித்தல்.

மாவட்ட தொழில் மையம்

- திருச்சி மாவட்டத்தில் தொழிற்சாலைகளுக்கு தேவையான சிதைவுறாச் சோதனை கூட வசதிகளை ஏற்படுத்துதல்.
- திருச்சி மாவட்டத்தில் ஏற்றுமதியை ஊக்குவிக்க ஒற்றைச் சாளர இணையதளம் அமைத்தல்.
- ஒவ்வொரு தொகுதி மட்டத்திலும் மைக்ரோ கிளஸ்டர் உருவாக்கப்படுதல் மற்றும் பாரம்பரிய தொழில்களை மீட்டெடுத்தல்.
- இராணுவ உபகரணங்களின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள உற்பத்தி நிறுவனங்களுக்காக சிறப்பு தொழில் பூங்காக்கள் அமைக்கப்படுதல். மேலும், அந்தத் தொழில்களுக்கு சிறப்பு மானியங்கள் வழங்கப்படுதல்.
- ஒவ்வொரு தொகுதியிலும் தொழிற்பேட்டைகள் அமைக்கப்படுதல்.
- திருநங்கைகளின் வேலைவாய்ப்பை உறுதி செய்வதற்காக, ஒவ்வொரு வணிக நிறுவனத்திலும் அவர்களுக்கு குறைந்தபட்சம் 10% இட ஒதுக்கீடு வழங்கப்படுதல். மேலும் அந்த நிறுவனங்களுக்கு சிறப்பு மானியங்கள் வழங்கப்படுதல்.
- மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பை உறுதி செய்வதற்காக, ஒவ்வொரு தொழில் நிறுவனத்திலும் அவர்களுக்கு குறைந்தபட்சம் 10 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படுதல். மேலும் அந்த நிறுவனங்களுக்கும் சிறப்பு மானியங்கள் வழங்கப்படுதல்.

தொலைநோக்குத் திட்டங்கள்

புவியியல் மற்றும் சுரங்கத்துறை


1. திருச்சிராப்பள்ளி (மேற்கு) வட்டம், கோ.அபிஷேகபுரம் கிராமத்தில் புறம்போக்கு நிலத்தில் பயனற்ற கல் குவாரி ஒன்று கண்டறியப்பட்டுள்ளது. அதை மழைநீர் சேகரிப்பு, குடிநீர் ஆதாரம் மற்றும் விவசாயப் பயன்பாட்டிற்கு மாற்றுதல்.
2. திருச்சிராப்பள்ளி, பொன்மலை கோட்டம், எடமலைப்பட்டிபுதூர் இராமசந்திர நகர் பகுதியில் கைவிடப்பட்ட கல்குவாரி ஒன்று கண்டறியப்பட்டுள்ளது. அதை (சாணிப்பாறை குளம்) மழைநீர் சேகரிப்பு, குடிநீர் ஆதாரம் மற்றும் விவசாயப் பயன்பாட்டிற்கு மாற்றுதல்.
3. திருவெறும்பூர் வட்டம், வாழவந்தான்கோட்டை கிராமத்தில் 4 பயனற்ற கல்குவாரிகள் பட்டா நிலங்களில் கண்டறியப்பட்டுள்ளது. அதை மழைநீர் சேகரிப்பு, குடிநீர் ஆதாரம் மற்றும் விவசாயப் பயன்பாட்டிற்கு பயனுள்ள அமைப்புகளாக மாற்றுதல்.

கனிம வள நிதியினை குவாரியினால் பாதிப்புக்குள்ளான பகுதிகளுக்கு பயன்பெறும் வகையில் செயல்பட உள்ள பணிகள் :

4. திருச்சிராப்பள்ளி மாவட்டம், மகாத்மா காந்தி அரசு மருத்துவமனையில் கொரனா வைரஸ் தடுப்பு பணிக்கு 2.50 இலட்சம் மதிப்பீட்டில் 1000 LPM PSA (NHAI) ஆலையிலிருந்து Main Manifold அறை வரை ஆக்சிஜன் குழாய் (O2) இணைத்தல்
5. திருச்சிராப்பள்ளி மாவட்டம், மகாத்மா காந்தி அரசு மருத்துவமனையில் கொரனா வைரஸ் தடுப்பு பணிக்கு 2.50 இலட்சம் மதிப்பீட்டில் 350 LPM PSA ஆலையிலிருந்து கண் வார்டு Manifold அறைக்கு அருகில் ஆக்சிஜன் குழாய் (O2) இணைத்தல்
6. திருச்சிராப்பள்ளி மாவட்டம், மகாத்மா காந்தி அரசு மருத்துவமனையில் கொரனா வைரஸ் தடுப்பு பணிக்கு 2.50 இலட்சம் மதிப்பீட்டில் 300 LPM PSA ஆலையிலிருந்து RH Manifold அறைக்கு அருகில் வரை ஆக்சிஜன் குழாய் (O2) இணைத்தல்
7. திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரசு கலைக்கல்லூரியில் 14.00 இலட்சம் மதிப்பீட்டில் பாதுகாப்பு சுவர் கட்டுதல்
8. திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் வட்டத்தில் உள்ள நவல்பட்டு கிராமத்தில் 22.00 இலட்சம் மதிப்பீட்டில் அண்ணாநகர் 100 அடி சாலை பாலம் பகுதியில் காட்டாறு வலது கரையில் நுழைவாயில் கட்டுதல்.
9. திருவெறும்பூர் வட்டம் துவாக்குடி நகராட்சி பகுதியில் ரூ.500 இலட்சம் மதிப்பீட்டில் ராவுத்தான் மேடு அரசு ஆரம்பப்பள்ளி, அரசினர் மேல்நிலைப்பள்ளி, பாரதிதாசன் தெரு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, முத்துராமலிங்கத் தேவர் சாலை அரசு ஆரம்பபள்ளிகளின் கட்டிடங்களை சரிசெய்து புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கும் மற்றும் பள்ளிக்கு தேவையான கழிப்பறை வசதி உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளும் செய்தல்.

மாவட்ட தொழில் மையம்

1. திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டப் பகுதிகளில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் தொடர்பான திட்ட அறிக்கைகள், புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் உள்ளடக்கி நவீன நூலகம் (Digital Library) அமைக்கப்படுதல்.
2. திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டப் பகுதிகளில் தொழிற்சாலைகளுக்கான சிதைவுறா சோதனை கூட வசதிகளை (Non-Destructive Testing Lab) ஏற்படுத்துதல்.
3. திருவெறும்பூர் வட்டப் பகுதிகளில் ஏராளமான பொறியியல் தொடர்பான தொழிற்சாலைகள் அமைந்துள்ளதால் இராணுவ உபகரணங்கள் உற்பத்தியில் ஈடுபடும் தொழில் நிறுவனங்களுக்கு சிறப்பு தொழிற்பூங்கா அமைக்கப்படுதல். சிறப்பு தொழில்பூங்காவில் அமைக்கப்படும் தொழில் நிறுவனங்களுக்கு கூடுதலாக சிறப்பு மானியம் வழங்கப்படுதல்.
4. திருவெறும்பூர் வட்டத்தில் 500 நபர்கள் அமரக்கூடிய நவீன கருத்தரங்கம் கட்டப்படுதல். பல்வேறு தொழில்கள் தொடர்பான திட்ட அறிக்கைகளுக்கான புத்தகங்கள் மற்றும் பத்திரிக்கைகளுடன் கூடிய நவீன நூலகமும் அரங்கத்திற்குள் அமைக்கப்படுதல்.
5. திருவெறும்பூர் தேவராயநேரியில் நரிக்குறவ மக்கள் அதிகம் வசிப்பதால் அவர்கள் தயாரிக்கும் கைவினைப் பொருட்களுக்கென குறுக்கூட்டமைப்பு (Micro Cluster) ஏற்படுத்தி அக்குறுக் கூட்டமைப்பில் உள்ள நபர்களுக்கு வங்கி மூலம் மானியத்துடன் கூடிய சிறப்பு நிதி உதவி வழங்கி அவர்களால் தயாரிக்கப்படும் கைவினைப் பொருட்களை அரசு சார்ந்த பூம்புகார், காதி மற்றும் கிராமத் தொழில்கள் விற்பனை அங்காடிகளில் மொத்தமாக கொள்முதல் செய்து விற்பனை செய்தல்.
6. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள நலிந்த மகளிருக்கு கடனுதவி வழங்கி வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்
7. ஸ்ரீரங்கம் வட்டத்தில் புதிதாக தொழில் தொடங்கும் தொழில் முனைவோர்களை பாதுகாக்கும் மற்றும் ஊக்குவிக்கும் வண்ணம் வணிக மேம்பாட்டு மையங்களை அமைத்தல்
8. துறையூர் பகுதிகளில் புதிய தொழிற்சாலை ஏற்படுத்துதல்.
9. மண்ணச்சநல்லூர் பகுதியில் புதிதாக ஒரு SIPCOT மையம் அமைத்தல், இளைஞர்களுக்கென தொழில்பயிற்சி கூடங்கள் புதிதாக ஏற்படுத்துதல்
10. முசிறி, துறையூர் மற்றும் மண்ணச்சநல்லூர் ஆகிய தொகுதிகளை மையமாக கொண்டு தாத்தையங்கார்பேட்டை பகுதியில் சிப்காட் தொழிற்சாலை அமைத்தல்.





உட்கட்டமைப்பு ஏற்படுத்துதல்

மாவட்ட தொழில் மையம்

500 பேர் அமரக்கூடிய நவீன கருத்தரங்கம் கட்டப்பட வேண்டும். பல்வேறு தொழில்கள் தொடர்பான திட்ட அறிக்கைகளுக்கான புத்தகங்கள் & பத்திரிகை களுடன் கூடிய நவீன நூலகமும் மண்டபத்திற்குள் அமைக்கப்படுதல் இந்த அரங்கில் ஏற்றுமதியாளர்களுக்கு பயிற்சி அளிக்க பயிற்றுனர்கள் வழங்கப்படுதல்.

இதன் மூலம் திருச்சி மாவட்டத்திலேயே ஏற்றுமதி தொடர்பான கூட்டங்கள், திட்டம் தொடர்பான கருத்தரங்குகள், கண்காட்சிகள், வாங்குபவர்கள் விற்பனையாளர் சந்திப்புகள் மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் நடத்தப்படுதல்.

மனித வளம் மேம்படுத்துதல்

மாவட்ட தொழில் மையம்


திருச்சி மாவட்டத்தில் தொழிற்சாலைகளுக்கு தேவையான லேப் டெஸ்டிங் வசதிகள் மற்றும் ஏற்றுமதிக்கான கருத்தரங்கு திறம்படச் செயல்பட தேவையான பணியாளர்கள் நியமிக்கப்படுதல்

- உதவி இயக்குநர் - 1
- உதவியாளர்கள் - 2
- தட்டச்சர் - 1
- தொழில்நுட்ப வல்லுநர் - 1

மாவட்ட அளவிலான குழு

மாவட்ட தொழில் மையம்

பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) (Quarterly)	மாவட்ட ஏற்றுமதி மேம்பாட்டுக்குக் குழு (DEPC) (Quarterly)	குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மாவட்ட ஒற்றை சாளரக்குழு (Monthly)





திருச்சிராப்பள்ளி மாவட்டம்

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்

தொலைநோக்குத் திட்டங்கள்

அடிப்படை விவரங்கள்

தொழிற்சாலைகள் விவரங்கள்

வ. எண்	தொழிற்சாலைகளின் வகை	தொழிற்சாலைகளின் எண்ணிக்கை	தொழிலாளர்களின் எண்ணிக்கை
1	அரிசி ஆலைகள்	165	2107
2	இன்ஜினியரிங் பேப்ரிகேஷன்	297	3511
3	இண்டஸ்ட்ரியல் கேசஸ்	04	128
4	சமையல் எண்ணெய்	03	343
5	கோரைப்பாய்	29	608
6	பால் பதனிடல்	10	769
7	செங்கல்சூளை	21	447
8	ஆட்டோ மொபைல்ஸ்	21	642
9	பேரீட்ச்சம்பழம்	07	641
10	கேஸ் சிலிண்டர்ஸ்	04	172
11	LPG கேஸ்	03	260
12	ஸ்டீல் ரோலிங்	12	492
13	எலக்ட்ரானிக்ஸ்	02	328
14	கிரஷர்	04	51
15	பிரிண்டிங்	20	1945
16	ஸ்பின்னிங் மில்	04	841
17	சோலார் பவர் பிளாண்ட்	02	73
18	சிமெண்ட்	02	1763
19	சுகர்ஸ்	01	256
20	இரயில் பணிமனை	01	4127
21	இராணுவ தளவாடங்கள்	04	2707
22	வெடிமருந்து	02	750
23	இதர தொழிற்சாலைகள்	302	15381
	கூடுதல்	921	36173

தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்

1. கூடுதல் இயக்குநர் அலுவலகம் - 1
2. இணை இயக்குநர் அலுவலகம் - 1
3. துணை இயக்குநர் அலுவலகம் - 3

மனித வளம்


வ. எண்	அலுவலர்கள்	ஒப்பளிக்கபடும் பணியிடம்	பணியில் உள்ளோர்	காலிப் பணியிடம்
1	கூடுதல் இயக்குநர்	1	1	-
2	இணை இயக்குநர்	1	1	-
3	துணை இயக்குநர்	4	2	2
4	உதவி இயக்குநர்	4	-	4
5	அமைச்சு பணியாளார்கள்	29	20	9
	கூடுதல்	39	24	15

துறை சார் திட்டங்கள்

1. தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர தொழிலாளர் நல சட்டங்களின் கீழ் தொழிற்சாலைகளில் ஆய்வு பணிகள்
2. பதிவு பெறாத தொழிற்சாலைகள் ஆய்வு
3. குழந்தை தொழிலாளர்கள் ஆய்வு
4. பேரபாய தொழிற்சாலைகளில் அகவளாக அவசரகால மாதிரி ஒத்திகைகள்
5. உரிமம் மற்றும் ஒப்புதல்கள் இணைய வழியில் அளித்தல்
6. அழுத்தக்கலன்கள் சோதனை
7. பட்டாசு தொழிற்சாலைகளில் கூட்டாய்வு
8. பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கங்கள் மற்றும் பயிற்சி வகுப்பு
9. தொழிற்சாலைகளில் விபத்து தொடர்பான புலனாய்வுகள்
10. தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர தொழிலாளர் நல சட்டங்களின் அமலாக்கம் தொடர்பான நீதிமன்ற பணிகள்

அறிவிப்புகள்

1. தொழிலாளர் துறை இணைய முகப்பு மற்றும் வலைதளம் (Website) மறு சீரமைத்தல்
2. பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நிபுணர்களைக் கொண்டு விழிப்புணர்வு முகாம்களை நடத்துதல்
3. பட்டாசு உற்பத்தியில் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு காணொளிக் காட்சியினை தயாரித்து சமூக ஊடகங்கள் வாயிலாக வெளியீடு செய்தல்





தொலைநோக்குத் திட்டங்கள்

- ஆய்வுகளை அதிகப்படுத்தி குழந்தை தொழிலாளர் அற்ற மாவட்டத்தை உருவாக்குதல்
- ஆய்வுகளின் மூலம் தொழிலாளர்களின் பாதுகாப்பை மேம்படுத்துதல்
- தொழிற்சாலைகளில் அதிக அளவில் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தி விபத்துகளை தடுத்தல்
- தொழிலாளர்களின் நலன் மற்றும் உடல் நலனை சட்ட அமலாக்கம் மூலம் உறுதிப்படுத்துதல்

VISION TRICHY

தொழிலாளர் நலன்
மற்றும் திறன்
மேம்பாட்டுத் துறை



உட்கட்டமைப்பு ஏற்படுத்துதல்

மாவட்ட அளவிலான ஆய்வு அலுவலர்களாகிய துணை இயக்குநர்களுக்கு ஆய்வு பணிகளுக்கு நான்கு சக்கர வாகன வசதி வேண்டுதல்

மனிதவளம் மேம்படுத்துதல்

”D” பிரிவு காலிப்பணியிடங்கள் நிரப்ப வேண்டுதல்



திருச்சிராப்பள்ளி மாவட்டம்

தொழிலாளர் நலத்துறை

தொலைநோக்குத் திட்டங்கள்

VISION TRICHY

தொழிலாளர் நலத்துறை

அடிப்படை விபரங்கள்

வ. எண்	விபரம்	பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை	பதிவு செய்யப்படவுள்ளவர்களின் எண்ணிக்கை (தோராயமாக)
1	தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்	55308	79386
2	தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியம்	6865	27298
3	தமிழ்நாடு ஓவியர் தொழிலாளர்கள் நல வாரியம்	45	1782
4	தமிழ்நாடு சமையல் தொழிலாளர்கள் நல வாரியம்	1582	2596
5	தமிழ்நாடு வீட்டுப்பணியாளர்கள் நல வாரியம்	3945	5286
6	தமிழ்நாடு தீயணைப்பு (ம) தீப்பெட்டி தொழிலாளர்கள் நல வாரியம்	3	938
7	தமிழ்நாடு காலணித் தொழிலாளர்கள் நல வாரியம்	57	1583
8	தமிழ்நாடு பொற்கொல்லர் தொழிலாளர்கள் நல வாரியம்	555	1386
9	தமிழ்நாடு முடித்திருத்துவோர் தொழிலாளர்கள் நல வாரியம்	799	1983
10	தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர்கள் நல வாரியம்	957	2692
11	தமிழ்நாடு கைத்தறி தொழிலாளர்கள் நல வாரியம்	665	5068
12	தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியம்	32	492
13	தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர்கள் நல வாரியம்	654	2357
14	தமிழ்நாடு விசைத்தறி தொழிலாளர்கள் நல வாரியம்	28	1315
15	தமிழ்நாடு தெருவோர வியாபாரி மற்றும் தெருக்கடைகள் தொழிலாளர்கள் நல வாரியம்	13276	32695
16	தமிழ்நாடு தையல் தொழிலாளர்கள் நல வாரியம்	18066	30680
17	தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்கள் நல வாரியம்	632	5687
18	தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம்	5200	8659
	மொத்தம்	108669	211883

மேற்கண்ட நல வாரியங்களில் 2,11,883 (தோராயமாக) தொழிலாளர்கள் பதிவு செய்யப்படாமல் உள்ளனர்.



மனித வளம்

வ. எண்	பதவி	ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள்	பணியில் உள்ளோர் எண்ணிக்கை	காலிபணியிட எண்ணிக்கை
1	கூடுதல் தொழிலாளர் ஆணையர்	1	1	-
2	தொழிலாளர் இணை ஆணையர்	1	-	1
3	தொழிலாளர் துணை ஆணையர்	1	-	1
4	தொழிலாளர் உதவி ஆணையர்	2	1	1
5	தொழிலாளர் துணை ஆய்வாளர்கள்	3	3	-
6	தொழிலாளர் உதவி ஆய்வாளர்கள்	8	7	1
7	முத்திரை ஆய்வாளர்கள்	3	3	-
8	கண்காணிப்பாளர்கள்	6	5	1





துறை சார் பணிகள்

- நிர்வாகம் மற்றும் தொழிலாளர்களுக்கு இடையே ஏற்படும் தொழிற்தகராறுகளுக்கு சமரசம் மூலம் தீர்வு காணுதல்.
- மத்திய மற்றும் மாநில அரசுகளால் உருவாக்கப்பட்டுள்ள பல்வேறு தொழிலாளர் நலத்திட்டங்களை அமல்படுத்துதல்.
- அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு பல்வேறு சமூக பாதுகாப்பு திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் அவர்களின் சமூக பொருளாதார நிலையினை உயர்த்துதல்.
- அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து குழந்தை தொழிலாளர் முறையினை முற்றிலும் ஒழித்து திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை குழந்தை தொழிலாளர் இல்லாத மாவட்டமாக அறிவித்தல்.
- வருவாய்த் துறையுடன் இணைந்து கொத்தடிமை தொழிலாளர்களை மீட்டல் மற்றும் மறுவாழ்வு அளித்தல்.
- சட்டமுறை எடையளவு சட்டம் 2009 மற்றும் பொட்டலபொருட்கள் விதிகள் 2011 அமல்படுத்துவதன் மூலம் நுகர்வோர் நலன் பாதுகாத்தல்.
- தொழிற்சங்கங்களை பதிவு செய்து அவர்களின் கோரிக்கைகளை நிர்வாகத்தரப்புக்கு கொண்டு சென்று சமரசம் செய்தல்.
- வீட்டுப்பணியாளர், சுமைத்தூக்குவோர், தெருவோர வியாபாரிகள் உள்ளிட்ட அமைப்புசாரா மற்றும் கட்டுமானத் தொழிலாளர்கள் அடங்கிய மொத்தம் 17 நல வாரியங்களின் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள தொழிலாளர்களை உறுப்பினர்களாக சேர்த்து நலத்திட்டங்களை அவர்களுக்கு சென்றடைய செய்தல்.
- பணியிடத்தின் போது ஏற்படும் மரணம் மற்றும் ஊனத்திற்கு ஏற்ப தொழிலாளர்களுக்கு இழப்பீடு அளிப்பதை உறுதிசெய்தல்.
- மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதலின் பேரில் மத்திய அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் அமைப்புசாரா தொழிலாளர்களுக்காக eShram Portal ஆகஸ்ட் 2021ல் உருவாக்கியுள்ளது. இவ்வலைதளத்தில் தமிழகத்தில் 79,90,000 உறுப்பினர்கள் பதிவு செய்துள்ளார்கள். திருச்சி மாவட்டத்தில் 3,20,000 உறுப்பினர்கள் பதிவு செய்துள்ளார்கள். (தமிழக அளவில் 4 வது இடம்)

அறிவிப்புகள்

2021 - 22

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியம்

விபரம்	கல்வி உதவித் தொகை	விபத்து மரணம்	இயற்கை மரணம்
வழங்கப்பட்ட தொகை	படிப்பு வாரியாக உயர்த்தப்பட்டுள்ளது	1,00,000/-	20,000/-
உயர்த்தப்பட்ட தொகை		2,00,000/-	50,000/-

தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் நலவாரியம்

	விபத்து மரணம்	இயற்கை மரணம்
வழங்கப்பட்ட தொகை	1,00,000/-	20,000/-
உயர்த்தப்பட்ட தொகை	1,25,000/-	30,000/-

தமிழ்நாடு ஆட்டோ தொழிலாளர்கள் நலவாரியம்

	விபத்து மரணம்	இயற்கை மரணம்
வழங்கப்பட்ட தொகை	1,00,000/-	20,000/-
உயர்த்தப்பட்ட தொகை	2,00,000/-	50,000/-

2022 - 23

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியம்

விபரம்	மகப்பேறு உதவிதொகை	திருமணம்		கல்வி உதவிதொகை
		ஆண்	பெண்	
வழங்கப்பட்ட தொகை	6,000/-	3,000/-	5,000/-	படிப்பு வாரியாக உயர்த்தப் பட்டுள்ளது
உயர்த்தப்பட்ட தொகை	18,000/-	20,000/-	20,000/-	

